தமிழன்

THAMILAN தமிழன்

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர் : 02, இதழ் : 441 பிலவ வருடம், தை மாதம் 16ஆம் திகதி சனிக்கிழமை (29.01.2022) ஹிஜ்ரி - 1443, ஜமா அத்துல் ஆகிர் - 25, 0115886187 - பக்கங்கள் 12 விலை ரூ.30

அடையாள அட்டை கேட்ட இலங்கையர் சுட்டுக்கொலை:

நண்பியுடன் வந்தவரால் டோஹாவில் நடந்த பயங்கரம்

02 பக்கம்

வெளிநாட்டமைச்சின் கொன்சியூலர் விவகாரங்களுக்கு தொலைபேசி

02 பக்கம்

நீதி அமைச்சின் செயற்றிட்டத்துக்கு எதிர்ப்பு: உறவினர்கள் கொட்டும் மழையில் போராட்டம்!

பாதுகாப்பாக அழைத்துச் செல்லப்பட்டார் அமைச்சர் அலி சப்ரி

• வன்னி செய்தியாளர்

நீதி அமைச்சர் அலி சப்ரி தலைமையிலான நீதி அமைச்சின் நீதிக்கான அணுகல் நடமாடும் சேவைக்கு எதிர்ப்புத் தெரிவித்து மழையில் நனைந்தபடி காணாமலாக்கப்பட்டோரின் உறவினர்கள் முல்லைத்தீவு மாவட்ட செயலகம் முன்பாக நேற்று (28) போராட்டமொன்றை மேற்கொண்டனர்.

நீதி அமைச்சின் கீழுள்ள அனைத்து திணைக்களங்களும் இணைந்து முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தில் 'நீதிக்கான அணுகல்' என்ற தலைப்பில் நடமாடும் சேவை முகாம் ஒன்றை நேற்று (28) நடத்தியது. காணாமல் போனோருக்கான அலுவலகம் மற்றும் இழப்பீட்டுக்கான அலுவலகமும் இணைந்து முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தில் இந்த நடமாடும் சேவை நடைபெற்றது.

02 பக்கம்

பயங்கரவாதத் தடைச் சட்ட முழு நீக்கமே அவசியம்!

த.மு.கூ. தலைவர் மனோ கணேசன் எம்.பி.

பயங்கரவாதத் தடைச் சட்டம் மீள் திருத்தப்படும் வர்த்தமானி பிரகடனம் வெளியாகியுள்ளது. ஐ.நா. மனித உரிமைகள் ஆணையகத்தை, ஐரோப்பிய ஜீ.எஸ்.பியை நோக்கி, அரசு சார்பாக வெளிவிவகார அமைச்சர் பீரிஸ், வேறு வழியில்லாமல் இதை அறிவித்துள்ளார். எனினும், இதுவும் ஒரு முன்னேற்றம்தான். ஆனால், இச்சட்டம் முழுமையாக நீக்கப்பட வேண்டும் என்ற எமது குரலை நாம் நிறுத்திவிடக்கூடாது.

அதேவேளை, "உள்நாட்டில் எம்முடன் பேசுங்கள். இந்தியா, அமெரிக்கா, ஐ.நா. என வெளி சக்திகளுடன் பேசாதீர்கள்" என எமக்கு வகுப்பு எடுத்து அறிவுரை கூறுபவர்களுக்கும்...

02 பக்கம்

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணிக்கு பொய் சொல்லக்கூட தகுதியில்லை

சித்தார்த்தன் யாழில் காரசாரம்

அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸின் யாப்பில் ஒற்றையாட்சியே ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. எனினும், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியென்ற பெயரில் வேறு அரசியல் சுலோகங்களை கூறிக்கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு பொய் சொல்வதற்குக்கூட தகுதியில்லையென காட்டமாக தெரிவித்துள்ளார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக்கட்சியான புளொட் அமைப்பின் தலைவர் த.சித்தார்த்தன்.

02 பக்கம்

துருக்கி வெளிவிவகார அமைச்சர் இலங்கைக்கு

உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு நேற்று இலங்கை வந்தடைந்த துருக்கி வெளிவிவகார அமைச்சர் மெவ்லூத், இராஜாங்க அமைச்சர் தாரக்க பாலசூரிய மற்றும் இலங்கைக்கான துருக்கிய தூதுவர் ஆகியோரால் கட்டுநாயக்க விமான நிலையத்திலிருந்து அழைத்துவரப்பட்டபோது எடுக்கப்பட்ட படம்.

இலங்கை மின்சார சபையின் எதிர்காலம் நிலையற்றது

பிட்ச் ரேட்டிங் தர மதிப்பீட்டு நிறுவனம் சுட்டிக்காட்டு

இலங்கை மின்சார சபையின் எதிர்காலம் நிலையற்றது என சர்வதேச தர மதிப்பீட்டு நிறுவனமான பிட்ச் ரேட்டிங் தெரிவித்துள்ளது.

இலங்கை மின்சார சபை அதன் அண்மைய மதிப்பீட்டின் மூலம் எதிர்மறையான நிலைக்கு தரமிறக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் ஏற்பட்டுள்ள டொலர் நெருக்கடியை அடுத்து இலங்கை...

Sri Lanka IPP rating outlook cut by Fitch over CEB payment delays

02 பக்கம்

13ஆவது திருத்தத்தில் தமிழருக்குத் தீர்வில்லை; ஆனால், சிறு பிரச்சினைகளுக்கு முடிவுண்டு

விக்னேஸ்வரன் எம்.பி. சுட்டிக்காட்டு

13ஆவது திருத்தம் மூலம் தமிழ் மக்களின் பிரச்சினைகள் தீர்க்கப்படாது. ஆனால், சிறிய சிறிய அலுவல்களை பார்த்துக்கொள்ள முடியும் - என நாடாளுமன்ற உறுப்பினர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

13ஆவது திருத்தம் தொடர்பில் தமிழ்க் கட்சிகள், இந்தியப் பிரதமர் மோடிக்கு அனுப்பிவைத்துள்ள கடிதம் தொடர்பில் தெளிவுபடுத்தும் ஊடகவியலாளர் சந்திப்பு யாழ்ப்பாணத்தில் நேற்று நடைபெற்றது. இதன் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். மேலும் அவர் தெரிவிக்கையில், எம்மிடம் ஒரு முனை மடிந்த மண்வெட்டி உள்ளது.

02 பக்கம்

தடைகளை மீறி அனுஷ்டிக்கப்பட்ட கொக்கட்டிச்சோலை படுகொலை நினைவேந்தல்

நாடாளுமன்ற உறுப்பினர் கருணாகரம் முன்னெடுப்பு



07 பக்கம்

பூஸ்டர் ஏற்றிக்கொள்ளாதோருக்கு அபராதம்?

கொவிட் தொற்றுக்கு எதிராக மூன்றாம் தடுப்பூசியை பெற்றுக்கொள்ளாத நபர்களுக்கு அபராதம் விதிப்பது தொடர்பில் சுகாதார அமைச்சின் சட்டப் பிரிவு ஆராய்ந்து வருவதாக வைத்தியர் ஹேமந்த தெரிவித்துள்ளார்.

நாட்டின் பொருளாதாரத்தை நிலையாக பேணுவதற்கு, பூரண தடுப்பூசி செலுத்துகை இன்றியமையாத காரணியாக அமைந்துள்ளதாக வைத்தியர் சுட்டிக்காட்டியுள்ளார். நாட்டில் மீண்டும் கொவிட் பரவல் அதிகரித்து வருகின்றது. எனினும், பூஸ்டர்...

02 பக்கம்

கோட்டாபய நினைக்கும் விடயங்களை வடக்கில் நிறைவேற்றும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி

ஈழ மக்கள் புரட்சிகர முன்னணியின் தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன்

• யாழ். நிருபர்

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர் கோட்டாபய அரசாங்கம் நினைக்கும் விடயங்களை வடக்கில் நிறைவேற்றுகிறார்கள் - என ஈழ மக்கள் புரட்சிகர முன்னணியின் தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்திலுள்ள தனியார் விருந்தினர் விடுதியொன்றில்...

02 பக்கம்

உஷ்

முன்னாள் ஜனாதிபதி ஒருவரின் சகோதரர் அவர். தொழிலதிபர். முன்னாள் பிரதமர் ஒருவரின் பெயரை ஒத்த அந்த தொழிலதிபர், சம்பிக்க ரணவக்கவின் புதிய அமைப்புக்கு நிதியுதவிகளை செய்துள்ள விடயம் வெளியில் கசிந்துள்ளது.

ஏற்கனவே ஆளுங்கட்சியின் முக்கிய தலைவர்களுடன் நெருக்கமான உறவைக்கொண்டுள்ள அந்த தொழிலதிபர் இப்படியான மறைமுக நடவடிக்கைகளை மேற்கொண்டிருப்பது தொடர்பில் ஆளுங்கட்சி மேலிடத்தில் அதிருப்தி ஏற்பட்டுள்ளதாம்.

கமெண்ட் கந்தர்..

ஆளாளுக்கு இப்படி பேசிப் பேசி கஜேந்திரகுமார் கட்சிக்கு இலவச விளம்பரம் குடுக்கிறாங்கள்...

கொவிட் தொடர்பான புதிய வழிகாட்டல்கள்

கொவிட்-19 நோயாளர்கள் மற்றும் நோயாளர்களுடன் தொடர்புகளை பேணியவர்கள் மேற்கொள்ளவேண்டிய நடவடிக்கைகள் குறித்த வழிகாட்டல்கள் வெளியிடப்பட்டுள்ளன.

புதிய பிறழ்வுடன் மாற்றமடைந்துள்ள வைரஸின் செயற்பாடு, தடுப்பூசி திட்டத்தின் முன்னேற்றம் மற்றும் கொரோனா தொற்று தொடர்பிலான விஞ்ஞானபூர்வ தரவுகளை அடிப்படையாகக்கொண்டு புதிய வழிகாட்டல்கள் வெளியிடப்பட்டுள்ளன.

இதற்கிணங்க, முழுமையாக தடுப்பூசியை செலுத்திக்கொண்ட ஒருவர் கொவிட் நோயாளருடன் தொடர்பில் இருந்த முதல் நபராக இருந்தாலும், நோய் அறிகுறிகள் காணப்படாவிடின் வீட்டில் தனிமைப்படுத்தலில்...

02 பக்கம்

ஊடகவியலாளர்களுக்கு எதிரான வன்முறைகள் மற்றும் ஊடக நிறுவனங்கள் மீதான தாக்குதல்களுக்கு நீதி கோரி, ஊடக அமைப்புகளினால் 'கறுப்பு ஜனவரி' நேற்று (28) அனுஷ்டிக்கப்பட்டது. இதன்படி, கொழும்பு கோட்டை ரயில் நிலையத்திற்கு முன்பாக கறுப்பு ஜனவரியை அனுஷ்டிக்கும் வகையில், உயிரிழந்த மற்றும் பாதிக்கப்பட்ட ஊடகவியலாளர்களின் படங்கள் காட்சிப்படுத்தப்பட்டிருந்தன.

LK Newspapers Vibe Community

தேசிய நல்லிணக்கத்திற்கான மத்திய நிலையங்களை அமைக்க தீர்மானம்

நாட்டிலுள்ள ஒவ்வொரு பல்கலைக்கழகத்திலும் தேசிய நல்லிணக்கத்திற்கான மத்திய நிலையம் ஒன்றை அமைக்க பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு தீர்மானித்துள்ளது.

இதற்கான அனைத்து சட்ட ஏற்பாடுகளும் விடயதானங்களும் ஏற்கனவே தயாரிக்கப்பட்டுள்ளதாக ஆணைக்குழுவின் தலைவர் சிரேஷ்ட பேராசிரியர் சம்பத் அமரதுங்க தெரிவித்தார்.

இளம் சமுதாயத்தினருக்கிடையே ஒற்றுமையை ஏற்படுத்தும் நோக்கில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு பல்கலைக்கழகத்திலும் தேசிய நல்லிணக்க நிலையத்திற்கு பொருத்தமான பணிப்பாளர் ஒருவரை நியமிக்குமாறு உபவேந்தர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை, வவுனியா பல்கலைக்கழகம் எதிர்வரும் 11ஆம் திகதி ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையில் திறந்து வைக்கப்படவுள்ளதாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் சிரேஷ்ட பேராசிரியர் சம்பத் அமரதுங்க தெரிவித்தார்.

நாட்டின் முதலாவது நல்லிணக்க நிலையமும் அங்கு நிறுவப்படவுள்ளது.

வெளிநாட்டமைச்சின்...

கொன்சியூலர் விவகாரங்கள் பிரிவில் நடைமுறைகளை நெறிப்படுத்தி, நாளாந்தம் பிரிவுக்கு வருகை தரும் பொதுமக்களுக்கு உதவும் நோக்கத்துடன், மின்னணு ஆவண சான்றளிப்பு முறைமை (eDAS) மூலம் சான்றிதழ்கள் / ஆவணங்களை சான்றளித்துக்கொள்ள விரும்பும் பொதுமக்களுக்காக நடைமுறையிலுள்ள நேரடியாக வருகை தரும் நடைமுறைக்கும் மேலதிகமாக அரசாங்க தகவல் நிலையத்துடன் (1919 அழைப்பு நிலையம்) இணைந்து நியமன முன்பதிவு முறைமையொன்றை அமைச்சு அறிமுகப்படுத்தியுள்ளது.

கொன்சியூலர் விவகாரங்கள் பிரிவிலிருந்து ஆவண அங்கீகாரச் சேவைகளைப் பெறுவதற்காக ஏற்கனவே அமைக்கப்பட்டுள்ள இணையவழி சந்திப்பு முறைமையின் மூலம் முன்பதிவு செய்வதற்கான அனுகல் இல்லாத பொதுமக்களுக்கு இந்த நியமன முன்பதிவு முறைமை முக்கியத்துவம் அளிக்கும்.

இந்த புதிய முறைமையின் கீழான சேவைகள் பெற நேரத்தை முன்பதிவுசெய்ய விரும்புபவர்கள் எந்த தொலைபேசி வலையமைப்பிலிருந்தும் 1919 என்ற இலக்கத்திற்கு அழைப்பதன் மூலம், குறித்த அழைப்பிற்கு பதிலளிக்கும் முகவர் வழங்கும் வழிமுறைகளைப் பின்பற்றுவதனூடாக நேரத்தை முன்பதிவு செய்துகொள்ள முடியும்.

வருகை தரும் வாடிக்கையாளர்கள் மற்றும் இணையவழி சந்திப்பு முறைமைகளைப் பெற்றுக்கொள்வதற்கான நடைமுறைகள் தற்போதும் காணப்படுகின்றமையினால், க.பொ.த. சாதாரண மற்றும் உயர்தரப் பரீட்சை சான்றிதழ்களை சான்றளித்துக்கொள்வதனைத் தவிர்த்து, கொன்சியூலர் சேவைகளைப் பெறுவதற்காக யாழ்ப்பாணம், மாத்தறை, கண்டி, திருகோணமலை மற்றும் குருநாகலிலுள்ள பிராந்திய கொன்சியூலர் அலுவலகங்களுக்குச் செல்லுமாறு பொதுமக்கள் கேட்கப்படுகின்றனர்.

தமிழ்த் தேசிய...

யாழில் நேற்று (28) இடம்பெற்ற தமிழ்த் தேசிய கட்சிகள் நடத்திய செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு தகவல் தெரிவிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

பொய் சொல்வதற்குக்கூட ஒரு தகுதி வேண்டும். ஆனால், அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸினருக்கு பொய் சொல்லக்கூட தகுதியில்லை. அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் கட்சியினர் தேர்தல் திணைக்களத்தில் சமர்ப்பித்துள்ள கட்சி யாப்பில் சமஷ்டியோ, இரு தேசம் ஒரு நாடு என அவர்கள் இப்போது குறிப்பிடுவது எதுவும் கிடையாது. அவர்கள் சமர்ப்பித்துள்ள யாப்பில் ஒற்றையாட்சியையே குறிப்பிட்டுள்ளனர்.

தேர்தல் திணைக்களத்திற்கு 75 ரூபா செலுத்தினால் கட்சிகளின் யாப்புகளை எடுத்து பார்க்கலாம். நாம் 75 ரூபா செலுத்தி தமிழ் காங்கிரஸின் யாப்பைப் பெற்று பார்த்தோம்.

அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸின் யாப்பில் ஒற்றையாட்சியை குறிப்பிட்டுவிட்டு, மக்களுக்கு வேறொன்றைக் கூறி, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியென்ற பெயரை வைத்து, சமஷ்டி, ஒரு நாடு இரு தேசமென கூறிக்கொண்டிருக்கிறார்கள். ஆனால், கட்சியின் உத்தியோகபூர்வ நிலைப்பாடு ஒற்றையாட்சிதான். 77 வருடமாக அப்படித்தான் உள்ளது. ஆகவே, மக்கள் இந்த விடயத்தில் மிக கவனமாக இருக்கவேண்டும்.

மற்றைய தமிழ்த் தேசியக் கட்சிகள் அனைத்தும் யாப்பில் உள்ளமைக்கும், மக்களிடம் சொல்வதற்குமிடையில் வித்தியாசமிருக்கவில்லை. இலங்கை தமிழரசுக் கட்சி உருவாகிய காலம் முதல் சமஷ்டியைத்தான் வலிறுத்தி வருகிறது. ஏனைய இயக்கங்கள் அனைத்தும் மக்களின் சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் தனிநாடு கோரினர். இப்போது சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் சமஷ்டியை கோருகின்றன. மக்களும் சமஷ்டிக்காகவே வாக்களிக்கிறார்கள்.

ஆகவே, நாம் அந்த இலக்கிலிருந்து தடம் மாற எந்தக் காரணமுமில்லை. மக்கள் அதனை உணர்ந்துகொள்ள வேண்டும். அரசியலமைப்பில் உள்ளதையே அமுல்படுத்தக் கோரியுள்ளோம்.

மக்கள் மத்தியில் பொய் சொல்வதற்கு தகுதி வேண்டும். 13ஆவது திருத்தச் சட்டத்தினை நாங்கள் தீர்வாக ஏற்றுக்கொண்டுள்ளோம் என கஜேந்திரகுமார் அணியினர் பொய்ப் பிரசாரம் மேற்கொண்டுள்ளார்கள்.

அவ்வாறு பொய்ப் பிரசாரம் மேற்கொள்பவர்கள் என்ன தீர்வினை முன்வைக்கப் போகிறார்கள் அல்லது தீர்வு விடயத்தில் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள் என்று கூறமுடியுமா? ஏன் அவர்கள் இவ்வாறு செயற்படுகிறார்கள் என தெரியவில்லை.

அத்தோடு கஜேந்திரகுமார் அணியினர் எதிர்வரும் மாகாண சபைத் தேர்தலில் போட்டியிடவுள்ளார்கள். யாரை முதலமைச்சராக முற்படுத்துவது என்பது தொடர்பில் கட்சிக்குள் போட்டி நிலை காணப்படுகின்றது.

அவ்வாறான நிலையில் ஏன் இவ்வாறு மக்களை குழப்பும் செயற்பாட்டில் ஈடுபடுகிறார்கள் என நான் கேட்க விரும்புகின்றேன். அவர்களது கட்சியின் தேர்தல் விஞ்ஞாபனம் - அதாவது, தேர்தல் ஆணையாளருக்கு அனுப்பியுள்ள தேர்தல் விஞ்ஞாபனத்தில் அவர்கள் என்ன தீர்வினை முன் வைத்திருக்கிறார் என்று யாருக்கும் தெரியுமா?

அவர்களுடைய தீர்வு ஒற்றையாட்சிக்குள் அமைகின்றது. எனவே, மக்களை இனியும் அவர்கள் ஏமாற்றிக்கொண்டிருக்க முடியாது. மக்களுக்கு நன்கு விளங்கும் இவர்கள் பொய்யுரைக்கின்றார்களென்று - என தெரிவித்துள்ளார்.

கோட்டாபய...

நேற்று இடம்பெற்ற தமிழ்த் தேசியக் கட்சிகளின் தலைவர்கள் நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே சுரேஷ் பிரேமச்சந்திரன் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

13ஆவது திருத்தச் சட்டத்தினை நாம் தமிழரின் தீர்வாக ஒருபோதும் ஏற்கவில்லை. அதனை ஏற்கப் போவதும் இல்லை. ஆனால், தற்போதுள்ள பூகோள அரசியல் நிலையில் தமிழ் மக்களை பாதுகாக்க - அதாவது, வடக்கில் இராணுவமயமாக்கல், சிங்கள குடியேற்றங்களைத் தடுத்து தமிழ் மக்களின் உரிமையை பாதுகாப்பதற்காக ஏற்கனவே இந்தியாவின் தலையீட்டில் ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட அரசியல் சாசனத்திலுள்ள 13ஆவது திருத்தச் சட்டத்தை அமுல்படுத்துமாறு கோரியே 6 தமிழ்க் கட்சிகள் ஒன்றிணைந்து இந்தியப் பிரதமருக்கு கடிதம் ஒன்றின் மூலம் அனுப்பி வைத்துள்ளோம்.

அந்தக் கடிதத்தின் தொடர்ச்சியாக நாம் டில்லி சென்று இந்தியப் பிரதமரைச் சந்தித்து அடுத்தகட்டமாக முன்னெடுக்கப்படவேண்டிய விடயங்கள் தொடர்பில் நடவடிக்கை மேற்கொள்ளவுள்ளோம்.

தமித் தேசிய மக்கள் முன்னணியினர் மக்கள் மத்தியில் போலிப் பிரசாரத்தினை மேற்கொள்வது போல் நாங்கள் 13ஆவது திருத்தச்சட்டத்தை தீர்வாக ஏற்றுக்கொள்ளவில்லை; ஏற்றுக்கொள்ளப் போவதுமில்லை.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர் கோட்டாபய அரசாங்கம் எதை செய்ய நினைக்கிறார் களோ அதனை வடக்கில் நிறைவேற்றுகிறார்கள். அதாவது, தற்போது அரசின் நிகழ்ச்சி நிரலுக்கு வடக்கின் முகவர்களாக செயற்படுகின்றார்கள் என்றுதான் கூறவேண்டும்.

குறிப்பாக, ஜனாதிபதித் தேர்தலில் கோட்டாபய போட்டியிடும்போது வடக்கு மக்களின் வாக்களிப்பு எனக்குத் தேவையில்லை. ஆனால், தேர்தலை புறக்கணியுங்கள் என்று கூறியிருந்தார். அதனையே அந்தத் தேர்தலின்போது தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர் செய்திருந்தார்கள்.

அதாவது, அந்தத் தேர்தலை புறக்கணிக்குமாறு கூறியிருந்தார்கள். தற்போது கோட்டாபய 13ஆவது திருத்தம் தேவையில்லை. அபிவிருத்தி மட்டும் போதும் எனக் கூறுகின்றார், அதேபோல் அரசாங்கத்தில் உள்ளவர்களும் அதனைக் கூறுகின்றார்கள். தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினரும் வடக்கில் அந்தக் கோரிக்கையினையே செயற்படுத்துகின்றார்கள்.

கட்சியிலிருந்து மணிவண்ணன் பிரிந்து சென்றுவிட்டதால் தமது கட்சியை மணிவண்ணன் கொண்டுசென்று விடுவார் என்பதற்காக கட்சியில் உள்ளோருக்கு ஏதாவது ஒரு வேலையை கொடுக்கவேண்டும்தானே. அதற்காகத்தான் 13ஆவது திருத்தச் சட்டத்தினை சவப்பெட்டியில் வைத்து மக்கள் மத்தியில் ஊர்வலமாக கொண்டுசெல்கிறார்கள். அவர்கள் தமது கட்சியை காப்பாற்றுவதற்காக இவ்வாறு போலி பிரசாரத்தினை மேற்கொள்கிறார்கள்.

மக்களை ஏமாற்றி கோட்டாபய அரசாங்கத்தின் நிகழ்ச்சிநிரலுக்கு ஏற்ப தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர் செயற்படுகின்றார்கள். எனவே, மக்கள் போலிப் பிரசாரங்களை நம்பக்கூடாது - என்றார்.

பயங்கரவாதத்...

இலங்கை அரசியலை இன்னமும் சரியாக புரிந்துகொள்ளாத அரசியல் குழந்தைகளுக்கும் இது சமர்ப்பணம் - என தமிழ் முற்போக்குக் கூட்டத் தலைவர் மனோ கணேசன் கூறியுள்ளார்.

வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ், இலங்கை வெளிநாட்டுத் தூதர்களை அழைத்து, பயங்கரவாதத் தடைச் சட்ட திருத்தங்கள் பற்றி அறிவித்துள்ளமை மற்றும் இதுபற்றிய வர்த்தமானி வெளியாகியுள்ளமை தொடர்புகளில் மனோ கணேசன் எம்.பி. மேலும் கூறியதாவது:

என்னைப் பொறுத்தவரையில் திருத்தம் அல்ல, இச்சட்டம் முழுமையாக நீக்கப்பட வேண்டும். அதற்கான காலம் இன்று கனிந்துவிட்டதென நினைக்கிறேன். அவசர நிலைமைகளுக்கு சாதாரண சட்டங்களே போதும். அதி அவசரம் ஏற்படுமானால், சடுதியாக இந்தச் சட்டத்தை மீள உடன் கொண்டும் வரலாம். ஒரேநாளில் அரசியலமைப்புத் திருத்தங்களையே கொண்டு வந்தவர்களுக்கு இது பெரிதல்ல.

ஆனால், இன்று சட்ட புத்தகங்களிலிருந்து இச்சட்டம் முழுமையாக அகற்றப்படுவது அவசியம். ஏனெனில், போர் முடிந்த பத்து ஆண்டுகளான பிறகும் அமுலில் இருக்கும் இச்சட்டம், ஏற்கனவே கணிசமான துன்புறுத்தல்களை தந்துகொண்டுதான் இருக்கிறது. குறிப்பாக, தமிழ் பேசும் மக்களை நோக்கி இது பாய்கிறது.

ஆனால், இதில் நடப்பு ராஜபக்ஷ அரசை மட்டும் குறை கூற முடியாது. இந்த அரசு மட்டுமல்ல, எந்த இலங்கை அரசும் முழுமையாக இச்சட்டத்தை நீக்க முன்வரவில்லை. இந்தச் சட்டத்தால் பெரிதும் பாதிக்கப்படும் தமிழ், முஸ்லிம் மக்களை பிரதிநிதித்துவம் செய்யும் அரசியல்வாதிகள் சிலரே இச்சட்டம் முழுமையாக நீக்கக்கூடாது என கொடி பிடிக்கிறார்கள்.

எனினும், அரசுக்கு அரசு இச்சட்டம் அமுல்செய்வதில் வேறுபாடு உண்டு. எமது நல்லாட்சியில் அது அப்பட்டமாகத் தெரிந்தது. எமது ஆட்சியின்போது இந்த சட்டம் கவனமாகத்தான் பயன்படுத்தப்பட்டது. எமது அரசு காலத்தில், இது தொடர்பான பல்வேறு கலந்துரையாடல்களில் நான், தேசிய ஒருமைப்பாடு அமைச்சராக கலந்துகொண்டுள்ளேன்.

1979ஆம் ஆண்டின் 48ஆம் இலக்க பயங்கரவாதத் தடைச் சட்டம் மீள திருத்தப்படுகிறது என்ற வெளிவிவகார அமைச்சரால், ஜனவரி 21ஆம் திகதி வெளியிடப்பட்ட இந்த வர்த்தமானி பிரகடனம், எமக்கு ஓர் அடிப்படை உண்மையை மீளவும் எடுத்துரைக்கிறது.

ஐ.நாவோ, அமெரிக்காவோ, ஐரோப்பிய யூனியனோ, இந்தியாவோ, ஏதாவது வெளிச்சக்திகள் சொன்னால்தான் இந்த அரசு கொஞ்சமாவது நகர்கிறது. இதுதான் இங்கே கவனிக்கப்பட வேண்டிய முக்கிய விடயம்.

"உள்நாட்டில் எம்முடன் பேசுங்கள். இந்தியா, அமெரிக்கா, ஐ.நா. என சக்திகளுடன் பேசாதீர்கள்" என எமக்கு வகுப்பெடுத்து அறிவுரை கூறுபவர்களுக்கும், இலங்கை அரசியலை இன்னமும் சரியாக புரிந்துகொள்ளாத அரசியல் குழந்தைகளுக்கும் இது சமர்ப்பணம் - என்றார்.

நீதி அமைச்சின்...

இந்நிலையில் காணாமல்போனோருக்கான அலுவலகம் கண்துடைப்பு நாடகம். அதன் அலுவலகத்தை நிராகரிக்கிறோம் என்ற கோரிக்கையை முன்னிறுத்தி முல்லைத்தீவு வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களின் உறவுகள் மழைக்கு மத்தியில் கவணயீர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

காணாமலாக்கப்பட்டவர்களின் உறவுகள் போராட்டம் மேற்கொண்டிருந்த நிலையில், போராட்டம் மேற்கொண்டோரை சந்தித்த நீதி அமைச்சின் அலுவலக அதிகாரி ஒருவர் மாவட்ட செயலகத்தில் இடம்பெறும் நடமாடும் சேவை முகாமுக்கு வருகைதருமாறும் அமைச்சரோடு கலந்துரையாடுமாறும் அழைப்பு விடுத்தார். இதனை நிராகரித்த போராட்டக்காரர்கள் எதிர்வரும் ஜெனீவா அமர்வை சமாளிப்பதற்கு அரசாங்கம் மேற்கொண்டுள்ள இந்த கண்துடைப்பு நடவடிக்கையில் எமக்கு நம்பிக்கை இல்லை. எமக்கு நட்டஈடோ மரணச்சான்றிதழோ தீர்வாகாது. குறைந்தபட்சம் இராணுவத்திடம் கையளித்தோருக்காவது என்ன நடந்தது என்ற பதிலையாவது இந்த அரசாங்கம் சொல்லவேண்டும். அதனைக்கூட இந்த அரசாங்கம் செய்யாது. இந்த அரசின்மீதோ நீதித்துறை மீதோ எமக்கு நம்பிக்கை இல்லை - என முல்லைத்தீவு வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களின் உறவினர்களின் சங்க இணைப்பாளர் மரியசுரேஷ் ஈஸ்வரி நீதி அமைச்சின் அதிகாரியிடம் தெரிவித்தார் .

இந்நிலையில், முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தில் இடம்பெற்ற OMP அலுவலகத்தின் அமர்வில் வெறும் நான்கு பேர் மாத்திரம் கலந்துகொண்டு தங்கள் கருத்துகளை தெரிவித்ததோடு, அதில் கலந்துகொண்டவர்களில் மூன்று காணாமலாக்கப்பட்டோரின் உறவுகள் இழப்பீடோ நட்டஈடோ தமக்கு வேண்டாம் எனவும் உறவுகளுக்கு என்ன நடந்தது என்ற நீதி விசாரணையே வேண்டும், தமது உறவுகளே வேண்டும் என நீதி அமைச்சரிடம் தெரிவித்தனர்.

நண்பகல்வரை OMP அலுவலக அமர்வுகள் இடம்பெற்று நிறைவடைந்த நிலையில், அமைச்சர் அலி சப்ரி தலைமையிலான அணியினர் காணாமலாக்கப்பட்டோரின் உறவுகளின் போராட்டம் இடம்பெற்ற இடமான பிரதான வாயில் வழியாக வெளியேறாது மாற்று பாதையூடாக விரைவாக வெளியேறி சென்றனர். அமைச்சருக்கு கடும் பாதுகாப்பு வழங்கப்பட்டிருந்தது.

LKNewspapersViberCommunity

சதொச வழக்கில் ஜோன்ஸ்டன் உள்ளிட்ட மூவர் விடுதலை

சதொச ஊழியர்கள் 153 பேரை வேறு நடவடிக்கைகளில் ஈடுபடுத்தியதாக தொடரப்பட்ட வழக்கில் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ உள்ளிட்ட மூன்று சந்தேகநபர்களை விடுதலைசெய்ய கொழும்பு பிரதம நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோவிற்கு எதிராக இலஞ்ச ஊழல் சட்டத்தின்கீழ் ஐந்து வழக்குகளை இலஞ்ச, ஊழல் விசாரணை ஆணைக்குழு தாக்கல் செய்திருந்ததுடன், அமைச்சர் மேல்நீதிமன்றில் விடுத்த கோரிக்கையை பரிசீலித்த நீதிமன்றம் அவரை மூன்று வழக்குகளிலிருந்து விடுவித்துள்ளது.

இலஞ்ச, ஊழல் ஆணைக்குழுவின் மூன்று ஆணையாளர்களின் முறையான அனுமதியின்றி இந்த வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டதாக நீதவான் சுட்டிக்காட்டியுள்ளார்.

புலமைப்பரிசில் பரீட்சை வினாத்தாள்கள் தாமதமாக வழங்கப்பட்டு அநீதி இழைக்கப்பட்டதாக தெரிவித்து, திஸ்ஸமஹாராம ஜனாதிபதி கல்லூரி மாணவர்களின் பெற்றோர்கள் நேற்று (28) திஸ்ஸமஹாராம தெபரவெவ வீதியில் எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

பூஸ்டர்...

தடுப்பூசியை பெற்றுக்கொள்வதில் மக்கள் ஆர்வமின்றி இருக்கின்றனர்.

உலகெங்கிலுமுள்ள பிற நாடுகளில் பூஸ்டர் தடுப்பூசியைப் பெறாதவர்களுக்கு அபராதம் விதிக்கப்படுகிறது.

அந்தவகையில், பூஸ்டர் தடுப்பூசியைப் பெற்றுக்கொள்ளாத இலங்கையர்களிடம் அபராதம் அறவிடப்படுமாயின், அதனை எந்த நிறுவனத்தின் ஊடாக மேற்கொள்வதென்பது குறித்து ஆராயப்படும் என்றும் வைத்தியர் ஹேமந்த ஹேரத் மேலும் தெரிவித்தார்.

13ஆவது திருத்தத்தில்...

புது மண்வெட்டி வருவதற்கு காலம் எடுக்கும்.

இந்நிலையில், இந்த பழைய மண்வெட்டியை பயன்படுத்தியென்றாலும் சிறிய வேலையை செய்யவேண்டும். புதிய மண்வெட்டி வரும் வரும் என்று இருப்பதில் அர்த்தம் இல்லை.

இதைப்போலத்தான் 13ஆவது திருத்தம். தமிழ் மக்களின் பிரச்சினைகள் இதன்மூலம் தீர்க்கப்படாது. ஆனால், சிறிய சிறிய அலுவல்களை பார்த்துக்கொள்ள முடியும் என்றுதான் கூறுகின்றோம்.

நாம் இப்போதிருக்கும் நிலையில் இராணுவ ஆட்சி வடக்கு கிழக்கில் அதிகரிக்கிறது. சிங்களக் குடியேற்றம் நடைபெறுகிறது. நாம் ஒன்றுமே செய்ய முடியாமால் நிற்கிறோம். இதற்கு இருக்கும் சட்டம் ஒன்றை நடைமுறைக்கு கொண்டுவர வேண்டும் - என்றார்.

இலங்கை மின்சார...

மின்சார சபையின் 50 வீத மின் உற்பத்தியானது புதை படிவ எரிபொருளை அடிப்படையாகக் கொண்டமையால், இலங்கை மின்சார சபை பாரிய சவாலை எதிர்நோக்கியுள்ளதாக அறிக்கை கூறுகிறது.

கடனாளர்களுக்கு கடன்கள் விரைவில் திருப்பிச் செலுத்தப்படும் என்று நம்புவதாகவும், சில கடன்களுக்கு நிதியளிப்பதில் கவனம் செலுத்தப்பட வேண்டும் என்றும் கூறுகிறது.

இந்தக் குறைப்பு காரணமாக இலங்கை மின்சார சபை வெளிநாட்டு நிறுவனங்களுடனான கொடுக்கல் வாங்கல்களில் சில சிக்கல்களை எதிர்கொள்ளவேண்டியிருக்கும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

அடையாள...

டோஹாவின் அல்-வாப் பகுதியிலுள்ள குடியிருப்பு வளாகத்தில் பாதுகாவலராக பணியாற்றிய இலங்கையர் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார். கடந்த புதன்கிழமை (26) இந்தச் சம்பவம் நடந்தது.

கட்டாரைச் சேர்ந்த இளைஞன் ஒருவர், தனது பெண் நண்பியுடன் அந்த வளாகத்திற்குள் நுழைய முயன்றுள்ளார். அவரை தடுத்துநிறுத்திய இலங்கையரான பாதுகாவலர், இளைஞனின் அடையாள அட்டையைக் கோரியுள்ளார்.

இதையடுத்து, அங்கிருந்து புறப்பட்டுச் சென்ற கட்டார் இளைஞன், சற்று தாமதமாக வந்து இலங்கையரான பாதுகாவலர் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டார். இதில் இலங்கையர் கொல்லப்பட்டார். இன்னொருவர் காயமடைந்தார். அவர்கள் மீது பலமுறை துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டுள்ளது.

தாக்குதல் நடந்த உடனேயே துப்பாக்கிதாரியை பொலிஸார் கைதுசெய்தனர்.

தாக்குதல் நடத்த பயன்படுத்திய துப்பாக்கி உரிமம் இல்லாதது என்றும், அந்த ஆயுதத்தை அவர் எவ்வாறு பெற்றார் என்பது குறித்து தற்போது விசாரணை நடைபெற்று வருவதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இறந்த பாதுகாப்புக் காவலரான இலங்கையர் மூன்று பிள்ளைகளின் தந்தை எனத் தெரிவிக்கப்படுகிறது. அவரது ஒப்பந்தம் முடிவடைவதால், இந்த ஆண்டின் பிற்பகுதியில் இலங்கை திரும்பவிருந்தார்.

அவரது குடும்பத்தினருக்கு உதவ, அந்தப் பகுதி மக்கள் நிதி திரட்ட ஆரம்பித்துள்ளனர்.

டோஹாவில் துப்பாக்கி வன்முறை சம்பந்தப்பட்ட சம்பவங்கள் மிகவும் அரிதானவை. எனவே, புதன்கிழமை துப்பாக்கிச்சூடு பலரின் கவனத்தை ஈர்த்துள்ளது. இந்த வார தொடக்கத்தில், உலகம் முழுவதும் மொத்தம் 459 நகரங்களை உள்ளடக்கிய "Crime Index by City 2022" அறிக்கையின்படி, கட்டார் தலைநகர் அபுதாபிக்குப் பிறகு உலகளவில் இரண்டாவது பாதுகாப்பான நகரமாக டோஹா தரப்படுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

கொவிட் தொடர்பான...

இருக்க முடியும். சில குழுவினரே முழுமையாக தடுப்பூசிகளை செலுத்திக்கொண்டவர்களாக கருதப்படுகின்றனர்.

இதனடிப்படையில், 20 வயதிற்கு மேற்பட்டோர் இரண்டு தடுப்பூசிகளையும் பெற்றுக்கொள்ள வேண்டும். இரண்டாவது தடுப்பூசியை பெற்று மூன்று மாதங்கள் கடந்தால், பூஸ்டர் தடுப்பூசியை பெற்றுக்கொள்தல் அவசியமாகும்.

இரண்டாவது தடுப்பூசியை பெற்ற ஒருவருக்கு தொற்று ஏற்பட்டால், தொற்று ஏற்பட்ட நாளிலிருந்து ஒரு மாத இடைவெளியில் பூஸ்டர் தடுப்பூசியை பெற்றுக்கொள்ள முடியும்.

மேலும், 16 மற்றும் 19 வயதிற்குட்பட்ட சிறார்கள், இரண்டு தடுப்பூசிகளையும் பெற்று இரண்டு வாரங்களுக்குப் பின்னர் முழுமையாக தடுப்பூசி போடப்பட்டவர்களாகக் கருதப்படுவர்.

12 முதல் 15 வயது வரையிலான சிறுவர்கள் ஒரு தடுப்பூசி ஏற்றப்பட்டு இரண்டு வாரங்களுக்குப் பின்னர் முழுமையாக தடுப்பூசியை பெற்றுக் கொண்டதாகக் கருதப்படுவர்.

இவ்வாறு முழுமையாக தடுப்பூசியை பெற்றுக்கொள்ளாத நோயாளர்களுடன் முதலில் தொடர்புகளை பேணுபவர்கள், 7 நாட்களுக்கு வீட்டில் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட வேண்டும் என்பதுடன், அறிகுறிகள் ஏற்பட்டால் பரிசோதனைக்கு உட்படுத்தப்படுவர்.

எம்.வி. எக்ஸ்பிரஸ் பேர்ள் தீ விபத்துக்கு மேலும் 2.15 மில்லியன் டொலர் இழப்பீடு

எதிர்வரும் சில நாட்களில் கிடைக்குமென கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகாரசபை நம்பிக்கை

எம்.வி. எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் தீப்பற்றியதால் நாட்டுக்கு ஏற்பட்ட பாதிப்புகளுக்காக மேலும் 2.15 மில்லியன் டொலர் இழப்பீடு கிடைக்கவுள்ளதாக கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகார சபை தெரிவித்தது.

எதிர்வரும் சில நாட்களில் இழப்பீட்டுத்தொகை இலங்கைக்கு கிடைக்கும் என சபையின் தலைவர் சட்டத்தரணி தர்ஷனி லஹந்தபுர தெரிவித்தார்.

ஏற்கனவே 3.6 மில்லியன் டொலர் இழப்பீடு கிடைத்ததாக அவர் குறிப்பிட்டார். இரண்டாம் கட்டமாக 2.15 மில்லியன் டொலர் இழப்பீடு கிடைக்கவுள்ளதுடன், மூன்றாவது கட்ட இழப்பீடும் தயாரிக்கப்பட்டுள்ளது.

மூன்றாவது கட்ட இழப்பீட்டுத் தொகை குறித்து அனுமதி கிடைத்தவுடன், சட்டமா அதிபர் ஊடாக கப்பல் நிறுவனத்திற்கு அனுப்புவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

அத்துடன், சுற்றுச்சூழலுக்கு ஏற்பட்ட பாதிப்பு குறித்த மதிப்பீடுகள் இந்நாட்களில் முன்னெடுக்கப்படுவதாக கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகார சபை குறிப்பிட்டது.

இது தொடர்பிலான முதலாவது அறிக்கை, இலங்கையின் நிபுணர்கள் குழுவினால் சட்டமா அதிபருடாக அவுஸ்திரேலியாவின் சட்டத்துறைக்கு அனுப்பப்பட்டுள்ளது.

அவர்களின் ஆலோசனைக்கமைய, குறித்த சுற்றுச்சூழல் தொடர்பான அறிக்கை மேலும் விரிவாக தயாரிக்கப்படவுள்ளது.

இதேவேளை, எம்.வி. எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் தீப்பற்றிய கடற்பிராந்தியத்திற்கு அருகிலுள்ள கொள்கலன்கள் உட்பட கப்பலின் சிதைவுகளில் 70 வீதம் அகற்றப்பட்டுள்ளதாக கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகார சபையின் தலைவர் தர்ஷனி லஹந்தபுர தெரிவித்தார்.

அத்துடன், சிதைவடைந்த கப்பலை மே மாதத்திற்கு முன்னர் அகற்ற திட்டமிடப்பட்டுள்ளதாகவும் கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகார சபையின் தலைவர் மேலும் தெரிவித்தார்.

ஹிஜாஸுக்கு பிணை வழங்க புத்தளம் நீதிமன்றம் மறுப்பு

அதிகார வரம்புக்கு அப்பாற்பட்டதென நீதிபதி தெரிவிப்பு

இருபது மாதங்களுக்கும் மேலாக தடுத்து வைக்கப்பட்டுள்ள சட்டத்தரணி ஹிஜாஸ் ஹிஸ்புல்லாஹ்வுக்கு பிணை வழங்க புத்தளம் மேல் நீதிமன்றம் மறுத்துள்ளது.

சட்டமா அதிபர் சம்மதம் தெரிவித்த போதிலும், அது தனது அதிகார வரம்பிற்கு உட்பட்டது அல்ல என்பதனால் பிணை உத்தரவை புத்தளம் மேல் நீதிமன்ற நீதிபதி நிராகரித்துள்ளார்.

எதிர்வரும் பெப்ரவரி 09ஆம் திகதி மேன்முறையீட்டு நீதிமன்றில் பிணை கோருமாறும் நீதிவான் தரப்பினருக்கு மேலும் தெரிவித்துள்ளார்.

கடந்த 20ஆம் திகதி, சட்டமா அதிபர் திணைக்களம் நிபந்தனைகளுக்குட்பட்டு ஹிஸ்புல்லாஹ்வை பிணையில் விடுவிப்பதில் ஆட்சேபனை இல்லை என்று கூறியிருந்தது.

இந்த வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது, பிரதிவாதிகள் புத்தளம் மேல் நீதிமன்றில் பிணை விண்ணப்பம் செய்தால் மட்டுமே பிணை வழங்கப்படும் என சட்டமா அதிபர் திணைக்களம் மேன்முறையீட்டு நீதிமன்றத்திற்கு அறிவித்துள்ளது.

சட்டத்தரணி ஹிஜாஸ் ஹிஸ்புல்லாஹ் ஏப்ரல் 2020இல் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு, கடந்த 20 மாதங்களுக்கும் மேலாக விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

ஹிஜாஸ் ஹிஸ்புல்லாஹ் மீது பயங்கரவாத தடுப்பு மற்றும் சர்வதேச சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் சட்டத்தின் கீழ் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது.

தற்போதைய அரசாங்கம் விவசாய பாரம்பரியத்தை சீரழித்துள்ளது

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் தம்புள்ளையில் தெரிவிப்பு

மலைநாட்டு கிளர்ச்சி காலத்தில் பலன் தரக்கூடிய பல மரங்கள் அழிக்கப்பட்டதாகவும் காலிங்கன் யுகத்தில் இந்நாட்டின் வரலாற்று பாரம்பரியம் அழிக்கப்பட்டதாகவும் கூறிய எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, தற்போதைய அரசாங்கம் இந்நாட்டின் விவசாய பாரம்பரியத்தை சீரழித்துள்ளதாகவும் குறிப்பிட்டார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் தம்புள்ளை தேர்தல் தொகுதிக்கான கூட்டமொன்று நேற்று (28) தம்புள்ளை நகரில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் உரையாற்றுகையில்,

வெடிப்புகளை நிறுத்துவதாக கூறி ஆட்சிக்கு வந்த அரசாங்கத்தின் கீழ் கையில் எடுக்கும் சமையல் எரிவாயு சிலிண்டர்கள் கூட வெடிக்கும் நிலை ஏற்பட்டுள்ளதாகவும் அதுமாத்திரமின்றி திரவ உர கொள்கலனும் வெடிக்கின்றன என்றும் அவர் குறிப்பிட்டார்.

அது போதாமைக்கு கொண்டுவரப்பட்ட திரவ உரம் பொறுத்துக்கொள்ள முடியாத அளவிற்கு துர்நாற்றம் உடையது என்று கூறிய எதிர்க்கட்சித்தலைவர், துர்நாற்றம் அலரி மாளிகை, ஜனாதிபதி மாளிகை மற்றும் நாடாளுமன்றத்தினால் உணர முடியாது என்றும் தெரிவித்தார்.

பொதுமக்களின் துயரங்களை உணரும் நாடி அரசாங்கத்திற்கு கிடையாது என கூறிய எதிர்க்கட்சித் தலைவர், சீனிமோசடி, எண்ணெய் மோசடி, கொவிட் மோசடி போன்ற பாரியளவிலான ஊழல், மோசடிகளுக்கு அரசாங்கம் பொறுப்பேற்க வேண்டும் என்றும் கூறினார். தற்போது இலங்கையின் ஊழல் விவகாரத்தில் மிகவும் கீழ்தரமானநிலைக்கு நாடு தள்ளப்பட்டுள்ளதாகவும் கூறினார்.

உயர்தரப் பரீட்சை நேர அட்டவணையை இடைநிறுத்துமாறுகோரி நீதிமன்றில் மனு

க.பொ.த. உயர்தரப் பரீட்சை தொடர்பில் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் முன்வைக்கப்பட்டுள்ள நேர அட்டவணையை செயற்படுத்தாமல் இடைநிறுத்துவதற்கு உத்தரவு பிறப்பிக்குமாறு கோரி மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் ரிட் மனுத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

"வினிவித பெரமுண"வின் செயலாளர் நாகானந்த கொடிதுவக்குவினால் இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. 2021ஆம் ஆண்டுக்கான உயர்தரப் பரீட்சை எதிர்வரும் பெப்ரவரி மாதம் 7ஆம் திகதி ஆரம்பிக்கப்படவுள்ளது.

இந்த மனுவின் பிரதிவாதிகளாக கல்வி அமைச்சர் தினேஷ் குணவர்தன, அந்த அமைச்சின் செயலாளர் கபில பெரேரா, பரீட்சை ஆணையாளர் நாயகம் எல்.எம்.டீ.தர்மசேன, தேசிய கல்வி நிறுவனத்தின் பணிப்பாளர் சுனில் ஜே. நவரத்ன ஆகியோரின் பெயர்கள் குறிப்பிடப்பட்டுள்ளன.

கொரோனா தொற்றுப் பரவல் காரணமாக நாட்டிலுள்ள பாடசாலைகள் அனைத்தும் பல மாதங்களாக மூடப்பட்டிருந்தன. அதனால் மாணவர்களின் கல்வி முற்றாக பாதிக்கப்பட்டது. இந்நிலையில், பரீட்சைக்கு தோற்றுவது சிரமமான விடயமாகுமென குறித்த மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

13ஆவது திருத்தத்துக்கு எதிரான பேரணி; கிளிநொச்சியிலிருந்து யாழ்ப்பாணம் வருகை

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினரால் துண்டுப் பிரசுரங்களும் விநியோகம்

13ஆவது திருத்தச் சட்டத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி முன்னெடுத்துள்ள வாகனப் பேரணி நேற்று (28) மதியம் யாழ்ப்பாணத்தை வந்தடைந்தது.

குறித்த வாகனப் பேரணியானது, நேற்றுக் காலை கிளிநொச்சியிலிருந்து ஆரம்பமாகி யாழ்ப்பாணத்தை வந்தடைந்துள்ளது.

இதன்போது தமிழர்களின் அரசியல் அபிலாஷைகளை 13 ஆம் திருத்தத்திற்குள் முடக்கம் மற்றும் சதி முயற்சியை முடியடிக்க அனைத்து தமிழ் மக்களதும் பூரணமான ஆதரவை கோரி துண்டு பிரசுரங்களும் வழங்கப்பட்டன.

வாகனப் பேரணியில் நாடாளுமன்ற உறுப்பினர்களான கஜேந்திரகுமார் பொன்னம்பலம், செல்வராசா கஜேந்திரன், சட்டத்தரணிகளான ந.காண்டீபன், க.சுகாஸ், உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள் மற்றும் கட்சியின் ஆதரவாளர்கள் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

சபாநாயகர் – குமார வெல்கமவிற்கு கொரோனா

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவிற்கு நேற்று (28) கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதனையடுத்து, அவர் சுயத்தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, நாடாளுமன்ற உறுப்பினர் குமார வெல்கமவிற்கும் நேற்று (28) கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. இதனையடுத்து, அவரும் சுய தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.



வார வெளியீட்டின் இலவச இணைப்பிதழாக

LK Newspapers Viber Community

தமிழன்
THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

இல. 91, விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42.
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 077 172 1880
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com

2022, ஜனவரி 29ஆம் திகதி, சனிக்கிழமை

இலங்கையின் நேர்மையின்மை!

வெளிநாட்டு அமைச்சின் கேட்போர் கூடத்தில் இராஜதந்திரிகளுடன் கலந்துரையாடலொன்றை நடத்திய வெளிநாட்டு அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ், பெப்ரவரி இறுதி வாரத்தில் ஆரம்பமாகவுள்ள ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் எதிர்வரும் 49ஆவது கூட்டத்தொடருக்கு முன்னதாக இலங்கையின் மனித உரிமைகள் மற்றும் நல்லிணக்கம் குறித்த முன்னேற்றம் தொடர்பான தகவல்களைப் பகிர்ந்திருக்கிறார்.

பொறுப்புக்கூறல், நீதி மறுசீரமைப்பு மற்றும் அர்த்தமுள்ள நல்லிணக்கம் ஆகியவற்றை நோக்கமாகக்கொண்டு உள்நாட்டு நிறுவனங்களின் செயற்பாடுகளினூடாக இலங்கை அரசாங்கம் கணிசமான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாக இங்கு தெரிவித்த வெளிநாட்டு அமைச்சர் பீரிஸ், 43 வருடங்களின் பின்னர் சர்வதேச நியதிகள் மற்றும் சிறந்த நடைமுறைகளுக்கமைவாக பயங்கரவாதத் தடைச் சட்டத்தைக் கொண்டுவரும் நோக்கத்துடன் திருத்தப்பட்டு வருவதாக இதன்போது குறிப்பிட்டார்.

உத்தேசத் திருத்தங்கள் அடங்கிய சட்டமூலத்தை வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கும் அதன்பின்னர் இறுதி அங்கீகாரத்திற்காக நாடாளுமன்றத்தில் சட்டமூலத்தை சமர்ப்பிப்பதற்கும் அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்துள்ளதாக குறிப்பிட்ட அவர், பல மாதங்களாக மேற்கொள்ளப்பட்ட நீண்ட கலந்துரையாடலின் பின்னர் பயங்கரவாதத் தடைச் சட்டம் திருத்தப்பட்டு வருவதாக விளக்கமளித்தார்.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் முக்கிய திருத்தங்களில் தடுப்புக்காவல் உத்தரவு, கட்டுப்பாட்டு உத்தரவு, நீதித்துறை மீளாய்வு உத்தரவுகளை வெளிப்படையாக அங்கீகரித்தல் தொடர்பான பிரிவுகளில் திருத்தங்களை மேற்கொள்ளுதல், நீண்டகால தடுப்புக்காவலில் வைக்கப்படுவதைத் தவிர்ப்பதற்காக குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் மீதான வழக்குகளை விரைவாகத் தீர்த்தல், சுதந்திரத்துக்கு இடையூறு விளைவிக்கும் பிரிவுகளை இரத்துச்செய்தல், நீதிவான்கள் மற்றும் நீதித்துறை மருத்துவ அதிகாரிகளை அணுகுவதற்கான விதிகளை வெளிப்படுத்துதல் மற்றும் அறிமுகப்படுத்துதல், தடுப்புக்காவலிலுள்ள காலத்தில் துஷ்பிரயோகம் மற்றும் சித்திரவதைகளைத் தடுத்தல், குடும்பத்துடன் தொடர்புகொள்வதற்கான உரிமை, நீண்டகால கைதிகளுக்கு பிணை வழங்குதல் மற்றும் வழக்குகளை நாளாந்தம் விசாரணை செய்தல் போன்ற பிரிவுகளிலான திருத்தங்கள் உள்ளடங்கும்.

நீண்டகாலமாக தடுத்துவைக்கப்பட்டுள்ளவர்கள் தொடர்பில் பாதுகாப்பு அமைச்சருக்கு ஆலோசனை வழங்குவதற்கு பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் 13ஆவது பிரிவின்கீழ் ஆலோசனை சபையொன்றை ஸ்தாபிப்பதையும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார். பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் தடுப்புக்காவல் உத்தரவு அல்லது கட்டுப்பாட்டு உத்தரவு பிறப்பிக்கப்பட்ட எவருக்கும் அந்த உத்தரவை மறுபரிசீலனை செய்யக் கோருவதற்கான வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

மேலும், 2021ஆம் ஆண்டு ஜூன் மாதம் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் தண்டனை அனுபவித்துவந்த 16 விடுதலைப் புலி உறுப்பினர்களுக்கு ஜனாதிபதி மன்னிப்பு வழங்கப்பட்டதுடன், பயங்கரவாதச் சட்டத்தின் கீழான குற்றச்சாட்டின்கீழ் நீண்டகாலமாக நீதிமன்றக் காவலிலுள்ள கைதிகளை விடுதலைசெய்வதற்கான சட்ட மற்றும் நிர்வாக நடைமுறைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அதன்படி, 2022 ஜனவரி 13 நிலைவரப்படி மேலும் 13 பேர் விடுதலைசெய்யப்பட்டனர். பயங்கரவாதத் தடைச் சட்டத்தின்கீழ் சட்ட மா அதிபரால் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஹிஜாஸ் ஹிஸ்புல்லா தொடர்பான வழக்கின் சமீபத்திய முன்னேற்றங்கள் குறித்தும் வெளிநாட்டு அமைச்சர் இங்கு குறிப்பிட்டுள்ளார். குற்றஞ்சாட்டப்பட்டவர்களுக்கு பிணை வழங்குவதை எதிர்க்கப்போவதில்லை என சட்ட மா அதிபர் மேன்முறையீட்டு நீதிமன்றில் அறிவித்துள்ளார். தொல்பொருள் பாரம்பரிய முகாமைத்துவம் தொடர்பான ஜனாதிபதி செயலணி தொடர்பில் தமிழ் மற்றும் முஸ்லிம் சமூகங்களின் பிரதிநிதிகள் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் இங்கு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் கருத்து வெளியிட்டுள்ள தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன் பயங்கரவாதத் தடைச் சட்டம் மீள் திருத்தப்படும் வர்த்தமானி பிரகடனம் வெளியாகியுள்ளது. ஐ.நா. மனித உரிமைகள் ஆணையகத்தை, ஐரோப்பிய ஜிஎஸ்பியை நோக்கி அரசு சார்பாக வெளிவிவகார அமைச்சர் பீரிஸ், இதை வேறு வழியில்லாமல் அறிவித்துள்ளார். எனினும், இதுவும் ஒரு முன்னேற்றம்தான். ஆனால், இச்சட்டம் முழுமையாக நீக்கப்பட வேண்டும் என்ற எமது குரலை நாம் நிறுத்திவிடக்கூடாது. என்னைப் பொறுத்தவரையில், திருத்தம் அல்ல, இச்சட்டம் முழுமையாக நீக்கப்பட வேண்டும். அதற்கான காலம் இன்று கனிந்துவிட்டது என நினைக்கிறேன். அவசர நிலைமைகளுக்கு சாதாரண சட்டங்களே போதும். அதி அவசரம் ஏற்படுமானால், சடுதியாக இந்தச் சட்டத்தை மீள உடன் கொண்டும் வரலாம். ஒரேநாளில் அரசியலமைப்புத் திருத்தங்களையே கொண்டு வந்தவர்களுக்கு இது பெரிதல்ல என சுட்டிக்காட்டியுள்ளார்.

மனோ கணேசன் கூறுவதில் ஆழ்ந்த நியாயம் இருக்கிறது. அரசியலுக்கு அப்பால் நின்று சில விடயங்களை இலங்கை தொடர்பில் கூறவேண்டியுள்ளது. இலங்கை அரசாங்கம் தற்போது பொருளாதார நெருக்கடிக்குள் உழன்றுகொண்டிருக்கின்றது. அதற்கு உலக நாடுகளின் உதவிகள் தேவை. அதற்குமுன்னர் மனித உரிமைகள் விடயத்தில், பொறுப்புக்கூறலில் தன்னை ஜனநாயகவாதியாக காட்டிக்கொள்ளவேண்டிய தேவை கொழும்புக்கு இருக்கிறது.

கடந்த பல வருடங்களாக பொறுப்புக்கூறலில், மனித உரிமைகளை உறுதிப்படுத்தும் விடயத்தில் இலங்கை அரசு உலக நாடுகளின் - சர்வதேச அமைப்புகளின் ஆலோசனைகளையும், அறிவுரைகளையும் புறந்தள்ளியே செயற்பட்டுவந்தது. இப்போது எல்லா பக்கமும் இறுகி நிற்பதால் சில விடயங்களை செய்யாவிட்டாலும் அவற்றை செய்ய முயல்வதாகவாவது காட்டிக்கொள்ள வேண்டிய தேவை கொழும்பிற்கு எழுந்துள்ளது. இதனால்தான் நீதியமைச்சு விசேட நடமாடும் சேவைகளை வடக்கில் ஆரம்பித்திருக்கிறது. புதிய அரசியலமைப்பு குறித்து அமைச்சர்களின் திருவாய்கள் மலர்கின்றன. சமத்துவம், சமவுரிமை பற்றியெல்லாம் பேச்சுகள் எழுகின்றன.

ஜெனீவா மனித உரிமைகள் பேரவை கூட்டத்தொடர் முடிந்ததும், இலங்கை பொருளாதார நிலை கொஞ்சம் மேம்பட்டதும் மீண்டும் இலங்கை பழைய நிலைமைக்குத் திரும்பிவிடும். புதிய அரசியலமைப்பு வரும்வேளை அதில் பல விடயங்களுக்காக பௌத்த பிக்குமாரும், இனவாத அமைப்புகளும் எதிர்ப்பினைத் தெரிவித்து வீதிக்கு இறங்கலாம். இப்போதுள்ள நிலைமையை சமாளிக்க ஒப்புக்கு சப்பாணி கட்டுகிறது இலங்கை. மற்றும்படி வெளிநாட்டமைச்சரின் கருத்துகள் அரசின் உண்மையான - நேர்மையான கருத்துகள் அல்ல. இது வெளிநாட்டு இராஜதந்திரிகளுக்கும் தெரியும்.

மீண்டும் வேண்டும் மிதிவண்டி பயன்பாடு

மனிதனின் அறிவியல் கண்டுபிடிப்புகளில் நெருப்பும் சக்கரமும் மிகவும் முக்கியமானவை. இவை நம்முடைய அறிவியல் முன்னேற்றம் மேம்பட அடிப்படையாக விளங்கின. முக்கியமாக மிதிவண்டியை கண்டுபிடிக்க சக்கரங்கள் மிகவும் உதவியாக இருந்தன.

மிதிவண்டி நமது முன்னோர்களின் அன்றாட வாழ்வில் தவிர்க்கமுடியாத போக்குவரத்து சாதனமாக இருந்தது. எனவே, சர்க்கரை வியாதி, உயர் இரத்த அழுத்தம் போன்ற நோய்கள் அவர்களை அண்டவில்லை. அவர்களின் அன்றாட வாழ்வே உடல் உழைப்பைச் சார்ந்திருந்தது.

தற்போது ஒவ்வொரு மனிதனும் காலைமுதல் மாலைவரை இயந்திரத்தனமாக தன்னுடைய வாழ்க்கையை நடத்தி வருகிறான். ஓய்வும் பொழுதுபோக்கும் எவருக்கும் வாய்ப்பதில்லை. குழந்தைகள் கூட குறைந்த வயதிலேயே பாடசாலைகளில் சேர்க்கப்பட்டு விளையாடுவதற்கான வாய்ப்பினை இழந்து நிற்பது வேதனைக்குரியது.

கொரோனா வைரஸின் பாதிப்பும் தொடர்கதையாகி, நமது அன்றாட பிழைப்புக்கு பெரிய சவாலாக மாறி வருகின்றது. வருமானத்துக்கு வழியில்லாத நிலையில் சிக்கனம் பற்றியும், சேமிப்பு பற்றியும் ஒவ்வொரு தனிமனிதனும் சிந்திக்கவேண்டிய தருணம் இது.

பெற்றோல், டீசல் போன்ற எரிபொருள் செலவுகள் தனிநபரின் வருமானத்தில் கணிசமான அளவை விழுங்குகின்றன. இதைத் தவிர்ப்பதுவும் குறைப்பதுவும் நமது உடனடி நடவடிக்கையாக மாற வேண்டும். ஆனால், வாலிபர் முதல் வயோதிபர் வரை நடப்பதென்பதை முற்றிலும் மறந்துவிட்டனர். மிதிவண்டியையும் மறந்துவிட்டனர். அருகாமையில் நடந்து போகும் தூரத்திலுள்ள கடைக்குக்கூட எரிபொருள் வீணாவது பற்றி கவலைப்படாமல் இருசக்கர வாகனங்களில் சென்று வருவது கவலைக்குரியது.

ஒரே வீட்டில் இருசக்கர வாகனங்கள் பல இருப்பதைத் தவிர்க்க வேண்டும். வீட்டுக்கு ஒரு இருசக்கர வாகனம் போதும் என்ற எண்ணமாவது ஏற்பட வேண்டும். அதன் பயன்பாட்டை அனைவரும் பகிர்ந்துகொள்ள வேண்டும். திருமணம் போன்ற நிகழ்வுகளில் கூட இருசக்கர வாகனம் நன்கொடையாக கேட்கப்படும், கொடுக்கப்படும் சடங்கு மாறவேண்டும். வாரத்தில் இரண்டு நாட்கள் செலவில்லா நாட்கள் என்பதை நடைமுறைப்படுத்தினால், மாதத்தில் எட்டு நாட்கள் செலவுகள் இல்லாமல் கணிசமான பணத்தை ஒவ்வொரு குடும்பமும் சேமிக்க முடியும்.

இந்நிலையில், வீட்டில் அனைவரும் பயன்படுத்தக்கூடிய மிதிவண்டி பயன்பாடு மீண்டும் உயிர் பெறவேண்டும். இதனால் வீட்டில் வாகன எரிபொருள் செலவைத் தவிர்த்து, கணிசமான அளவு பணத்தை சேமிக்க முடியும். காற்றில் மாசு தன்மை குறையும்.

இன்று நம்மில் அதிகமானவர்கள் போதுமான அளவு உடற்பயிற்சியும் செய்வதில்லை. செய்ய நேரமுமில்லை. இதனால் உடலில் பல நோய்கள் உருவாகின்றன. இந்நிலையிலிருந்து விடுபட நாம் மருத்துவர்களை நாடி, சிகிச்சைக்காக அதிகமான பணத்தையும், நேரத்தையும் விரயம் செய்கின்றோம்.

ஒரு காலத்தில் நாம் அன்றாடம் பயன்படுத்திய மிதிவண்டி, உடற்பயிற்சி கருவியாக உடற்பயிற்சிக் கூடங்களில் இன்று காணப்படுகிறது. அதை கட்டணம் கட்டி பயன்படுத்துகிறோம். மிதிவண்டி ஓட்டுவது நல்ல உடற்பயிற்சி என்பதை நாம் இனியாவாது உணரவேண்டும்.

மிதிவண்டியை குறைந்த தூர போக்குவரத்துக்கு மக்கள் எப்பொழுதெல்லாம் முடியுமோ, அப்பொழுதெல்லாம் பயன்படுத்த வேண்டும். அதனால் உள்ளத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கும். மன அழுத்தம் குறையும். மாரடைப்பைத் தடுக்கும். உடலில் நல்ல கொழுப்பு அதிகரித்து. கெட்ட கொழுப்பு குறையும். மிதிவண்டி பயன்பாடு நமது அன்றாட வாழ்வில் பொருளாதார பிரச்சினையையும் குறைக்கும். உடல்நலமும் உளநலமும் ஒருங்கே கூடும்.

எனவே, எரிபொருள் விலை சிகரத்தைத் தொடும் நிலைக்கு வந்துவிட்ட இந்நிலையில், மிதிவண்டி பயன்பாட்டிற்கு புத்துணர்வு அளிக்க வேண்டும். இது காலத்தின் கட்டாயமாகும். உடலுக்கு ஆரோக்கியத்தை வழங்கக்கூடிய மிதிவண்டி மீண்டும் அன்றாட பயன்பாட்டுக்கு வந்தால் விபத்துகளும் உயிர்ச்சேதங்களும் போக்குவரத்து நெரிசலும் வெகுவாகக் குறையும். தனிமனிதனும், அவன் சார்ந்த சமூகமும் பயனடையும்.

மிதிவண்டியை எங்கும் ஓட்டலாம், எப்பொழுதும் ஓட்டலாம், மழையிலும் வெயிலிலும் ஓட்டலாம். பிரத்தியேகமான பயிற்சியோ, ஓட்டுநர் உரிமமோ தேவையில்லை. ஒரு மணிநேரம் தொடர்ச்சியாக மிதிவண்டியை ஓட்டுவதன்மூலம் 500 முதல் 600 வரையிலான கலோரிகளை உடம்பிலிருந்து எரிக்க முடியும். உடலின் கீழ் அவயவங்களுக்கும் இடுப்பு வளையத்திற்கும் சிறந்த உறுதியையும், பலத்தையும் மிதிவண்டி பயிற்சி வழங்குகிறது. முழங்கால் மூட்டின் அசைவை சீராக்கி நாம் உலகில் நலமாக நடமாட துணை புரிகின்றது.

இதயம் சீராக இயங்கத் துவங்குவதால், இதயத்தின் உறுதித்தன்மை 3 முதல் 7 வீதம் வரை அதிகரிக்கின்றது என்று ஆய்வுகள் கூறுகின்றன. இலண்டன் மருத்துவ கூட்டமைப்பு நடத்திய ஆய்வொன்றிலிருந்து வாரத்திற்கு 20 மைல் மிதிவண்டி ஓட்டுபவர்களை ஏனையவர்களுடன் ஒப்பிடும்போது 50 வீதம் குறைவாகவே இதயநோய்களுக்கு உள்ளாகுகின்றனர் என்று தெரியவந்துள்ளது. மிதிவண்டி ஓட்டுவது நம் உச்சிமுதல் பாதம்வரையிலுள்ள உடலுறுப்புகள் அனைத்தையும் ஒருங்கிணைத்துச் செயற்படுத்துகின்றது.

மிதிவண்டி ஓட்டும்போது சுற்றுச்சூழலுக்கு எந்த பாதகமும் ஏற்படுவதில்லை. ஏனெனில், இங்கு புகையோ, ஒலியோ உற்பத்தியாவதில்லை. இதனால் இது சுற்றுச்சூழலுக்கும், நட்பானது; பாதுகாப்பானது.

ஆரம்பத்தில் மிதிவண்டி ஓட்ட விரும்புபவர்கள் வாரத்தில் 2/3 நாட்கள் 20 முதல் 30 நிமிடங்கள் வரை மிதமான வேகத்தில் ஓட்டத் துவங்கி, பின்னர் படிப்படியாக வேகத்தையும் நேரத்தையும் அதிகரிப்பதன் மூலம் நல்ல பலன்களைப் பெறமுடியும்.

சீனா, ஜப்பான் உள்ளிட்ட கிழக்காசிய நாடுகளில் மிதிவண்டியில் பயணிப்பது சகஜமாக இருக்கிறது. பெரும் பதவி வகிப்பவர்கள்கூட மிதிவண்டியில் செல்கிறார்கள். அதை ஊடகங்கள் மக்களுக்கு எடுத்தியம்பி, மாற்றத்துக்கு வழிகோல வேண்டும்.

முனைவர் என்.பத்ரி
நன்றி - தினமணி

இன்றைய நாளில்...

* 1814 – நெப்போலியன் பொனபர்ட்டின் பிரான்ஸ் இராணுவம் பிரியென் நகரில் இடம்பெற்ற சமரில் ரஷ்யாவை வென்றது.
* 1946 – ஐக்கிய அமெரிக்காவில் CIG எனப்படும் மத்திய உளவுத்துறைக் குழு அமைக்கப்பட்டது.
* 1980 – ரூபிக்கின் கனசதுரம் முதல் தடவையாக சர்வதேச அளவில் இலண்டனில் விற்பனைக்கு வந்தது.
* 1996 – இத்தாலியில் வெனிஸ் நகரில் உள்ள லா பெனீஸ் ஓப்பரா மாளிகை தீயினால் அழிந்தது.

நக்கல் நமசிவாயம்

காலியிலும் துறைமுக நகரம் வரப்போகுதாம்...அப்போ இனி காலியும் காலிதான்...

UK Newspapers Viber Community

டிஜிட்டல் தராசு வேண்டாம்

கொழுந்து நிறுவை கூடையினை தலையில் சுமந்து டியன்சின் தோட்டத் தொழிலாளர்கள் ஆர்ப்பாட்டம்

(எம்.கிருஸ்ணா)

பொகவந்தலாவ பெருந்தோட்ட நிறுவனத்தின் கீழ் இயங்கும் பொகவந்தலாவ டியன்சின் தோட்டத் தொழிலாளர்கள் தேயிலைக் கொழுந்து நிறுவை செய்யும் கூடையினை தலையில் சுமந்து நேற்று (28) காலை ஆர்ப்பாட்டம் ஒன்றை முன்னெடுத்தனர்.

பொகவந்தலாவ டியன்சின் தோட்டத் தொழிலாளர்களால் பறிக்கப்படும் பச்சை தேயிலைக் கொழுந்துக்கு வருமானம் ஈட்டித்தரும் தொழிலாளர்களின் பிள்ளைகளுக்கு வருடம் ஒன்றுக்கு பெயாடெட் நிறுவனத்தினால் 4 ஆயிரம் ரூபா வழங்கப்படும் தொகையினை தோட்ட நிர்வாகம் வழங்க மறுப்பு தெரிவித்துள்ளமை, தேயிலைக் கொழுந்தினை பறிப்பதற்கு புதிய முறையிலான கட்டரினை பயன்படுத்துமாறு தோட்ட நிர்வாகம் தொழிலாளர்களை கோரிவருகின்றமை மற்றும் டிஜிட்டல் தராசினை பயன்படுத்தி வருகின்றமைக்கு எதிர்ப்பு தெரிவித்தே இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

தோட்ட நிர்வாகம் டிஜிட்டல் தராசினை பயன்படுத்தி தேயிலைக் கொழுந்து நிறுவையினை மேற்கொண்டு வருகிறது. இந்த தராசினை பயன்படுத்தும்போது தொழிலாளர்களால் பறிக்கப்படும் தேயிலைக் கொழுந்து நிறை கொள்ளையடிக்கப்படுகிறது என ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட தொழிலாளர்கள் தெரிவித்தனர்.

எமக்கு டிஜிட்டல் தராசு முறைமை வேண்டாம் என்பதோடு, நாம் பறிக்கும் தேயிலைக் கொழுந்தின் மூலமாக வரும் வருமானத்தில் தொழிலாளி ஒருவருக்கு வழங்கப்படும் 4 ஆயிரம் ரூபா தொகையினை கொரோனா காலப்பகுதியில் எமக்கு வழங்கப்பட்ட நிவாரணப் பொருட்களுக்கு வழங்கப்பட்டதாக தோட்ட முகாமையாளர் கூறுகிறார். ஆகவே, இது தொடர்பில் உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என டியன்சின் தோட்டத் தொழிலாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். ஆர்ப்பாட்டத்தில் சுமார் 150 பேர் வரை கலந்து கொண்டதுடன் சுமார் இரண்டு மணித்தியாலங்களின் பின்னர் வீடுகளுக்கு சென்றனர்.

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

28.01.2022 நாணய மாற்று வீதம்

நாணயம்	கொள்வனவு வீதம்	விற்பனை வீதம்
அவுஸ்திரேலியன் டொலர்	027 1183	033 0505
கனேடியன் டொலர்	043 6768	05 5437
சீன யுவான் (ரென்மின்பி)	2 8 83	21 06 0
யூரோ	11 68 3	118 2035
ஜப்பான் யென்	0 6 82	0 663
சிங்கப்பூர் டொலர்	035 1444	04 8537
ஸ்ரேலிங் பவுன்	153 5011	161 8787
சுவிஸ் பிரான்ங்	100 8704	108 4850
ஐ.அ.டொலர்	087 4 7	1 1 8881

நாடு	நாணயம்	விற்பனை வீதம்
பஹ்ரைன்	பஹ்ரைன் தினார்	422 5025
குவைட்	குவைட் தினார்	552 8856
ஓமான்	ஓமான் றியால்	411 4561
கட்டார்	கட்டார் றியால்	44 1460
சவூதி அரேபியா	சவூதி அரேபிய றியால்	42 5127
ஐக்கிய அரபு இராச்சியம்	ஐக்கிய அரபு இராச்சிய திர்ஹம்	43 6638

ரணிலின் ரிட் மனுவை மார்ச் 30இல் விசாரணைக்கு எடுக்க நீதிமன்றம் தீர்மானம்

அரசியல் பழிவாங்கல் தொடர்பில் விசாரணை செய்யும் ஆணைக்குழுவினால் தனக்கு எதிராக முன்வைக்கப்பட்டுள்ள பரிந்துரைகளை வலுவிழக்கச் செய்யக்கோரி முன்னாள் பிரதமரும் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவருமான ரணில் விக்ரமசிங்கவினால் தாக்கல் செய்யப்பட்டிருந்த ரிட் மனுவை பரிசீலனை செய்வதற்கான திகதி அறிவிக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய, குறித்த ரிட் மனு எதிர்வரும் மார்ச் மாதம் 30ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படுமென மேன்முறையீட்டு நீதிமன்றம் நேற்று (28) உத்தரவிட்டுள்ளது.

இந்த மனு நேற்று நிஷங்க பந்துல கருணாரத்ன, வபார் தாஹிர் மற்றும் டீ.எம். சமரகோன் ஆகியோர் தலைமையிலான, மூவரடங்கிய நீதிபதிகள் குழாமினால் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதன்போது மனுதாரரின் சார்பில் ஆஜராகியிருந்த சட்டத்தரணியின் கோரிக்கையை ஏற்றுக்கொண்ட நீதிபதிகள் குழாம் மனு மீண்டும் எதிர்வரும் மார்ச் மாதம் 30ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படுமென உத்தரவிட்டுள்ளது.

கடந்த நல்லாட்சி அரசாங்கத்தில் குற்ற ஒழிப்பு செயலாளர் காரியாலயம் மற்றும் அதனுடன் தொடர்புடைய சில நடவடிக்கைகள் தொடர்பில் தான் பொறுப்புக்கூற வேண்டுமென அரசியல் பழிவாங்கல் தொடர்பில் விசாரணை செய்யும் ஜனாதிபதி ஆணைக்குழுவினால் தனக்கு எதிராக சில பரிந்துரைகள் முன்வைத்துள்ளதாக மனுதாரரான முன்னாள் பிரதமர் ரணில் விக்ரமசிங்க குறிப்பிட்டுள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது.

நான் பிரதமராக கடமையாற்றிய காலப்பகுதியில் குற்றத் தடுப்பு செயலகம் எனது நிர்வாகத்தின் கீழ் இருக்கவில்லை. அதேபோன்று, இதுதொடர்பான நடவடிக்கைகளில் நான் தலையிடவும் இல்லை.

குற்றத்தடுப்பு செயலகம் அமைச்சரவையின் அனுமதிக்கமைய ஸ்தாபிக்கப்பட்டது. அதேபோன்று, அரசால் ஏற்றுக்கொள்ளப்பட்ட விதிமுறைகளுக்கமையவே செயற்பட்டது.

குற்றத்தடுப்பு செயலகத்தால் முன்வைக்கப்பட்ட முறைப்பாட்டுக்கமைய பலதரப்பட்டவர்களுக்கு எதிராக, சட்டமா அதிபர் திணைக்களம், இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழு போன்ற ஏற்றுக்கொள்ளப்பட்ட அரச நிறுவனங்களினாலேயே வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.

அவ்வாறிருக்கையில், அரசியல் பலிவாங்கல் தொடர்பில் விசாரணை செய்யும் ஆணைக்குழு என்னிடம் எந்தவொரு விடயம் தொடர்பிலும் விசாரிக்காது, சட்டத்துக்கு முரணாக எனக்கு எதிராக சில பரிந்துரைகளை முன்வைத்துள்ளது. அவ்வாறு பரிந்துரைகளை முன்வைப்பதற்கு முன்னர் நீதியான விசாரணைகளை முன்னெடுப்பதற்கான சந்தர்ப்பம் கூட பெற்றுக்கொடுக்கப்படவில்லையென அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

சுகாதார வழிகாட்டலுடன் பல்கலைக்கழக கற்றல் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படும்

பேராதனைப் பல்கலைக்கழக பிரதி உபவேந்தர் தெரிவிப்பு

(கண்டி நிருபர்)

பேராதனைப் பல்கலைக்கழக நுண்ணுயிரியல் வல்லுநர்கள் குழுவின் வழிகாட்டுதலுக்கேற்ப கல்வி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதுடன் விளையாட்டு மைதானங்கள் மற்றும் நீச்சல் தடாகங்களும் திறக்கப்பட்டுள்ளதாக பேராதனைப் பல்கலைக்கழகத்தின் பிரதி உபவேந்தர் பேராசிரியர் டெரன்ஸ் மதுஜித் தெரிவித்தார்.

பேராதனையில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

பேராதனைப் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த 64 மாணவர்களுக்கு அண்மையில் கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாகவும், அவர்கள் பல்கலைக்கழக இடைத்தங்கள் சிகிச்சை நிலையங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

பல்கலைக்கழகத்தை முழுமையாக ஆரம்பித்ததன் பின்னர், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் வெளியிடப்பட்டுள்ள சுகாதார வழிமுறைகள் மற்றும் சுகாதார அமைச்சின் வழிமுறைகள் போன்றவற்றுக்கமைய, வரையறுக்கப்பட்ட அளவில் மாணவர்கள் ஒன்றுகூடும் நிலையில் கற்றல் நடவடிக்கைகளை முன்னெடுக்க தீர்மானித்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

பேராதனைப் பல்கலைக்கழக மாணவர்கள் மூன்று அல்லது நான்கு மாதங்களாக வழமைபோன்று கல்வி நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றனர். ஒருசில மாணவர்கள் ஒன்லைன் முறையினூடாகவும் கல்வி நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

அதுபோன்று கற்கை நெறிகளுக்கான விண்ணப்பங்களும் கோரப்பட்டுள்ளன.

இதுவரையில், 4ஆயிரத்து400 மாணவர்கள் வரையில் தங்கியிருந்து கற்றல் நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றனர். நடைமுறை பயிற்சி மற்றும் பரீட்சை நடவடிக்கைகளுக்கு தேவையான மாணவர்களை வைத்தியபீடம், பல் வைத்தியபீடம் மற்றும் சுகாதார வைத்திய பீட மாணவர்கள் போன்றவர்கள் மூலம் தேவையான மருத்துவப் பயிற்சிகளை முன்னெடுத்து வருகின்றனர்.

பேராதனை மருத்துவப் பீடத்தைச் சேர்ந்த நுண்ணுயிரியல் வல்லுநர்கள் குழு, மாணவர்களுக்கு நோய் பரவுவதைத் தடுக்க ஒரு குழுவை அமைத்து, அவர்கள் மூலம் தேவையான வழிகாட்டுதலைப் பெற்று விளையாட்டு மைதானங்கள் மற்றும் நீச்சல் தடாகங்களும் திறக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

கிளிநொச்சியில் சிறுமி மாயம்

கிளிநொச்சி நகரப் பகுதியில் 15 வயதுடைய சிறுமி ஒருவர் காணாமல் போயுள்ளதாக அவரது பெற்றோரால் கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

குறித்த சிறுமி 17ஆம் திகதி முதல் காணாமல் போயுள்ளதாக முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ள போதும் குறித்த சிறுமி காணாமல்போனமை தொடர்பில் பொலிஸார் எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று சிறுமியின் பெற்றோர் தெரிவித்துள்ளனர்.

பிரதான புகையிரதங்கள் சேவை இடைநிறுத்தம்

அசௌகரியங்களை எதிர்கொண்டதாக பயணிகள் தெரிவிப்பு

பிரதான புகையிரத வீதியில் நேற்று (28) காலை பயணிக்கவிருந்த சில புகையிரத சேவைகள் இடைநிறுத்தப்பட்டதால் பெரும் அசௌகரியத்தை எதிர்கொண்டிருந்ததாக பயணிகள் தெரிவித்துள்ளனர்.

இந்நிலைமையின் காரணமாக கம்பஹா உள்ளிட்ட பிரதேசங்களிலுள்ள காரியாலயங்களுக்கு பணிக்கு செல்லும் மக்கள் கொரோனா தொற்று நிலைமையின் மத்தியிலும், புகையிரதங்களில் கடுமையான சன நெரிசலில் பயணம் செய்ய நேர்ந்ததாக அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

ஒழுங்குபடுத்துநர்கள் இல்லையென தெரிவித்து புகையிரத அதிகாரிகள் புகையிரத சேவை இடைநிறுத்தப்பட்டிருந்தாலும், ஒருசில புகையிரதங்களுக்காக 16 ஒழுங்குபடுத்துநர்களை பணிக்கமர்த்தும் சந்தர்ப்பங்கள் இருப்பதாக தெரிவித்துள்ள புகையிரத சேவையாளர்கள், மேலும் சில ஒழுங்குபடுத்துநர்கள் வேறு கடமைகளுக்காக இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளனர்.

பலஸ்தீன அரசின் சுகாதார அமைச்சருடன் அந்நாட்டுக்கான இலங்கைப் பிரதிநிதி சந்திப்பு

பலஸ்தீனத்திற்கான இலங்கைப் பிரதிநிதி நாவலகே பென்னட் குரே, கடந்த 20ஆம் திகதி ரமல்லாவில் பலஸ்தீன அரசின் சுகாதார அமைச்சரைச் சந்தித்து இலங்கை மற்றும் பலஸ்தீனத்தின் கொவிட்-19 நிலைமைகள் குறித்து கலந்துரையாடினார்.

கலாநிதி மை அல்- கைலா பலஸ்தீனத்தில் இடம்பெறும் தடுப்பூசித் திட்டத்தை விளக்கியதுடன், இரண்டு டோஸ் தடுப்பூசிகள் மற்றும் பூஸ்டர் தடுப்பூசிகளை பெற்ற பலஸ்தீனிய மக்களின் உண்மைகள் மற்றும் புள்ளிவிபரங்களை வழங்கினார்.

இரு நாடுகளுக்கும் இடையிலான நீண்டகால உறவு மற்றும் அனைத்து சர்வதேச மன்றங்களிலும் பலஸ்தீனத்திற்கு இலங்கை அளித்துவரும் ஆதரவு குறித்து பிரதிநிதி குரே குறிப்பிட்டார். இலங்கையில் 85வீதத்துக்கும் அதிகமானோர் இரட்டைத் தடுப்பூசிகளைப் பெற்றுள்ளதாக அவர் குறிப்பிட்டார். அனைத்து பலஸ்தீனர்களுக்கும் குறிப்பாக தொற்றுநோயால் நேரடியாகப் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஆரோக்கியமான மற்றும் சிறந்த வாழ்க்கையை வழங்குவதற்கு பலஸ்தீனிய அரசாங்கம் அதிகபட்ச முயற்சிகளை மேற்கொண்டு வருவதாக சுகாதார அமைச்சர் குறிப்பிட்டார். இரு நாடுகளின் சுகாதார அமைச்சுகளுக்கிடையில் மருந்துகளின் சாத்தியமான இறக்குமதி மற்றும் ஏற்றுமதியின் மூலம் நன்மை பயக்கும் ஒரு வலுவான இணைப்பை உருவாக்குவதற்கு பிரதிநிதி குரே பரிந்துரைத்தார்.

பலஸ்தீனத்திற்கும் அதன் மக்களுக்கும் நீண்டகாலமாக வழங்கப்பட்டுவரும் ஆதரவிற்கு இலங்கை அரசாங்கத்திற்கு நன்றிகளைத் தெரிவிப்பதன் மூலம் கலாநிதி மை அல்-கைலாஹ் சந்திப்பை நிறைவு செய்தார்.

முச்சக்கரவண்டி உள்ளிட்ட வாகனங்களுக்கு மீற்றர் பொருத்தும் நடவடிக்கை ஒத்திவைப்பு

அளவீட்டு நியமங்கள் மற்றும் சேவைகள் திணைக்களத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள வாடகை முச்சக்கரவண்டிகள் மற்றும் வாகனங்களுக்காக மீற்றர் பொருத்தும் வேலைத்திட்டத்தை மறுஅறிவித்தல் வரை ஒத்திவைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

போக்குவரத்து அமைச்சின் ஆலோசனைக்கமைய, இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக அரசாங்க தகவல் திணைக்களம் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

பெப்ரவரி முதலாம் திகதி முதல் நாடளாவிய ரீதியில் வாடகை முச்சக்கரவண்டிகளுக்கு மீற்றர் பொருத்தும் திட்டம் நடைமுறைப்படுத்தப்படும் என திணைக்களம் இதற்கு முன்னர் அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

பதுளை மாவட்டத்தில் பிரதேச செயலகங்களால் நடத்தப்பட்ட அழகுக்கலை டிப்ளோமா பயிற்சிகளை நிறைவுசெய்தோருக்கு சான்றிதழ்கள் வழங்கும் நிகழ்வு ஆளுநர் ஏ.ஜே.எம். முஸம்மில் தலைமையில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

(படங்கள்: கெலும் குணதிலக)

LK Newspaper Viber Community

இந்திய மீனவர்களின் அத்துமீறலைக் கண்டித்து யாழ்ப்பாணத்தில் கடற்றொழிலாளர்கள் போராட்டம்

சட்டத்தை கடுமையாக்குமாறு கோரி ஜனாதிபதிக்கு மகஜர்

(யாழ். செய்தியாளர்)

இந்திய மீனவர்களின் அத்துமீறல்களை கண்டித்தும், அவற்றைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கவேண்டும் என கோரியும் யாழ்ப்பாணத்தில் போராட்டமொன்று நேற்று (28) முன்னெடுக்கப்பட்டது.

யாழ்ப்பாணம், ஊர்காவற்றுறை பிரதேச செயலகம் முன்பாக நேற்றுக் காலை ஊர்காவற்றுறை பிரதேச கடற்றொழிலாளர்கள் கூட்டுறவு சங்கம் மற்றும் யாழ். மாவட்ட கடற்தொழிலாளர்கள் கூட்டுறவு சங்கங்களின் சம்மேளனமும் இணைந்து இந்தப் போராட்டத்தை முன்னெடுத்திருந்தனர்.

ஊர்காவற்றுறை கடற்றொழிலாளர் சமாசம் முன்பாக போராட்டத்தை ஆரம்பித்த மீனவர்கள் அங்கிருந்து ஊர்காவற்றுறை பிரதேச செயலகம் வரையில் பேரணியாகச் சென்றனர்.

பிரதேச செயலகத்திற்கு பேரணியாகச் சென்ற மீனவர்கள் பிரதேச செயலகம் ஊடாக ஜனாதிபதி மற்றும் கடற்றொழில் அமைச்சர் ஆகியோருக்கு மகஜரும் கையளித்திருந்தனர்.

இந்திய மீனவர்களின் அத்துமீறல்கள் கட்டுக்கடங்காமல் செல்வதனால், எமது கடல் வளங்களும், கடல் சூழலும், எமது உபகரணங்கள், வாழ்வாதாரங்கள் என்பன அழிக்கப்படுகின்றன.

அதனால் கடந்த 10 ஆண்டுகளுக்கு மேலாக சொல்லொணா துன்பங்களை அனுபவித்து வருகின்றோம். பல போராட்டங்களை முன்னெடுத்து இருக்கின்றோம். பல தரப்புகளிடமும் மகஜர்களை கையளித்துள்ளோம். இருந்தும் இன்றுவரை எந்த நடவடிக்கையும் முன்னெடுக்கப்படவில்லை.

வெளிநாட்டு மீனவர்கள் ஒழுங்குப்படுத்தல் தடைச் சட்டத்தை கடுமையாக அமுல்படுத்த வேண்டும். உள்ளூர் இழுவைமடி தொழில் சட்டத்தை நடைமுறைப்படுத்தல் வேண்டும். கடந்த 10 ஆண்டுகளுக்கும் மேலாக இந்திய மீனவர்களின் அத்துமீறல்களால் அழிக்கப்பட்ட எமது தொழில் உபகரணங்களின் மதிப்புகள் பல கோடி ரூபா. அதற்கான நஷ்டஈடுகளை பெற்றுத்தர ஆவன செய்ய வேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகளை முன்வைத்தே போராட்டம் முன்னெடுக்கப்பட்டிருந்தது.

அதேவேளை, மலர்ந்துள்ள இந்த வருடத்திற்குள் எமக்கு தீர்வைப் பெற்றுத்தர சகல தரப்பினர்களும் முயற்சிகளை முன்னெடுத்து மீனவர்களின் வாழ்வாதாரத்தையும், கடல் வளத்தையும் காத்து எதிர்கால சந்ததியினரின் கைகளில் ஒப்படைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக் கோரியுள்ளனர்.

ஜப்பான் தூதுவர் இராணுவத் தளபதியுடன் சந்திப்பு

இலங்கை மற்றும் ஜப்பானின் இராஜதந்திர நட்புறவுக்கு 70 வருடங்கள் பூர்த்தியாவதையிட்டு ஜப்பானின் இலங்கைக்கான தூதுவர் ஹிதீகி மிஸுகோசி கடந்த புதன்கிழமை ஸ்ரீ ஜயவர்தனபுரவிலுள்ள இராணுவத் தலைமையகத்தில் பாதுகாப்பு பதவிநிலை பிரதானியும் இராணுவத் தளபதியும் பசுமை விவசாய செயல்பாட்டு மையத்தின் தலைவருமான ஜெனரல் ஷவேந்திர சில்வாவை சந்தித்துக் கலந்துரையாடினார்.

இந்தச் சந்திப்பின்போது இருநாடுகளுக்கும் இடையில் 70 வருடங்களாக காணப்படும் இருதரப்பு ஒத்துழைப்புகள் தொடர்பில் கருத்துகள் பரிமாறிக்கொள்ளப்பட்டன.

இரத்தினபுரி - கேகாலை மாவட்டங்களில் 100 பசும்பால் உற்பத்திக் கிராமங்கள்

(ஏ.ஏ.எம்.பாஸில்)

நாட்டில் நிலவும் பால்மா தட்டுப்பாடு மற்றும் அந்நிய செலாவணி பிரச்சினைக்குத் தீர்வாக கப்ரகமுவ மாகாண சபை மற்றும் கால்நடை பண்ணைகள் அபிவிருத்தி அமைச்சு இணைந்து 100 கிராமிய பசும்பால் உற்பத்திக் கிராமங்கள், பாற்பண்ணைகள் மற்றும் பால் உற்பத்தி, பதனிடும் நிலையங்களை அமைக்க நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

இதற்கிணங்க இவ்விரண்டு மாவட்டங்களிலும் 100 பாற்பண்ணைகள் மற்றும் பசும்பால் உற்பத்தி, பதனிடும் நிலையங்கள் அமைக்கப்படவுள்ளன.

இதன்மூலம் உள்நாட்டு பால் உற்பத்திப் பாவனை அதிகரிப்பதுடன், பெருமளவு அந்நிய செலாவணி மீதமாகுவதாகவும் கிராமிய மட்டத்தில் இப்பணிகளை மேற்கொண்டுவரும் உத்தியோகத்தர்கள் தெரிவிக்கின்றனர். இத்திட்டத்திற்கிணங்க பசும்பால் மற்றும் இத்துறைசார்ந்த உற்பத்திகளை போதியளவு பொதுமக்களுக்கு இலகுவாக கிடைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அதிகாரிகள் தெரிவித்தனர்.

சரஸ்வதி மத்திய கல்லூரியில் பொங்கல் விழா கொண்டாட்டம்

(கம்பளை நிருபர்)

புசல்லாவ சரஸ்வதி மத்திய கல்லூரியில் ஒன்று முதல் ஐந்து வரையான மாணவர்களின் பொங்கல் விழா பாடசாலை விளையாட்டு மைதானத்தில் நேற்று (28) நடைபெற்றது.

இந்த நிகழ்வு ஆரம்பப் பிரிவு பகுதித் தலைவர் எஸ்.அரியரட்ணம் ஆசிரியர் தலைமையில் நடைபெற்றது. இந்த நிகழ்வுக்கு சகோதரத்துவ பாடசாலை மாணவர்களும் கலந்துகொண்டனர்.

இந்நிகழ்வில் ஆசிரியர்களும் பெற்றோர்களும் கலந்துகொண்டனர். மேலும் மாணவர்களின் கலை நிகழ்ச்சியும் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது .

புகையிரத ஊழியர்கள் ஆர்ப்பாட்டம்

தமது சம்பளப் பிரச்சினைக்குத் தீர்வு காணுதல் மற்றும் தொழில்நுட்ப உதவியாளர் பதவியை இரத்துச்செய்தல் உள்ளிட்ட கோரிக்கைகளை முன்வைத்து புகையிரத ஊழியர்கள் ஒன்றிணைந்து மருதானையிலுள்ள புகையிரதத் திணைக்கள தலைமையகத்துக்கு முன்பாக நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

மன்னாரில் அதிகரிக்கும் கொரோனா; இதுவரை 36 மரணங்கள் பதிவு

மன்னார் மாவட்டத்தில் கொரோனா நோயாளர்களின் எண்ணிக்கை மீண்டும் அதிகரித்து வருவதாக மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ரி.வினோதன் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்ட நாளாந்த கொரோனா தொற்று தொடர்பான அறிக்கையில் இந்த வருடம் ஜனவரி மாதம் 26ஆம் திகதி தொடக்கம் தற்பொழுதுவரை 85 கொரோனா தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையின்போது புதன்கிழமை மேலும் 16 கொரோனா தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று குறிப்பிட்டுள்ளார்.

மன்னார் மாவட்டத்தில் மூவாயிரத்து 268 கொரோனா நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதுடன், 36 கொரோனா மரணங்களும் இடம்பெற்றுள்ளதாக அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

சாலாவவில் மோட்டார்குண்டு வெடிப்பு; படுகாயமடைந்த சிறுவன் வைத்தியசாலையில்

பொலிஸ், இராணுவம் தீவிர விசாரணை

கொஸ்கம, சாலாவ பிரதேசத்திலுள்ள வீடொன்றின் முற்றத்திலிருந்த மோட்டார்குண்டுகள் சில வெடித்ததமையினால் அந்த வீட்டின் சிறுவன் படுகாயங்களுக்குள்ளாகியுள்ளார்.

2016ஆம் ஆண்டு சாலாவ ஆயுதக் களஞ்சியம் வெடிப்புக்குள்ளாகியிருந்ததுடன், அதன்போது சிதறலடைந்த சில மோட்டார்குண்டுகளே இவ்வாறு வெடிப்புக்குள்ளாகியுள்ளன.

நேற்று முன்தினம் (27) மாலை 5.53 மணியளவில் இந்த வெடிப்புச் சம்பவம் இடம்பெற்றுள்ளதுடன், இச்சம்பவத்தில் படுகாயங்களுக்குள்ளான சிறுவன் கொழும்பு தேசிய வைத்தியசாலையின் அதிதீவிர சிகிச்சைப்பிரிவில் சிகிச்சைபெற்று வருகின்றார். இந்த வெடிப்புச் சம்பவத்தின்போது குறித்த சிறுவன் புத்தகம் வாசித்துக்கொண்டிருந்துள்ளார்.

வெடிப்புச் சம்பவம் இடம்பெற்ற இடத்திலிருந்து 130 மில்லிமீற்றர் நீளம் கொண்ட துப்பாக்கி ரவைகளே இவ்வாறு வெடிப்புக்குள்ளாகியுள்ளதாக பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

எது எவ்வாறாயினும் கடந்த காலங்களில் இடைக்கிடை சில பிரதேசங்களில் கண்டுபிடிக்கப்பட்ட இதுபோன்ற மோட்டார்குண்டுகளின் பகுதிகள் பாதுகாப்புப் பிரிவினரால் மீட்கப்பட்டுள்ளதுடன், ஒருசிலர் வீடுகளை அழகுபடுத்துவதற்காக இந்த மோட்டார்குண்டுகளை பயன்படுத்தியுள்ளனர். அவ்வாறு, வீட்டின் முற்றத்தில் அழகுக்காக பொருத்தப்பட்டிருந்த குண்டுகளே இவ்வாறு நேற்று வெடிப்புக்குள்ளாகியிருக்கலாம் என பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

இந்த வெடிப்புச் சம்பவத்தில் ஹங்வெல்ல பிரதேசத்திலுள்ள பாடசாலையொன்றில் தரம் 10இல் கல்வி கற்கும் சத்மிர அதுப்பத்து என்றழைக்கப்படும் சிறுவனே இவ்வாறு படுகாயங்களுக்குள்ளாகியுள்ளார். சிறுவனை அவிசாவளை மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்க உடனடி நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன், அதன்பின்னர் மேலதிக சிகிச்சைகளுக்காக கொழும்பு தேசிய வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவுக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். பொலிஸ மற்றும் இராணுவ அதிகாரிகள் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

கடற்பரப்புகளில் காற்றின் வேகம் அதிகரிக்கக்கூடிய சாத்தியம்

இலங்கையைச் சூழவுள்ள கடற்பரப்புகளில் காற்றின் வேகம் அதிகரிக்கக்கூடிய சாத்தியம் உள்ளதாக வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வுகூறியுள்ளது.

பொத்துவிலிலிருந்து மட்டக்களப்பு, திருகோணமலை மற்றும் காங்கேசன்துறை ஊடாக மன்னார் வரையான கரையோரத்திற்கு அப்பாற்பட்ட கடற்பரப்புகளில் அவ்வப்போது மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக்கூடிய சாத்தியம் காணப்படுவதாக அத்திணைக்களம் தெரிவித்துள்ளது.

நாட்டைச் சூழவுள்ள ஏனைய கடற்பரப்புகளில் மாலையில் அல்லது இரவில் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக்கூடிய சாத்தியம் காணப்படுவதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

நாட்டைச் சூழவுள்ள கடற்பரப்புகளில் காற்றானது வடகிழக்கு திசையிலிருந்து வீசக்கூடுவதுடன், காற்றின் வேகமானது மணித்தியாலத்துக்கு 25-35 கிலோமீற்றர் வரை காணப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது. மன்னாரிலிருந்து புத்தளம் ஊடாக சிலாபம் வரையான கரையோரத்திற்கு அப்பாற்பட்ட கடற்பரப்புகளிலும் காலியிலிருந்து மாத்தறை ஊடாக ஹம்பாந்தோட்டை வரையான கரையோரத்திற்கு அப்பாற்பட்ட கடற்பரப்புகளிலும் காற்றின் வேகமானது அவ்வப்போது மணித்தியாலத்துக்கு 50 கிலோமீற்றர் வரை அதிகரிக்கக்கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

மன்னாரிலிருந்து புத்தளம் ஊடாக சிலாபம் வரையான கரையோரத்திற்கு அப்பாற்பட்ட கடற்பரப்புகளும் காலியிலிருந்து மாத்தறை ஊடாக அம்பாந்தோட்டை வரையான கரையோரத்திற்கு அப்பாற்பட்ட கடற்பரப்புகளும் அவ்வப்போதுகொந்தளிப்பாகக் காணப்படும்

நாட்டைச் சூழவுள்ள ஏனைய கடற்பரப்புகள் மிதமான அலையுடன் காணப்படும்.

இடியுடன் கூடிய மழை பெய்யும் நேரங்களில் கடற்பகுதிகளில் அவ்வப்போது பலமான காற்று வீசுவதுடன் அக்கடற்பிரதேசங்கள் கொந்தளிப்பாகவும் காணப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மோட்டார்சைக்கிளில் அதிவேக பயணம்; லொறியுடன் மோதி அக்குரஸ்ஸவில் விபத்து

சம்பவ இடத்தில் இளைஞன் பலி

அக்குரஸ்ஸ பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பங்கம சந்தியில் இடம்பெற்ற வாகன விபத்தில் 22 வயதுடைய இளைஞன் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் பிற்பகல் இடம்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

அதிவேகமாக வந்த மோட்டார்சைக்கிள் பிரதானவீதியில் நுழைந்துகொண்டிருந்தபோது லொறியுடன் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது.

லொறியின் பின் சக்கரத்தில் சிக்கிய இளைஞன் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்தவர் காலி, அம்பேகம பகுதியைச் சேர்ந்த ஆகாஷ் மிஹி நிர்மன் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

லொறியின் சாரதி கைதுசெய்யப்பட்டுள்ளதுடன், அக்குரஸ்ஸ பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

புலிகளுக்கு நிதி திரட்டிய பெண் சென்னையில் கைது

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்புக்கு நிதி திரட்டினார் எனக் குற்றஞ்சாட்டப்பட்ட பெண்ணொருவர், சென்னையில் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவ்வாறு சென்னையில் கைதானவர் இலங்கை பெண் என பொலிஸ் விசாரணைகளில் தெரியவந்துள்ளது. மேலும், இவர் விடுதலைப் புலிகளுக்கு நிதி திரட்டியமை தொடர்பில் தேசிய புலனாய்வுப் பிரிவுக்குத் தகவல் கிடைத்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையைச் சேர்ந்த மேரி பிரான்சிஸ்கோ என்ற பெண்ணே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார். 2018 ஆம் சென்னை வந்த மேரி, அண்ணாநகரில் தங்கி அதே முகவரியில் ரேஷன் கார்ட் உள்ளிட்டவற்றை பெற்றுள்ளார் என்றும் அந்நாட்டுத் தகவல்கள் தெரிவித்தன.

Lk Newspaper Viber Community

தடைகளை மீறி மகிழடித்தீவில் அனுஷ்டிக்கப்பட்ட கொக்கட்டிச்சோலை படுகொலை நினைவேந்தல்

பொலிஸாரின் கெடுபிடிகளுக்கு மத்தியில் முன்னெடுத்தார் கருணாகரம் எம்.பி.

(மட்டக்களப்பு நிருபர்)

மட்டக்களப்பு கொக்கட்டிச்சோலை படுகொலையின் 35ஆவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு மகிழடித்தீவில் அமைந்துள்ள நினைவுத்தூபியில் நேற்று (28) காலை மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் தமிழீழ விடுதலை இயக்கத்தின் செயலாளர் நாயகமுமான கோவிந்தன் கருணாகரம் (ஜனா)வினால் பொலிஸாரின் கெடுபிடிகளையும் மீறி அனுஷ்டிக்கப்பட்டது.

இதன்போது, முன்னாள் கிழக்கு மாகாண சபையின் பிரதித் தவிசாளரும் முன்னாள் தமிழீழ விடுதலை இயக்கத்தின் உப தலைவருமான இந்திரகுமார் பிரசன்னா, கட்சியின் பொருளாளர் உள்ளிட்டோர் கலந்துகொண்டிருந்தனர்.

பொலிஸார் தடைகளை ஏற்படுத்த முற்பட்டபோதிலும் சுகாதார வழிமுறைகளைப் பின்பற்றி அமைதியான முறையில், குறித்த நிகழ்வு இடம்பெற்றது. இதன்போது நினைவுத் தூபியில் ஈகைச்சுடர் ஏற்றப்பட்டு மலரஞ்சலி செலுத்தப்பட்டதுடன், மௌன அஞ்சலியும் செலுத்தப்பட்டது.

1987ஆம் ஆண்டு ஜனவரி 28ஆம் திகதி கொக்கட்டிச்சோலை மகிழடித்தீவு இறால் பண்ணையில் பணியாற்றிய உள்ளூர் பணியாளர்கள் உட்பட 150க்கும் மேற்பட்டோர் சுட்டுக் கொல்லப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

இதன்போது ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரும், தமிழீழ விடுதலை இயக்கத்தின் செயலாளர் நாயகமுமான கோவிந்தன் கருணாகரம், இலங்கை இராணுவத்தினரின் உதவியுடன் செய்யப்பட்ட படுகொலைகளை நினைவுகூருவதற்குத் தடைவிதிப்பது ஒட்டுமொத்த ஜனநாயக அத்துமீறலாகவே நாங்கள் பார்க்கின்றோம் என்றார்.

அங்கு தொடர்ந்து கருத்துத் தெரிவித்த அவர், கொக்கட்டிச்சோலை படுகொலை என்று கூறப்படுவது 1987ஆம் ஆண்டு அகதிகளாக இந்த இறால்வளர்ப்புத் திட்டத்துக்குள் இருந்த பொதுமக்களையும், இந்தப் பிரதேச மக்களுமாக 150க்கு மேற்பட்ட பொதுமக்கள் இந்தப் பிரதேசத்தில் கொல்லப்பட்டார்கள். அவர்களது நினைவாக இந்த நினைவுத்தூபி அமைக்கக்கப்பட்டு வருடா வருடம் நினைவேந்தல் நடைபெற்றுவருவது வழமை.

கடந்த வருடம் கூட இந்த இடத்தில் கொட்டில் அமைத்து இந்த நினைவேந்தல் நடைபெற்றது. இந்த வருடம் கொக்கட்டிச்சோலைப் பொலிஸாரினால் தடையுத்தரவு பெறப்பட்டு பொதுமக்கள் தங்களது உறவுகளை நினைவுகூரக்கூடாது என்ற கட்டளை பிறப்பிக்கப்பட்டிருக்கின்றது.

இருந்தாலும் படுகொலை செய்யப்பட்ட உறவுகளை நினைத்து தமிழீழ விடுதலை இயக்கம், நான் உட்பட உபதலைவர் பிரசன்னா இந்திரகுமார், பொருளாளர் விந்தன் கனகரெட்ணம் யாழ்ப்பாணத்திலிருந்து வந்திருக்கின்றார். இந்த நினைவேந்தலை நாங்கள் செய்து கொண்டிருக்கின்றோம்.

இந்த அரசு கடந்த காலங்களில் போராட்டத்தில் மரணித்த போராளிகள், பொதுமக்களை எதிர்காலச் சந்ததியினர் நினைவுகூரக்கூட விடுவதில்லை. அவர்களை நினைத்துக் கூட பார்க்கக் கூடாது என்ற முடிவில் இருக்கிறார்கள். இந்தப் படுகொலை கூட இந்த ராஜபக்ஷ சகோதரர்களின் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியையொட்டிய அரசினால் நடத்தப் படவில்லை. ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்க ஆட்சிக்காலத்தில் இது நடைபெற்றிருந்தது.

இருந்தும் இலங்கை இராணுவத்தினரின் உதவியுடன் செய்யப்பட்ட படுகொலைகளை நினைவுகூருவதற்குத் தடைவிதிப்பது ஒட்டுமொத்த ஜனநாயக அத்துமீறலாகவே நாங்கள் பார்க்கின்றோம் என அவர் இதன்போது தெரிவித்தார்.

திருமலை மஹதிவுல்வெவ வைத்தியசாலை வைத்தியர் உட்பட நால்வருக்கு கொரோனா

(பதுர்தீன் சியானா)

திருகோணமலை மஹதிவுல்வெவ பிரதேச வைத்தியசாலை வைத்தியர் உட்பட நால்வருக்கு கொரோனா தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது.

வைத்தியர் மற்றும் அம்பியூலன்ஸ் வண்டி சாரதிக்கு காய்ச்சல், தடிமன் இருந்தமையால் நேற்று (28) அன்ரிஜன் பரிசோதனை மேற்கொள்ளப் பட்டது.

இதனையடுத்து இருவருக்கும் தொற்று உறுதி செய்யப்பட்டதுடன், ஏனைய ஊழியர்களுக்கும் அன்ரிஜன் பரிசோதனை முன்னெடுக்கப்பட்டது.

இதேவேளை குறித்த வைத்தியசாலையில் கடமையாற்றும் வைத்தியர், அம்பியூலன்ஸ் சாரதி, மருந்தாளர், சிற்றூழியர் ஆகிய நால்வருக்கும் தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளதாகவும் வைத்தியசாலையின் பேச்சாளரொருவர் தெரிவித்தார்.

அத்துடன் குறித்த நால்வரும் அதே வைத்தியசாலையில் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர். க.பொ.த. உயர்தரப் பரீட்சை நாடளாவிய ரீதியில் ஆரம்பமாக இருக்கும் நிலையில் இயல்புநிலை பாதிக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

இதேவேளை, திருகோணமலை பொது வைத்தியசாலையில் நேற்று முன்தினம் (27) மேற்கொள்ளப்பட்ட 05 பி.சி.ஆர், 100 அன்ரிஜன் பரிசோதனைகளில் 13 ஆண்கள் 04 பெண்கள் அடங்கலாக, 17 பேர் தொற்றுக்குள்ளாகினர். கந்தளாய் ஆதார வைத்தியசாலையில் மேற்கொள்ளப்பட்ட 05 பி.சி.ஆர், 20 அன்ரிஜன் பரிசோதனைகளில் 02 நோயாளர்களும் கந்தளாய் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் மேற்கொள்ளப்பட்ட 37 அன்ரிஜன் பரிசோதனைகளின் அடிப்படையில் 09 ஆண்கள், 08 பெண்களுமாக 17 பேரும் கிண்ணியா சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் மூவரும் கொரோனா தொற்றுடன் இனங்காணப்பட்டுள்ளனர்.

அத்துடன் கந்தளாய் ஆதார வைத்தியசாலையில் ஒருவர் கொரோனா தொற்றுக்குள்ளாகி உயிரிழந் துள்ளார். இதற்கமைவாக திருகோணமலை மாவட்டத்தில் 24 மணிநேரத்தில் மேற்கொள் ளப்பட்ட பரிசோதனைகளில் 32 ஆண்கள், 17 பெண்கள் அடங்கலாக 49 புதிய நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர்.

கல்முனை பொலிஸ் பொறுப்பதிகாரியாக பக்கீர் கடமையேற்பு

(சாய்ந்தமருது நிருபர்)

கல்முனை பொலிஸ் நிலையத்தின் தலைமையக பொறுப்பதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ள எம்.ஆர்.பக்கீர், நேற்று (28) தனது கடமைகளைப் பொறுப்பேற்றுக் கொண்டார். சமய அனுஷ்டானங்களுடன் இடம்பெற்ற இந்நிகழ்வில் சாய்ந்தமருது பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி எஸ்.எம்.சம்சுதீன் உட்பட பொலிஸ் அதிகாரிகள், மதப் பெரியார்கள், சமூகப் பிரமுகர்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

கல்முனை பொலிஸ் நிலையத்தின் தலைமையக பொலிஸ் பொறுப்பதிகாரியாக கடமையாற்றி வந்த சுஜித் பிரியந்த, எல்பிட்டிய பொலிஸ் நிலையத்தின் தலைமையக பொறுப்பதிகாரியாக இடமாற்றம் பெற்றுச் சென்றதையடுத்தே அம்பாறை, சவளக்கடை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியாக கடமையாற்றி வந்த எம்.ஆர்.பக்கீர், கல்முனை பொலிஸ் தலைமையக பொறுப்பதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

மட்டு. மாவட்ட செயலகத்தில் டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டம்

மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் க.கருணாகரன் தலைமையில் "சுத்தமான சூழல் ஆரோக்கியமான நாளை" வேலைத்திட்டம் மாவட்ட செயலகத்தில் நேற்று(28) இடம்பெற்றது.

சுத்தமான சூழல் ஆரோக்கியமான நாளை எனும் தலைப்பில் நாடளாவிய ரீதியில் டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகிறது. செயலாளர் மாகாணசபை மற்றும் உள்ளூராட்சி விவகாரங்கள் இராஜாங்க அமைச்சின் வழிகாட்டுதலில் இந்நிகழ்வு இடம் பெறுகிறது.

நாடளாவிய ரீதியாக டெங்கு நுளம்பு பெருகும் இடங்களை கண்டறிந்து அவற்றை துரிதமாக இல்லாதொழிக்கும் நோக்கில் மாவட்டச் செயலக வளாகத்தினுள் டெங்கு ஒழிப்பு சிரமதான செயற்பாடுகள் நடைபெற்றுவருகின்றன. இச்சிரமதான செயற்பாடுகளை தொடர்ச்சியாக நடைமுறைப்படுத்துவதன் மூலம் இவ் வேலைத்திட்டத்தினை துரிதப்படுத்தமுடியும்.

மாவட்ட செயலகத்தின் உத்தியோகத்தர்கள் கிளைகள் வாரியாக ஒதுக்கப்பட்ட இடங்களை சிரமதான செயற்பாடுகளை மிகுந்த உற்சாகத்துடன் மேற்கொண்டு வருவதுடன், சுத்தமான சூழல் ஆரோக்கியமான நாளை எனும் நோக்கை அடைவதற்கு பூரண ஒத்துழைப்பை வழங்கி வருவது குறிப்பிடத்தக்கதாகும்.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

கிழக்கு மாகாண ஆசிரியர்களின் சம்பள முற்பணம் வழங்கிவைப்பு

49.375 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு

(நற்பிட்டிமுனை நிருபர்)

அரசாங்கத்தின் வரவு-செலவுத் திட்டத்தின் மூலம் வழங்கப்பட்ட அதிபர் ஆசிரியர் சம்பள மாற்றம் விசேட முற்பணம் 5000 ரூபா ஆகியவற்றை வழங்க 49.375 மில்லியன் ரூபா நிதி கிழக்கு மாகாண கல்வித் திணைக்களத்தால் விடுவிக்கப்பட்டு சம்பந்தப்பட்டோருக்கு வழங்கப்பட்டுள்ளதாக கணக்காளர் வை.ஹபீபுல்லாஹ் தெரிவித்துள்ளார்.

இதுவரை இக்கொடுப்பனவுகள் வழங்கப்படாதோர் தம்மிடம் தொடர்புகொள்ளுமாறும் ஏதும் குறைபாடுகள் இருப்பின் எழுத்துமூலம் அறிவிக்குமாறும் மேலும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, இக்கொடுப்பனவை துரிதகதியில் வழங்க நடவடிக்கை மேற்கொண்ட வலயக் கல்விப் பணிப்பாளர் எஸ்.புவனேந்திரன், கணக்காளர் வை.ஹபீபுல்லாஹ்வுக்கு அதிபர், ஆசிரியர்கள் தமது நன்றியையும் தெரிவித்துள்ளனர்.

காத்தான்குடி நகர சபையின் 46ஆவது அமர்வு

சுற்றுலாப் பயணிகளுக்கான அடிப்படை வசதிகளை மேம்படுத்த கலந்துரையாடல்

(மாளிகைக்காடு நிருபர்)

காத்தான்குடி நகரசபையின் 46ஆவது சபை அமர்வு நகரமுதல்வர் எஸ்.எச்.எம்.அஸ்பர் தலைமையில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இந்த கூட்டத்தில் காத்தான்குடி நகருக்கு அதிகளவான சுற்றுலாப் பயணிகள் வருகை தருவதாகவும், அவர்களுக்கான சில அடிப்படை மற்றும் மேம்படுத்தப்பட்ட வசதிகளை ஏற்பாடுசெய்து கொடுப்பது தொடர்பாகவும் கருத்துகள் பரிமாறப்பட்டன.

குறிப்பாக காத்தான்குடி என்ற அழகிய நகரை பார்ப்பதற்காகவே அதிகளவான சுற்றுலாப் பயணிகள் வருவதும் அப் பயணிகளை கவரும் வகையில் இந்த மண்ணில் ஒரு அழகிய புராதன நூதனசாலை, பலஸ்தீன அல்-அக்ஸா வடிவைப்போன்ற பள்ளிவாயல், அரபுதேசம் போல் பிரதான வீதியில் நடப்பட்டுள்ள ஈச்ச மரங்கள், வீதி வளைவுகள் என காத்தான்குடியில் அமையப்பெற்றுள்ள சகல இடங்களும் (Landmarks) கலை நயத்துடன் வடிவமைக்கப்பட்டுள்ளன.

அழகிய முறையிலும் இந்த மண்ணை நோக்கி அதிகளவான உள்நாட்டு வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் வருகை தர வேண்டும் என்ற தூர நோக்கோடு அபிவிருத்திப் பணிகளை மேற்கொண்டிருந்தார் முன்னாள் ஆளுநர் கலாநிதி எம்.எல்.எம்.ஏ.ஹிஸ்புல்லாஹ். அவரது தூர நோக்கான பணிகளையும் சபை அமர்வில் அனைவரும் பாராட்டியதோடு அதுதொடர்பாக சிலாகித்தும் பேசிக்கொண்டனர்.

திருகோணமலை கடற்கரை வீதியில் உடைந்தும் துருப்பிடித்தபடியும் பாதுகாப்பு கம்பிவேலிகள்

உரிய முறையில் பராமரிக்குமாறு பாதசாரிகள் கோரிக்கை

(ரவ்பீக் பாயிஸ்)

திருகோணமலை நகரை அண்டிய பிரதான போக்குவரத்து வீதிகளில் கடலைச் சுற்றி அமைக்கப்பட்டுள்ள பாதுகாப்பு அரண் கம்பி வேலிகளை உரிய முறையில் பராமரிக்குமாறு பொதுமக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

திருகோணமலை - கண்டி வீதி மட்டிகளி கடற்கரை முதல் திருகோணமலை கடற்படை முகாம் வரை கடற்கரையை சுற்றியுள்ள பிரதேசத்தைச் சூழ அமைக்கப்பட்டுள்ள பாதுகாப்பு அரண் கம்பி வேலிகள் உரிய முறையில் பராமரிக்கப்படாமல் துருப்பிடித்தும் உடைந்தும் சில இடங்களில் களவாடப்பட்டு சென்றுள்ளதாகவும் பிரதேச மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

இவ்வாறு அமைக்கப்பட்ட பாதுகாப்பு அரண் கம்பி வேலிகள் இல்லாமையினால் பிரதான வீதியினால் போக்குவரத்து விபத்துகளும் ஏற்படும் பட்சத்தில், வாகனங்கள் கடலுக்குள் விழும் அபாய நிலை ஏற்பட்டுள்ளதாகவும் இவ்வாறு அமைக்கப்பட்ட பாதுகாப்பு அரண் கம்பி வேலியின் நடைப்பாதையின் ஊடாக அதிகாலை மற்றும் மாலை வேலைகளில் இளைஞர் யுவதிகள் மட்டுமல்லாது கர்ப்பிணித் தாய்மார்கள், வயோதிபர்கள் எனப் பலர் நடைபயிற்சியில் ஈடுபடுவதாகவும் இதனால் தாம் பெரும் அசௌகரியங்களுக்கு உள்ளாவதாகவும் தெரிவிக்கின்றனர்.

இந்த விதியானது, வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் பராமரிக்கப்பட்டு வருவதாகவும் இவ்வாறு பாதுகாப்பு அரணாக அமைக்கப்பட்ட இரும்பு கம்பி வேலியானது உரிய முறையில் பராமரிப்பு இல்லாமையினால் துருப்பிடித்து உடைந்து விழுகின்ற நிலையிலும் சில கம்பி வேலிகள் காணாமல்போயுள்ளதையும் எம்மால் அவதானிக்கக் கூடியதாக இருந்தது.

எனவே இவ்வாறு பாதுகாப்புக்காக அமைக்கப்பட்ட கம்பிவேலியானது கடல் பிரதேசத்திற்கு உகந்த ஒரு பாதுகாப்பு அரண் இல்லையெனவும் வீதி அபிவிருத்தி அதிகார சபை என்ற வகையில் இதனை உரிய முறையில் பராமரித்திருந்தால் அனைத்து கம்பி வேலிகளையும் பாதுகாத்திருக்கமுடியும் எனவும் வீதியினை அன்றாடம் பயன்படுத்தும் பிரதேச சபை அதிகாரிகள், ஆளுநர் அலுவலக அதிகாரிகள், சங்கத் திணைக்கள அதிகாரிகள், வீதி அபிவிருத்தி அதிகார சபை அதிகாரிகள் இன்னும் பல அரச திணைக்கள அதிகாரிகள் பலரும் இவ் வீதியால் பயணிக்கும் நிலையில் இந்த பாதுகாப்பு அரண் கம்பி வேலிகளை புனரமைப்பதற்கோ, அல்லது பராமரிப்பதற்கோ அல்லது மாற்றுத் தீர்வினை நடைமுறைப்படுத்துவதற்கோ வலியுறுத்தாமல் இருப்பதையிட்டு கவலையடைவதாக புத்திஜீவிகள் கவலை தெரிவிக்கின்றனர். மேலும் இவ்வீதியினால் திருகோணமலையின் இரண்டு பிரதான பாடசாலை மாணவர்கள் பயணிப்பதும் குறிப்பிடத்தக்கது.

LK Newspapers Viber community

பெண்களை பொருளாதார ரீதியாக வலுப்படுத்தல் தொடர்பான செயலமர்வு

(கல்லடி நிருபர்)

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள 'பெண்களை பொருளாதார ரீதியாக வலுப்படுத்தல்' என்ற தலைப்பிலான பயிற்றுவிப்பாளர்களுக்கான மூன்று நாள் பயிற்சி செயலமர்வு கடந்த புதன்கிழமை (26) மட்டக்களப்பு கல்லடி கிறீன் கார்டன் விருந்தினர் விடுதியில் ஆரம்பமாகி மூன்று தினங்கள் நடைபெற்றது.

ஜேர்மன் கோப்ரேஷன் மற்றும் பிளேன் இன்டநெஷனல் நிறுவனங்களின் நிதிப்பங்களிப்பில் பெரண்டினா அபிவிருத்திச் சேவை நிறுவனத்தால் நடைமுறைப்படுத்தப்படும் 'இலங்கை சமூக அமைப்பிலுள்ள பெண்கள் மற்றும் இளைஞர்களை கிராமியத் தொழில் முயற்சியாண்மையில் வலுப்படுத்தல்' எனும் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் இப்பயிற்சிநெறி நடைபெற்றது.

இப்பயிற்சியாளர்களுக்கான பயிற்சிநெறியின் ஆரம்ப நிகழ்வில் மட்டக்களப்பு மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திருமதி சுதர்சினி ஸ்ரீ காந்த் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டார்.

இந்நிகழ்வு பெரண்டினா அபிவிருத்திச் சேவை நிறுவனத்தின் 'இலங்கை சமூக அமைப்பிலுள்ள பெண்கள் மற்றும் இளைஞர்களை கிராமியத் தொழில் முயற்சியாண்மையில் வலுப்படுத்தல்' எனும் நிகழ்ச்சித் திட்டத்தின் திட்ட முகாமையாளர் எஸ்.சிவராஜா தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள அனைத்து பிரதேச செயலகங்களிலும் கடமையாற்றும் பெண்கள் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் பெரண்டினா நிறுவனத்தின் உத்தியோகத்தர்களும் கலந்துகொண்டனர்.

இச்செயலமர்வின் வளவாளர்களாக இனோகா பிரியதர்ஷினி மற்றும் சுபாசினி காளிமுத்து ஆகியோர் கலந்துகொண்டு பால்நிலை பற்றிய எண்ணக்கருக்கள், பெண்களின் பொருளாதார வலுவூட்டலுக்கான சட்டகம், பெண்களின் தொழில் முயற்சியாண்மை, கிராமியத் தொழில் முயற்சிகளில் வலுவான பெண்கள் மற்றும் இளைஞர்களின் முன்னேற்றங்களை அளவிடுவதற்கான குறிகாட்டிகள் உள்ளிட்ட தலைப்புகளில் விரிவுரைகளையும், பயிற்சிகளையும் வழங்கினர்.

உலக வங்கியால் மருதமுனை வைத்தியசாலைக்கு 15 மில்லியன் ரூபா செலவில் ஆய்வுகூட வசதிகள்

(பெரியநீலாவணை நிருபர்)

கிழக்கு மாகாணத்தின் அம்பாறை மாவட்டத்தில் அமைந்துள்ள மருதமுனை பிரதேச வைத்தியசாலைக்கு உலக வங்கியின் அனுசரணையில் நவீன தொழில்நுட்ப வசதிகளுடன் கூடிய ஆய்வுகூட கட்டிடம் அமைக்கும் வேலைத்திட்டம் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளது - என கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் ஏ.எச்.எம்.அன்சார் தெரிவித்தார்.

வைத்தியசாலைக்கு தேவையான ஒரு தொகுதி உபகரணங்களை வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் (27) பிரதேச வைத்தியசாலையின் பொறுப்பு வைத்திய அதிகாரி டொக்டர் ஏ.எல்.எம்.மிஹ்லார் தலைமையில் வைத்தியசாலையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்துகொண்டு உரையாற்றும்போதே அமைச்சின் செயலாளர் இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்து இங்கு உரையாற்றும்போது, இந்த வைத்தியசாலை குறிப்பாக இந்த பகுதியிலுள்ள பாண்டிருப்பு, நற்பிட்டிமுனை, பெரியநீலாவணை, நீலாவணை போன்ற பிரதேச மக்களுக்கு அதிகளவிலான சேவையை வழங்கிவருகிறது. சிலர் தூர இடங்களிலிருந்தும் இங்கு வந்து சேவையைப் பெற்றுச் செல்கிறார்கள். சுனாமி அனர்த்தத்தின் பின்னர் மருதமுனை பிரதேச வைத்தியசாலையை தற்போது அமைந்திருக்கின்ற குறித்த இடத்தில் புதிதாக அமைப்பதற்கு அப்போது பிரதேச செயலாளராக இருந்துகொண்டு பல்வேறு முன்னெடுப்புகளை செய்திருக்கின்றோம். அந்த வரலாறுகளை இலகுவில் மறந்துவிட முடியாது. எனவே, இங்கு கடமையாற்றுபவர்கள் வருகின்ற நோயாளர்களை திருப்திப்படுத்துகின்ற சிறந்த சேவைகளை வழங்கவேண்டியது முக்கியமாகும் - என்று தெரிவித்தார்.

மருதமுனை பிரதேச வைத்தியசாலை, கொரோனா நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு சிகிச்சையளிக்கும் நிலையமாக செயற்பட்டதன் பின்னர் அண்மையில் பொதுமக்களின் வழமையான சேவைக்கு மீண்டும் திறந்துவைக்கப்பட்டு சேவைகள் தற்போது இடம்பெற்று வருகின்றன.

இந்நிலையில், குறித்த வைத்தியசாலைக்கு ஆய்வுகூட வசதிகளை வழங்கும் நோக்கில் முதல் கட்டமாக 15 மில்லியன் ரூபா செலவில் அபிவிருத்தி செய்யப்படவுள்ளது. நிகழ்வில் கௌரவ அதிதியாக கலந்துகொண்ட முன்னாள் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டொக்டர் குணசிங்கம் சுகுணன் இங்கு உரையாற்றும்போது,

கிழக்கு மாகாண சுகாதார அமைச்சுடன் இணைந்து உலக

வங்கியின் நிதி உதவியுடன் முன்னெடுத்து வருகின்ற பி.எஸ்.எஸ். (PSS project) வேலைத்திட்டத்திற்கு மருதமுனை பிரதேச வைத்தியசாலை தெரிவுசெய்யப்பட்டுள்ளமை மகிழ்ச்சியைத் தருகிறது. கொரோனா நோயாளர்களுக்கு சிகிச்சையளிக்கும் மத்திய நிலையமாக இந்த வைத்தியசாலை மாற்றப்பட்டு தேசிய வேலைத்திட்டத்திற்கு பங்களிப்புச் செய்ததன் பிரதிபலனாகவே இந்த வேலைத்திட்டம் கிடைத்துள்ளது. எதிர்காலத்தில் பாரியளவிலான ஒதுக்கீடுகளை இந்த கட்டிட நிர்மாணப் பணிக்கு ஒதுக்க முடியும். தற்போது முதற்கட்டமாக 15 மில்லியன் ரூபா செலவில் நவீன தொழில்நுட்ப வசதிகளுடன் கூடிய ஆய்வுகூடம் அமைக்கப்படுகிறது. 35 வயதுக்கு மேற்பட்டவர்களின் தொற்றா நோய் தொடர்பாக இந்த ஆய்வு கூடத்தில் பரிசோதனை செய்யப்படவுள்ளது. இது ஒரு தேசிய வேலைத்திட்டமாக வடக்கு, கிழக்கு உட்பட நாடு முழுவதும் முன்னெடுக்கப்படவுள்ளது.

எவ்வாறாயினும் 2023ஆம் ஆண்டு ஒதுக்கப்படுகின்ற நிதிகளின் ஊடாகவும் ஆய்வுகூட கட்டடத்துக்கு அதிக அளவிலான நிதிகளை ஒதுக்கி வைத்தியசாலையை மேம்படுத்துவதற்குத் தேவையான பணிகள் அனைத்தும் முன்னெடுக்கப்படும் - என்று தெரிவித்தார்.

இந்நிகழ்வில் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் டொக்டர் எம்.பி.அப்துல் வாஜித், திட்டமிடல் பொறுப்பு வைத்திய அதிகாரி டொக்டர் மாஹிர் உட்பட வைத்தியர்கள், வைத்தியசாலையின் அபிவிருத்திக் குழுவினர், தாதி உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் என பலர் கலந்துகொண்டனர்.

சாய்ந்தமருது தொழிற்பயிற்சி நிலையத்தில் ஆங்கிலப்பாட இலவச செயலமர்வு

(பொலிவேரியன் நிருபர்)

யு.எஸ்.எவ்.ஸ்ரீலங்கா அமைப்பு சாய்ந்தமருது தொழிற்பயிற்சி நிலையத்துடன் (SLYC) இணைந்து ஏற்பாடுசெய்துள்ள ஆங்கில பாடத்துக்கான இலவச கருத்தரங்கு சாய்ந்தமருது இளைஞர் தொழிற்பயிற்சி நிலையத்தில் இன்று (29) சனிக்கிழமை காலை 9 மணிமுதல் 2 மணிவரை இடம்பெறும்.

கல்விக்கு கரம் கொடுப்போம் எனும் தொனிப்பொருளில் இடம்பெறும் இக்கருத்தரங்கில், இம்முறை கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சையை எதிர்வரும் பெப்ரவரி 07ஆம் திகதி எதிர்நோக்கவுள்ள மாணவ, மாணவிகள் அனைவரும் இதில் கலந்துகொண்டு பயன்பெறலாம். இந்நிகழ்வில் ஆங்கிலப்பாட விரிவுரையாளர்களான எம்.பி.நௌஷாத், எம்.ஆர்.எம்.சதீம், ஏ.எல்.எம்.சிஹாம், எம்.எவங.ஆசீர் அஹமட் ஆகியோர் வளவாளர்களாகக் கலந்துகொள்ளவுள்ளனர்.

ஒமிக்ரொன் என சந்தேகிக்கப்படும் வைரஸ் தொற்றுடன் மட்டக்களப்பில் 1300 பேர் அடையாளம்

ஒருவாரத்தில் 6 பேர் பலி!

(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பு மாவட்டத்தில் ஒமிக்ரொன் வைரஸ் என சந்தேகிக்கப்படும் வைரஸ் தொற்றால் 40 கர்ப்பிணித் தாய்மார்கள் உட்பட 1300 பேருக்கு நோய் அடையாளம் காணப்பட்டுள்ளதுடன், கடந்த ஒருவாரத்தில் 22 வயதுடைய யுவதி ஒருவர் உட்பட 6 பேர் உயிரிழந்துள்ளதாக மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் கே. சுகுணன் தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்ட கொரோனா தடுப்பு செயலணி கூட்டம் நேற்று முன்தினம் (27) மாவட்ட செயலகத்தில் செயலணியின் தலைவரும் மாவட்ட அரசாங்க அதிபருமான கே.கருணாகரன் தலைமையில் இடம்பெற்றது. இதில் கலந்துகொண்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் கே.சுகுணன் ஊடகங்களுக்கு தெரிவிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

திடீரென எமது நாடு உட்பட உலகம் பூராக ஒமிக்ரொன் கொரோனா வைரஸின் தாக்கத்தினால் மிக அதிகமானோர் பாதிக்கப்பட்டு வருகின்றனர். அந்தவிதத்தில் மேல் மாகாணமான கொழும்பு, கம்பஹா தவிர்ந்து கிழக்கு மாகாணத்தில் மட்டக்களப்பு மாவட்டத்தில் அதிகரித்துள்ளது.

மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் நேற்று நூற்றுக்கு மேற்பட்ட நோயாளிகளும் 20இற்கு மேற்பட்ட கர்ப்பிணித்தாய்மார்களுக்கும் இந்த நோய்த்தாக்கம் கண்டறியப்பட்டுள்ளதையடுத்து, மாவட்டத்தில் 40இற்கு அதிகமான கர்ப்பிணித் தாய்மார்கள் ஒமிக்ரொன் என சந்தேகிக்கப்படும் வைரஸ் தாக்கத்தினால் பீடிக்கப்பட்டுள்ளனர்.

கடந்த 3 தினங்களில் 500 நோயாளிகள் அடையாளம் காணப்பட்டதையடுத்து, 1300 பேருக்கு நோய் அடையாளம் காணப்பட்டுள்ளதுடன், நேற்று 22 வயது யுவதி ஒருவர் உயிரிழந்துள்ளதையடுத்து, இரண்டு யுவதிகள் உட்பட 6 பேர் கடந்த ஒரு வாரத்தில் உயிரிழந்துள்ளனர்.

கடந்த முறை டெல்ட்டா வைரஸ் நோயினால் பாதிக்கப்பட்டவர்களை வைத்து பராமரிப்பதற்கு சிரமப்பட்டிருந்தோம். ஆனால், இந்த முறை வந்திருக்கின்ற ஒமிக்ரொன் வைரஸானது மிக அதிகளவானவர்களை மிகக் குறுகிய காலத்தில் நோயினால் பாதிப்படையச் செய்து கொண்டிருக்கின்றது. இந்தத் தாக்கம் ஏற்பட்டதையடுத்து எங்களுக்கு எதிர்காலத்தை நோக்கிய நிச்சயமற்ற தன்மை ஏற்பட்டுள்ளதுடன், இந்த நோய்த்தாக்கம் எம்மை திக்குமுக்காட வைத்துள்ளது. ஏனென்றால் வைத்தியசாலைகளில் வைத்து பராமரிப்பதற்கான போதிய இடங்கள் இல்லை. ஆகவே, பொதுமக்கள் இந்த ஓர் அபாயத்தை உணர்ந்தவர்களாக ஒவ்வொரு நடைமுறைகளையும் பின்பற்ற வேண்டும் என கேட்டுக்கொள்கின்றோம்.

கொரோனா தாக்கத்தினால் ஏற்பட்ட இந்த நிலைமையை மேலும் அதிகரிக்கின்ற விதமாக எமது நடவடிக்கைகளை செய்ய முடியாது. எனவே, தேவையற்ற விதத்தில் கூட்டம் கூடுதலை நிறுத்தவேண்டும். பிறந்தநாள் வைபவங்கள் மற்றும் வேறு சமூக வைபவங்களுக்காக ஒன்றுகூடுவதை நிச்சயமாக தவிர்த்துக்கொள்ள வேண்டும். அதேவேளை, ஒன்றுகூடுவதற்கு சுகாதார அதிகாரிகளின் அனுமதியை பெறவேண்டும்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் புதிய கட்டுப்பாடுகள், புதிய விதிமுறைகள், புதிய அறிவுறுத்தல்கள் வழங்கப்படும். அதில் அரசியல்வாதிகள், உயரதிகாரிகள் என உயர்வு தாழ்வு பார்க்காது சட்டம் அனைவருக்கும் சமம் என்ற விதத்தில்தான் சுகாதார நடவடிக்கை எடுக்கப்படும். எனவே,

விரைவில் விஞ்ஞான ரீதியாக நிரூபிக்கப்படும் என்கிறார் சுகாதார சேவைகள் பணிப்பாளர் சுகுணன்

அனைவரும் ஒத்துழைக்கவேண்டும். ஒத்துழைப்பு கொடுக்க மறுப்பவர்களுக்கு சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

முதலாவது அலையின்போது கொரோனா வைரஸின் அல்பா திரிபு வைரஸ்தான் எங்களை தாக்கியிருந்தது. இரண்டாவது அலையின்போது பீற்றா காமா எனப்படுகின்றது தாக்கியிருந்தது. மூன்றாவது அலையில் அதிகளவு உயிர்ச்சேதத்தையும் அதிகளவு தொற்றையும் ஏற்படுத்தியிருந்தது. டெல்ட்டா மிகவும் ஓர் அபாயமான வைரஸாக கணிக்கப்பட்டிருந்தது.

ஆனால், இப்பொழுது உலகத்தில் 99 வீதமான கொவிட்-19இற்கு காரணமாக இந்த ஒமிக்ரொன் வைரஸ் அடையாளப்படுத்தப்பட்டுள்ளது. ஆகவே, மட்டக்களப்பிலிருந்து மாதிரிகளை அனுப்பியுள்ளோம். இருந்தாலும் இங்கு காணப்படுகின்ற அனைவருமே ஒமிக்ரொன் பிறழ்வு வைரஸால்தான் பாதிக்கப்பட்டுள்ளதாக சந்தேகிக்கின்றோம். அது விரைவில் விஞ்ஞான ரீதியாக நிரூபிக்கப்படும் - என்று அவர் மேலும் தெரிவித்தார்.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

போட்டி போட்டுச் சென்றதால் மோதிக்கொண்ட பஸ்கள்

சந்திவெளியில் விபத்து

(மீராவோடை நிருபர்)

இரண்டு பஸ்கள் போட்டிப் போட்டுச் சென்றதில் இரண்டும் மோதிக்கொண்ட சம்பவமொன்று நேற்று முன்தினம் இடம்பெற்றது. சந்திவெளி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பிரதான வீதியில் வைத்தே இந்த விபத்துச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

வாழைச்சேனை பகுதியிலிருந்து அக்கரைப்பற்று நோக்கி புறப்பட்டுச் சென்ற இலங்கை போக்குவரத்துச் சபைக்கு சொந்தமான பஸ்ஸும் தனியார் பஸ் ஒன்றுமே இவ்வாறு மோதிக்கொண்டுள்ளன. இரு பஸ் சாரதிகளுக்கிடையில் பயணிகளை ஏற்றுவதில் ஏற்பட்ட முரண்பாடே இந்த விபத்துக்குக் காரணம் என்று பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணையின்போது தெரியவந்துள்ளது.

இந்தச் சம்பவத்தில் இலங்கை போக்குவரத்து பஸ்ஸுக்கு சிறியளவு சேதம் ஏற்பட்டுள்ளது. சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை சந்திவெளி பொலிஸார் மேற்கொண்டமை குறிப்பிடத்தக்கது.

கல்முனை பிராந்திய சுகாதாரப் பணிமனையின் புதிய பணிப்பாளர் றிபாஸுக்கு பாராட்டு விழா

(திகாமடுல்ல நிருபர்)

கல்முனை பிராந்திய சுகாதாரப் பணிமனையின் பணிப்பாளராக கடமையேற்றுள்ள டாக்டர் ஐ.எல்.எம்.றிபாஸின் சேவைகள் மற்றும் நிர்வாகத்திறன் பற்றி சிலாகித்து நாடாளுமன்ற உறுப்பினரால் பொன்னாடை போர்த்தி நினைவுச்சின்னம் வழங்கி

கௌரவிக்கப்பட்டது.

அதேவேளை, பொத்துவில் பிரதேசம் சார்பாக நாடாளுமன்ற உறுப்பினரின் இணைப்பாளர் வை.எல்.றியாஸினால் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் ஐ.எல்.எம்.றிபாஸுக்கு பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டது.

பொத்துவில் பிரதேச சபையின் தவிசாளர் எம்.எச்.ஏ.றஹிமினால் டாக்டர் ஐ.எல்.எம்.றிபாஸுக்கு நினைவுச்சின்னம் வழங்கப்பட்டதோடு, வைத்திய அதிகாரி டாக்டர் எவ்.எம்.உவைஸால் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் ஐ.எல்.எம்.றிபாஸின் சேவையைப் பாராட்டி, வாழ்த்துப்பா வழங்கப்பட்டது.

நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.எம்.முஷாரப், பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் ஐ.எல்.எம்.றிபாஸ், பொத்துவில் ஆதார வைத்தியசாலையின் புதிய வைத்திய அத்தியட்சகர் டாக்டர் றஜாப், பொத்துவில் பிரதேச சபையின் தவிசாளர் எம்.எச்.ஏ.றஹிம் ஆகியோர் உரையாற்றினர்.

தங்கவேலாயுதபுரத்தில் புனரமைக்கப்பட்ட வீதி - வாசிகசாலை திறந்துவைப்பு!

(கல்லடி நிருபர்)

கிழக்கு மாகாண வீதி அபிவிருத்தித் திணைக்களத்தின் IUVDP -2021 திட்டத்தின்கீழ் திருக்கோவில் பிரதேச செயலாளர் பிரிவில் அமைந்துள்ள தங்கவேலாயுதபுரம் கிராமத்தில் புனரமைப்புச் செய்யப்பட்ட பாடசாலை வீதி மற்றும் வாசிகசாலை என்பவற்றின் திறப்புவிழா நேற்று முன்தினம் (27) இடம்பெற்றது.

இந்நிகழ்வு அம்பாறை மாவட்ட கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் எம்.ரி.ஏ.நாஹிப்பின் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வுக்கு கிழக்கு மாகாண கிராம அபிவிருத்தித் திணைக்களப் பணிப்பாளர் என்.தனஞ்சயன் மற்றும் மட்டக்களப்பு மாவட்ட கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் மோகன் பிரேம்குமார் ஆகியோர் அதிதிகளாகக் கலந்து கொண்டு புனரமைப்புச் செய்யப்பட்ட பாடசாலை வீதி - வாசிகசாலை என்பவற்றினைத் திறந்துவைத்தனர்.

ஏற்றுமதி கைத்தொழில் அபிவிருத்தி தொடர்பான மீளாய்வுக் கூட்டம்

(மட்டக்களப்பு நிருபர்)

ஏற்றுமதி கைத்தொழில் அபிவிருத்திச் சபை மற்றும் தேசிய தொழில்முயற்சி அதிகாரசபை ஆகிய இரு சபைகளின் அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் 2022 செயற்றிட்டம் மற்றும் கடந்த வருடத்திற்கான

மீளாய்வுக் கூட்டம் மட்டு. மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் (27) நடைபெற்றது.

மாவட்டத்தின் ஏற்றுமதி கைத்தொழிலை அதிகரிப்பதையும் அவற்றுக்கான சிறந்த சந்தை வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுப்பதையும் ஏற்றுமதி உற்பத்தியாளர்களின் தரவுகளை சேகரிப்பது தொடர்பாகவும் கவனம் செலுத்தப் பட்டது.

இதன்போது உத்தியோகத்தர்களின் நடைமுறை பிரச்சினைகள் மற்றும் கிழக்கு மாகாணத்திற்கு ஏற்றுமதி கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் உதவிப் பணிப்பாளர் ஒருவரை நியமித்துத் தருமாறு உத்தியோகத்தர்களினால் கோரிக்கை வைக்கப்பட்டது.

இந்நிகழ்வு உதவி மாவட்ட செயலாளர் ஏ.நவேஸ்வரன் தலைமையில், தேசிய தொழில்முயற்சி அதிகாரசபையின் மாவட்ட இணைப்பாளர் கீதா சதாகரன் ஒழுங்கமைப்பில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் ஏற்றுமதி கைத்தொழில் மாவட்ட உத்தியோகத்தர்களின் பங்குபற்றுதலுடன் 14 பிரதேச செயலக அபிவிருத்தி உத்தியோகத்தர்களும் கலந்துகொண்டனர்.

LK Newspapers Viber Community

ஹட்டன் டிக்கோயாவில் பஸ் விபத்து: ஒருவர் உயிரிழப்பு; 16 பேர் படுகாயம்!

(க.கிஷாந்தன், எம். கிருஸ்ணா)

ஹட்டன் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட டிக்கோயா சலங்கந்தை - ஹட்டன் பிரதான வீதியின் தரவளை பட்டல்கலை பகுதிக்கு அருகில் இடம்பெற்ற பஸ் விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன், 16 பேர் படுகாயமடைந்து டிக்கோயா கிளங்கன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்து நேற்று (28) காலை 6.45 மணியளவில் இடம்பெற்றுள்ளதாகவும் தெரிவித்தனர்.

சலங்கந்தை பகுதியிலிருந்து ஹட்டனிலுள்ள தனியார் தொழிற்சாலை ஒன்றுக்கு தொழிலாளர்களை ஏற்றிக்கொண்டு பயணித்தபோது, வீதியை விட்டு விலகி சுமார் 30 அடி பள்ளத்தில் பாய்ந்து இந்த பஸ் விபத்துக்குள்ளாகியுள்ளதாக பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது.

எதிரே வந்த இலங்கை போக்குவரத்து சபைக்குச் சொந்தமான பஸ் ஒன்றுக்கு வழிவிட முயன்றபோதே, குறித்த தனியார் பஸ் இவ்வாறு பள்ளத்தில் விழ்ந்து விபத்துக்குள்ளாகியுள்ளது.

விபத்தில் பஸ் சாரதி உட்பட 16 பேர் படுகாயமடைந்த நிலையில், டிக்கோயா கிளங்கன் வைத்தியசாலையில் சிகிச்சைபெற்று வருவதோடு, ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இவ்வாறு உயிரிழந்தவர் டிக்கோயா போடைஸ் பகுதியைச் சேர்ந்த 62 வயதுடைய பெர்னாண்டோ மரியசவாரி என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

குறித்த பஸ்ஸின் சாரதி ஹட்டன் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளதோடு, அவரை ஹட்டன் நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

இந்த விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை ஹட்டன் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

நீரேந்தும் பிரதேசங்களிலுள்ள காட்டுப்பகுதிகளுக்கு தீ வைப்பு

நீர்த் தட்டுப்பாடு ஏற்படும் அபாயம்

(க.கிஷாந்தன்)

வறட்சியான காலநிலையினையடுத்து மலையக நீர்த்தேக்கங்களுக்கு சமீபமாக நீரேந்தும் பிரதேசங்களிலுள்ள காட்டுப்பகுதிகளுக்கு இனந்தெரியாத விஷமிகள் தொடர்ச்சியாக தீ வைத்து வருவதனால் பாரியளவில் குடிநீர்த் தட்டுப்பாடு ஏற்படும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

காசல்ரீ நீர்த்தேக்கத்திற்கு கரையோர நீர்ப்பாசன பிரதேசமாக காணப்படும் வனராஜா கெந்தகொலை காட்டுப்பகுதிக்கு நேற்றுமுன்தினம் (27) இரவு இனந் தெரியாதவர்கள் தீ வைத்ததன் காரணமாக அப்பகுதியில் பல ஏக்கர் வனப்பகுதி தீக்கிரையாகியுள்ளது.

குறித்த பகுதிக்கு தீ வைத்ததன் காரணமாக அப்பகுதியிலுள்ள நீரூற்றுகள் அற்றுப்போவதுடன், சிறிய வகை உயிரினங்கள், எமது பிரதேசத்திற்கே உரித்தான அறிய வகை தாவரங்கள் ஆகியன அழிவடையும் நிலையினை எதிர்நோக்கியுள்ளன.

வறட்சியான காலநிலையினையடுத்து பல பிரதேசங்களில் தற்போது குடிநீர்த் தட்டுப்பாடு நிலவி வருகிறது. இந்நிலையில், தொடர்ச்சியாக வனப்பகுதிகளுக்கு தீ வைப்பதனால் இந்நிலை மேலும் அதிகரித்து நீரின்றி பல்வேறு பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்க நேரிடலாம்

என பிரதேசவாசிகள் சுட்டிக்காட்டுகின்றனர்.

இதேநேரம், நீர்ப்பாசன பிரதேசங்களிலுள்ள காட்டுப்பகுதிக்கு தீ வைப்பதனால் தேசிய மின் உற்பத்திக்கும் பாதிப்பு ஏற்படலாம். எனவே, காடுகளுக்கு தீ வைப்பவர்களை உடன் கைதுசெய்து சட்டத்தின் முன் நிறுத்தவேண்டும் என பொதுமக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

மிருகங்களை வேட்டையாடுவதற்கும் பொழுதுபோக்குக்காகவும் குறித்த காட்டுப்பகுதிகளுக்கு சில விஷமிகளால் தீ வைக்கப்படுவதாக பாதுகாப்புத் தரப்பு தெரிவிக்கின்றது. எனவே, வனப்பகுதிகளை விஷமிகளிடமிருந்து பாதுகாப்பதற்குரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என சூழல் ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டுகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

சேதனப் பசளை உற்பத்தி இயந்திரங்கள் மன்னார் உயிலங்குளத்தில் வழங்கிவைப்பு

மன்னார் மாவட்ட விவசாய திணைக்களத்தினால் நடைமுறைப்படுத்தப்படும் சேதனப் பசளைகள் மற்றும் சேதன திரவ பசளைகளை உற்பத்திசெய்யும் நோக்கோடு தெரிவுசெய்யப்பட்ட சுமார் 60 பயனாளிகளுக்கான சேதனப் பசளைகள் உற்பத்திசெய்யும் இயந்திரம் மற்றும் அதற்கான உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு உயிலங்குளம் பயிற்சி நிலையத்தில் வைத்து பயனாளிகளுக்கு வழங்கப்பட்டது.

வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் காதர் மஸ்தான் பிரதம அதிதியாக கலந்துகொண்டு குறித்த பயனாளிகளுக்கான இயந்திர உபகரணங்களை கையளித்தார்.

இந்நிகழ்வில் மாகாண பிரதி விவசாயப் பணிப்பாளர் எஸ். உதயசந்திரன், கமநல சேவைகள் திணைக்கள உதவி ஆணையாளர் மெரின் குமார் மற்றும் கால்நடை, சுகாதார உற்பத்தித் திணைக்கள அதிகாரிகள், பயனாளிகள் எனப் பலரும் குறித்த நிகழ்வில் கலந்துகொண்டனர்.

பூகொடை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி மீது தாக்குதல்

சந்தேகத்தின்பேரில் நால்வர் கைது

பிடியாணை பிறப்பிக்கப்பட்ட நபரொருவரை கைதுசெய்ய சென்ற பூகொடை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. இந்தத் தாக்குதல் சம்பவத்தில் காயங்களுக்குள்ளான பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி சிகிச்சைக்காக கம்பஹா மாவட்ட பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நீதிமன்ற உத்தரவுக்கமைய பிடியாணை பிறப்பிக்கப்பட்ட நபரொருவரை கைது செய்வதற்காக சென்ற சந்தர்ப்பத்தில் அவர் இனந்தெரியாத நபர்களால் தடியால் தாக்கப்பட்டுள்ளார். கடுங்காயங்களுக்குள்ளான அவர் கம்பஹா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்தத் தாக்குதல் சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தின் அடிப்படையில், சந்தேகநபர்கள் நால்வர் கைதுசெய்யப்பட்டுள்ளதுடன், மேலும் மூவரை கைதுசெய்வதற்கான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் மேலும் குறிப்பிட்டுள்ளனர்.

13ஆவது திருத்தத்துக்கு அமைச்சர் டக்ளஸிடம் ஆதரவு கோரினார் கூட்டமைப்பு எம்.பி. சுமந்திரன்

நாடாளுமன்ற உறுப்பினர் திலீபன் வவுனியாவில் தெரிவிப்பு

(வவுனியா செய்தியாளர்)

13ஆவது திருத்தச் சட்டத்திற்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் சுமந்திரன் ஆதரவு கோரினார் - என வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், வவுனியா மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவருமான கு.திலீபன் தெரிவித்துள்ளார்.

வவுனியாவில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றின்போது ஊடகவியலாளரின் கேள்விக்கு பதில் அளிக்கும்போதே இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

மக்கள் தற்போது விழிப்படையக்கூடிய தருணம். 13ஆவது திருத்தச் சட்டத்தை கஜேந்திரன் தரப்பு எதிர்க்கிறது. கூட்டமைப்பு அதனை ஆதரிக்கிறது.

நாடாளுமன்ற விருந்தினர் விடுதியில் நானும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவும் இருந்தபோது சுமந்திரன் வந்து, "அண்ணா 13ஆவது திருத்தச் சட்டம் சம்பந்தமாக தமிழ் எம்.பிமார் சேர்ந்து கலந்துரையாடி அதனை வலுப்படுத்துவோம்" என்றார்.

அப்போது நானும் அதற்கு உறுதுணையாக இருப்பேன் என அமைச்சர் டக்ளஸ்

தேவானந்தா கூறியிருந்தார். சுமந்திரன் சென்ற பின் அமைச்சரிடம் எனக்கு அனுபவம் தெரிந்த நாள்முதல் நீங்கள் இதனை சொல்லி வருகிறீர்கள். இன்றைக்குத்தான் சுமந்திரனுக்கு ஞானம் பிறந்துள்ளது. இன்றைக்கு உங்களிடம் வந்துள்ளார்கள் என்றபோது, அவர்களுக்கு இப்போதுதான் ஞானம் வந்துள்ளது. அதனை நாமும் முன்மொழிவோம் என்றார்.

13ஆவது திருத்தச் சட்டம் அன்றிலிருந்து இன்றுவரை நாம் செல்லி வந்த விடயம். இப்ப அந்த இடத்திற்குதான் வந்துள்ளார்கள். மக்கள் தான் இதனை விளங்கிக்கொள்ள வேண்டும். கூட்டமைப்பா, கஜேந்திரகுமாரா என்பதை மக்கள் விளங்கிக்கொள்ள வேண்டும். இரண்டும் தரப்பாலும் பயனில்லை என்று அவர் மேலும் தெரிவித்தார்.

வரலாற்றுச் சிறப்புமிக்க இணுவில் பரராஜசேகரபிள்ளையார் ஆலய மகா கும்பாபிஷேகம் எதிர்வரும் பெப்ரவரி 6ஆம் திகதி நடைபெறவுள்ளது. கும்பாபிஷேக கிரியைகளுக்காக நேற்றுமுன்தினம் கணபதி ஹோமம் ஆரம்பமாகியுள்ளது. எதிர்வரும் 3ஆம் திகதி மதியம் 12 மணிமுதல், மறுநாள் 4ஆம் திகதி இரவு 10 மணிவரையில் எண்ணெய்க்காப்பு இடம்பெறவுள்ளது. எதிர்வரும் 06ஆம் திகதி காலை 8 மணிமுதல் காலை 10.26 மணிவரையிலான சுபமுகூர்த்தத்தில் மஹாகும்பாபிஷேகம் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(யாழ். செய்தியாளர்)

கொரியாவினால் வழங்கப்படும் தொழில்வாய்ப்புகளில் பெருந்தோட்ட இளைஞர் - யுவதிகளையும் இணையுங்கள்

முன்னாள் எம்.பி. டி.வி.சென்னன் கோரிக்கை

(பதுளை நிருபர்)

கொரியா நாட்டின் சபாநாயகருக்கும் பிரதமருக்குமிடையே இடம்பெற்ற பேச்சுவார்த்தையில், எமது நாட்டின் இளைஞர், யுவதிகளுக்கு கொரியா நாட்டில் தொழில்வாய்ப்புகளைப் பெற்றுக்கொள்ள இணக்கம் காணப்பட்டுள்ளது. இணக்கப்பாட்டின் அடிப்படையில் வழங்கப்படும் தொழில்வாய்ப்புகளில் மலையகப் பெருந்தோட்ட இளைஞர், யுவதிகளையும் உள்ளடக்க நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு முன்னாள் பதுளை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் டி.வி.சென்னன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

முன்னாள் எம்.பி. டி.வி.சென்னன் மற்றும் தொழில் அமைச்சரும் பதுளை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான நிமால் சிறிபால டி சில்வாவிற்கும் இடையில் சந்திப்பொன்று பதுளை பணியகத்தில் நேற்று (28) இடம்பெற்றது.

அச்சந்திப்பின்போதே, முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர், தொழில் அமைச்சிடம் இந்த வேண்டுகோளை விடுத்தார்.

அதன்படி, பெருந்தோட்ட இளைஞர், யுவதிகளில் பெரும்பாலானோர் கொழும்பு போன்ற வெளி மாவட்டங்களில் தொழில்செய்து வந்தனர். கொவிட்-19 தாக்கங்களினால் அவர்கள் தொழிலை விட்டு தோட்டங்களுக்கே திரும்பி வந்து, வேறு தொழில்வாய்ப்புகளுமின்றி, தம் பெற்றோருக்கு சுமையாகவே இருந்துவருகின்றனர்.

எனவே, நாடு இன்னும் பூரண இயல்புநிலைக்குத் திரும்பாதலால், இளைஞர், யுவதிகள் மீளவும் தொழிலுக்கு செல்ல முடியாத பெரும் அவலங்களை எதிர்கொண்டுள்ளனர். இந்த இளைஞர், யுவதிகள் தொழில் செய்த நிறுவனங்களும் மூடப்பட்டுள்ளதால், தொழில் வாய்ப்புகளையும் மீளவும் பெற முடியாதுள்ளது.

ஆகையினால், மலையகப் பெருந்தோட்ட இளைஞர், யுவதிகளை கருத்திற்கொண்டு, கொரியா நாட்டு வேலை வாய்ப்புகளின்போது, அவர்களையும் உள்ளடக்குமாறு தொழில் அமைச்சரிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

தங்களின் அளப்பரிய சேவையினால் பதுளை மாவட்டம் பல்வேறு துறைகளிலும், அபிவிருத்தியடைந்த ஏனைய மாவட்டங்களைபோன்று முன்னணியில் இருந்துவருகின்றது. தங்களிடம் இன, மத, பேதமில்லாத நிலையிருப்பதால், தங்களின் சேவைகள் பரவலாக்கப்படுகின்றன. தாங்கள் சுகாதார அமைச்சராக இருந்த காலகட்டத்தில் வழங்கப்பட்ட தொழில் வாய்ப்புகளில் தமிழ், சிங்கள, இளைஞர், யுவதிகள் ஆயிரக்கணக்கில் ஈடுபடுத்தப்பட்டிருக்கின்றனர்.

இதுபோன்று, தொழில் அமைச்சராக தாங்கள் இருப்பதால், மலையக பெருந்தோட்டப் பகுதி இளைஞர், யுவதிகளை கொரியா நாட்டு தொழில்வாய்ப்புகளுக்குட்படுத்துவதை இலகுவான செயலாகவே காண்கின்றேன் - என்றார்.

முன்னாள் பதுளை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் டி.வி.சென்னன் விடுத்த கோரிக்கையை செவிமடுத்த தொழில் அமைச்சர், தொழில் வாய்ப்புகள் இடம்பெறும்போதெல்லாம், இன, மத, பேதமின்றி இளைஞர், யுவதிகளுக்கு தொழில்வாய்ப்புகளை ஏற்படுத்திக்கொடுப்பேன். இத் தொழில் வாய்ப்புகளில், பெருந்தோட்டப்புற இளைஞர், யுவதிகளும் உள்ளடங்குவர் என்று பதிலளித்தார்.

திகதி 2022.01.27 வியாழக்கிழமை www.nlb.lk உத்தியோகபூர்வ முடிவுகள் NLB

மஹஜன சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் : 4660
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 10,500,280.00
ஆங்கில எழுத்து J | வெற்றி இலக்கங்கள் 1 3 8 8 3 8 | அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 34,353,970.00

கோவிசுத
சீட்டிழுப்பு இலக்கம் : 2955
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 5,046,720.00
ஆங்கில எழுத்து C | வெற்றி இலக்கங்கள் 44 58 64 79 | அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 60,805,373.20

Mega POWER மேகா பவர் மெகா பவர் 10
சீட்டிழுப்பு இலக்கம் 1008
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 14,049,180.00
மெகா இலக்கம் 06324
அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ. 193,976,246.00
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
ஆங்கில எழுத்து U | வெற்றி இலக்கங்கள் 10 38 41 53 78

தன நிதானய
சீட்டிழுப்பு இலக்கம் : 690
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 2,999,600.00
ஆங்கில எழுத்து B | வெற்றி இலக்கங்கள் 06 44 74 76 | அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 94,421,865.60

சேவன
சீட்டிழுப்பு இலக்கம் : 351
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 2,373,400.00
ஆங்கில எழுத்து B | வெற்றி இலக்கங்கள் 39 70 71 92 | அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 14,249,738.40

ஹந்தஹன
சீட்டிழுப்பு இலக்கம் : 01
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 43,363,431.60
இலக்கம் இடம் | வெற்றி இலக்கங்கள் 05 08 11 20 | அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு 2,500,000.00

தேசிய லொத்தரசீட்டு மன்பதுவ
தேசிய லொத்தரி சபை
National Lotteries Board
தொலைபேசி: 0114 607 000, 0112 324 324
ஃபக்ஸ்: 0114 669 416

LK Newspapers Viber Community

சிறந்த கல்வியை பெறுவதன் மூலமே பயனுள்ள மனிதர்களாக மாற முடியும்

குயில்வத்தை பாடசாலையில் அருட்கலாநிதி சந்ரு தெரிவிப்பு

(க.கிஷாந்தன்)

மலையகத்தில் மாணவர்கள் சிறந்த கல்வியினை பெறுவதன் மூலமே சமூகத்தில் நல்ல பயனுள்ள மனிதர்களாக மாற்றம் பெற முடியுமென பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் மத விவகாரங்களுக்கான இணைப்புச் செயலாளரும் சர்வதேச இசைக் கல்விக்கான பயிற்சி நிலையத்தின் இலங்கைத் தூதுவரும், அகில இலங்கை கிறிஸ்தவ அபிவிருத்தி ஒன்றியத்தின் தலைவருமான அருட்கலாநிதி எஸ். சந்ரு பொன்னாண்டோ தெரிவித்தார்.

மலையக மாணவர்களின் கல்வி மேம்பாடு கருதி, மாணவர்களின் பயன்பாட்டுக்காக போட்டோ பிரதி இயந்திரம் மற்றும் புத்தகப் பைகள் வழங்கும் நிகழ்வு ஹட்டன் கல்வி வலயத்திற்குட்பட்ட ஹட்டன் குயில்வத்தை தமிழ் மகா வித்தியாலயத்தில் கல்லூரியின் அதிபர் எம்.வேல்முருகன் தலைமையில் நேற்றுமுன்தினம் (27) இடம்பெற்றது.

இந்நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில்,

நான் இந்த இடத்தில் பேசுவதற்கு காரணம், உங்களைப்போன்று சிறந்த முறையில் கல்வி கற்றதனால் தான். ஆகவே இவ்வாறு பலர் உருவாக வேண்டும் என்ற எண்ணத்தில் நாங்கள் கல்வி மேம்பாட்டுக்காக பல உதவிகளை செய்து வருகிறோம். அதனை பெற்று நீங்களும் இந்த சமூகத்திற்கு பயனுள்ள மனிதர்களாக மாற வேண்டும்.

இன்று கடுமையான பாதைகளை கடந்து வந்தவர்கள் தான் உலகில் பல சாதனைகளை படைத்துள்ளனர். மலையகத்தில் இன்று கலை பட்டதாரிகள் அதிகமாக உள்ளனர். அதனையிட்டு, நாங்கள் சந்தோஷமடையும் அதேவேளை எதிர்காலத்தில் சமூகத்தில் மாற்றத்தினை ஏற்படுத்தக்கூடிய அரசியல் பொருளாதாரத்துறைகளில் நாம் விருத்திகாண வேண்டும்.

இன்றைய சூழ்நிலையில், தொழில்நுட்பத் தினூடாக நாம் வர்த்தகத்துறையில் தேடிநுழைய வேண்டும். அப்போது தான் எம்மை நாம் உயர்த்திக்கொள்ள முடியும். ஹட்டன் பகுதியில் பல பிரபல பாடசாலைகள் பொறியியலாளர்கள், மருத்துவர்கள் போன்ற துறைகளுக்கு மாணவர்களை அனுப்பி வைத்த போதிலும் முழு மலையகத்தினை பொருத்தமட்டில் அது போதுமானதாக அல்ல. ஆகவே, நீங்கள் எங்களுக்கு செய்யும் உதவி சிறந்த முறையில் கல்வியினை பெற்று இந்த சமூகத்தினை மாற்றக்கூடிய வல்லமை உள்ளவர்களாக மாற வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார்.

இதன்போது மாணவர்களின் கலை கலாசார நிகழ்வுகளும் இடம்பெற்றன.

இந்நிகழ்வில், ஹட்டன் பிரதேச பொலிஸ் அதிகாரி, வேர்ல்ட் விஷன் ஸ்ரீலங்காவின் செயற்றிட்ட முகாமையாளர் மனோஜ் ஜூட் தவராஜா ஆகியோர் கௌரவ அதிதிகளாகவும் ஹட்டன் ஹைலன்ட்ஸ் தேசிய பாடசாலையின் ஆசிரியர்களான டீ. ஜஸ்டீன் செல்வகுமார், என். முருகானந்தன் மற்றும் மத விவகாரங்களுக்கான செயலாளரின் நுவரெலியா மாவட்ட இணைப்பாளர் ஏ.டீ. முரளி, நோர்வூட் பிரதேசத்தின் சமூர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் எஸ்.நிசாரியேஸ் ஆகியோர் விசேட அதிதிகளாகவும் கலந்து சிறப்பித்தனர்.

மன்னாரில் இயற்கையான முறையில் பயிரிடப்பட்ட ஒரு இலட்சம் கிலோ பூசணி, தர்ப்பூசணி அறுவடை

(மன்னார் நகர் செய்தியாளர்)

மன்னார் முசலி பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட கொண்டைச்சி பகுதியில் இலங்கை கஜூ கூட்டுத்தாபனத்தால் இயற்கையான முறையில் பயிரிடப்பட்ட தர்ப்பூசணி, பூசணி மற்றும் கெக்கரிக் காய் பயிர்ச்செய்கையின் அறுவடை நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை கொண்டச்சி மரமுந்திரிகை பண்ணையில் இடம்பெற்றது.

இலங்கை மரமுந்திரிகை கூட்டுத்தாபனத்தின் பணிப்பாளர் சட்டத்தரணி சாரங்க ரத்னாயக்க மற்றும் கூட்டுத்தாபன அதிகாரிகள் இணைந்து குறிப்பிட்ட அறுவடை செயற்பாட்டை ஆரம்பித்து வைத்தனர்.

கடந்த நவம்பர் மாதம் மேற்கொள்ளப்பட்ட பயிர்ச்செய்கையானது முற்று முழுதாக இயற்கையான முறையில் மேற்கொள்ளப்பட்டு மூன்று மாதங்களின் பின்னர் நேற்றுமுன்தினம் அறுவடை செய்யப்பட்டுள்ளது.

இலங்கை மரமுந்திரிகை கூட்டுத் தாபனத்திற்கு சொந்தமான 250 ஏக்கர் நிலத்தின் மேற்படி பயிர்ச் செய்கை மேற்கொள்ளப்பட்டதுடன் குறித்த அறுவடையில் ஒரு இலட்சம் கிலோ மதிப்பிடக்கூடிய பூசணிக்காய்களும் 25ஆயிரம் கிலோ கொண்ட தர்ப்பூசணிகளும் 30ஆயிரம் கிலோ கெக்கரிக் காய்களும் அறுவடை செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

பால் உற்பத்தி கிராமத்துக்கான உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு

இணுவிலில் அங்கஜன் எம்.பி. ஏற்பாடு

(சாவகச்சேரி செய்தியாளர்)

சௌபாக்கியா உற்பத்திக் கிராமமாக தெரிவு செய்யப்பட்ட உடுவில் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட இணுவில் பால் உற்பத்திக் கிராமத்திற்கான உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு கடந்த புதன்கிழமை உடுவில் பிரதேச செயலகத்தில் இடம்பெற்றிருந்தது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுத்தலைவர் அங்கஜன் இராமநாதன் எம்.பி. கலந்துகொண்டு உற்பத்திக் கிராமத்திற்கான பொருட்களை வழங்கி வைத்திருந்தார்.

கிராமிய பொருளாதாரத்தை மேம்படுத்தும் பொருட்டு, 75இலட்சம் ரூபா நிதி ஒதுக்கீட்டில் இணுவிலில் பால் உற்பத்திக்கிராமம் மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவர் அங்கஜன் இராமநாதனினால் அண்மையில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

உற்பத்திக் கிராமத்திற்கான பொருட்கள் கையளிப்பு நிகழ்வின் பின்னர் நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் கருத்து தெரிவிக்கையில்,

சௌபாக்கியா உற்பத்திக் கிராமமாக தெரிவு செய்யப்பட்ட இணுவில் பால் சார்ந்த உற்பத்திக் கிராமத்திற்கான குழு ஒன்று தெரிவு செய்யப்பட்டு அதற்கு தேவையான பொருட்கள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

வெகு விரைவில் பால் சார்ந்த உற்பத்திப் பொருட்களை தயாரித்து அதனூடாக தமது கிராமத்தை முன்னேற்றுவார்கள். ஜனாதிபதியின் கொள்கைத் திட்டத்திற்கு அமைவாக சமூர்த்தி அமைச்சின் ஊடாக முன்னெடுக்கப்படும் வேலைத்திட்டம் இதுவாகும்.

இந்த வேலைத்திட்டத்தின் கீழ் நாடு பூராகவும் 500 கிராமங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளன. அந்த வகையில், யாழ். மாவட்டத்தில் 16 சௌபாக்கியா உற்பத்திக் கிராமங்கள் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டு அவற்றுக்கான பொருட்களும் வழங்கி வைக்கப்படுகின்றன என்றார்.

கந்தக்காடு இராணுவ பண்ணையில் நெல் அறுவடை

அரசாங்கத்தினால் நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் "பசுமை விவசாய" திட்டத்திற்கமைய, கந்தக்காடு இராணுவ பண்ணையில் சேதனப் பசளையை பயன்படுத்தி மேற்கொள்ளப்பட்ட நெற்செய்கை கடந்த திங்கட்கிழமை (24) அறுவடை செய்யப்பட்டது.

இலங்கை இராணுவ விவசாய மற்றும் கால்நடை படையணியின் கட்டளை அதிகாரி லெப்டினன் கேர்னல் டீ.எல்.சீ.என்.முத்தந்திரிகவின் வழிகாட்டலுக்கமைய, கந்தக்காடு இராணுவ முகாமின் சிப்பாய்களினால் 180 ஏக்கருக்கும் மேற்பட்ட பரப்பில் விளைவிக்கப்பட்ட நெல் அறுவடை செய்யப்பட்டது.

புதையல் தோண்டிய ஐவர் பலாங்கொடையில் கைது

(ஏ.ஏ.எம்.பாயிஸ்)

பலாங்கொடை பெலிஹுல்ஓய இஹலகல பகுதியில் புதையல் தோண்டிய ஐவரை சமனலவெவ பொலிஸார் புலிச்சரிதவியல் திணைக்கள அதிகாரிகளின் உதவியுடன் கைது செய்துள்ளனர்.

பொலிஸாருக்கு கிடைத்த இரகசியத் தகவலையடுத்து, புலிச்சரிதவியல் திணைக்கள அதிகாரிகளின் ஒத்துழைப்புடன் புதையல் தோண்டப்பட்ட இடம் முற்றுகையிடப்பட்டு சந்தேக நபர்கள் ஐவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அத்துடன் இச்செயற்பாடுகளுக்கு பயன்படுத்தப்பட்ட பொருட்கள், உபகரணங்கள் சிலவற்றையும் பொலிஸார் மீட்டுள்ளனர். சந்தேக நபர்களில் இருவர் கொழும்பு பிரதேசத்தையும் மூவர் பலாங்கொடை பிரதேசத்தையும் சேர்ந்தவர்கள் என்பது விசாரணைகள் மூலம் தெரியவந்துள்ளது. இச்சம்பவம் தொடர்பில் சமனலவெவ பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

கிளிநொச்சி மாவட்ட நீதிமன்ற கட்டடத் தொகுதி திறந்துவைப்பு

(கிளிநொச்சி நிருபர்)

சுமார் 300 மில்லியன் ரூபா செலவில் புதிதாக அமைக்கப்பட்ட கிளிநொச்சி மாவட்ட நீதிமன்ற கட்டடத் தொகுதியை பிரதம அதிதிகளாக நீதி அமைச்சர் அலிசப்ரி மற்றும் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஆகியோர் கலந்துகொண்டு நேற்று முன்தினம் திறந்துவைத்தனர்.

கிளிநொச்சி மாவட்ட நீதவான் மன்றத்தினால் முன்னெடுக்கப்படும் நடவடிக்கை குற்றவியல் ஆகிய வழக்குகள் ஒரே நீதவான் நீதிமன்றில் மேற்கொள்ளப்பட்டது. தற்போது புதிதாக சுமார் 300 மில்லியன் ரூபா செலவில் அமைக்கப்பட்ட நீதிமன்ற கட்டடத் தொகுதியில் நீதவான் நீதிமன்றம், மாவட்ட நீதிமன்றம், மேல் நீதிமன்றம் ஆகிய மூன்று நீதிமன்றங்கள் தனித்தனியாக ஒரே வளாகத்தில் புதிதாக அமைக்கப்பட்ட மூன்று மாடிகள் கொண்ட நீதிமன்ற கட்டடத் தொகுதியில் இயங்குவது மாவட்டத்திற்கு கிடைத்த சிறப்பம்சமாகும்.

இந்நிகழ்வில் நீதி அமைச்சின் செயலாளர், வடமாகாண பிரதம செயலாளர், பந்துலசேன, கிளிநொச்சி அரசாங்க அதிபர் ரூபவதி கேதீஸ்வரன், வவுனியா மாவட்ட மேல் நீதிமன்ற நீதிபதி இளஞ்செழியன், கிளிநொச்சி மாவட்ட நீதவான் எஸ்.லெனின்குமார் மற்றும் சட்டத்துறையைச் சேர்ந்தவர்கள் எனப் பலர் கலந்துகொண்டார்கள்.

வெளிநாட்டு அமைச்சின் மேலதிகச் செயலாளராக கடமையாற்றிய ஏ.எம்.சாதிக் மாலைதீவு நாட்டுக்கான உயர்ஸ்தானிகராக தனது கடமைகளை பொறுப்பேற்றுக் கொண்டார். இவருக்கான நியமனத்தினை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.
(அஷ்ரப் ஏ.சமத்)

கொவிட் நிலைமை காரணமாக

வவுனியா குடிவரவு – குடியகல்வு திணைக்களத்துக்கு பூட்டு

(வவுனியா நிருபர்)

கொவிட் தொற்று காரணமாக குடிவரவு-குடியகல்வு திணைக்களத்தின் வவுனியா பிராந்திய காரியாலயம் தற்காலிகமாக மூடப்பட்டது.

குடிவரவு - குடியகல்வு திணைக்களத்தின் வவுனியா பிராந்திய காரியாலயத்தில் கடமையாற்றும் இரு உத்தியோகத்தர்களுக்கு நேற்று முன்தினம் (27) கொவிட் தொற்று உறுதிசெய்யப்பட்டது.

இதனையடுத்து குடிவரவு-குடியகல்வுத் திணைக்களத்தின் கடவுச்சீட்டு விநியோகம், கடவுச் சீட்டு விண்ணப்பம் பெறுதல் என அனைத்து செயற்பாடுகளும் மறு அறிவித்தல்வரை நிறுத்தப்பட்டு பிராந்திய காரியாலயம் தற்காலிகமாக மூடப்பட்டுள்ளது.

தொற்றுக்குள்ளானவர்கள் சிகிச்சைக்காக தனிமைப்படுத்தப்பட்டுள்ளதுடன், அவர்களுடன் தொடர்பில் இருந்த உத்தியோகத்தர்களுக்கும் கொவிட் பரிசோதனை மேற்கொள்ள சுகாதாரப் பிரிவினர் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

முசலி தேசிய பாடசாலையில் இரு மாடிக் கட்டிடம் அமைக்க அடிக்கல் நாட்டிவைப்பு

(மன்னார் நகர் நிருபர்)

மன்னார் கல்வி வலயத்திற்குட்பட்ட முசலி தேசிய பாடசாலையில் ஐ.எஸ்.ஆர்.சி. அமைப்பின் நிதி உதவியுடன் அமைக்கப்படவுள்ள இரண்டு மாடிக் கட்டிடத்திற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு நேற்று முன்தினம் வியாழக்கிழமை (27) காலை 9.30 மணியளவில் பாடசாலையின் அதிபர் தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் விருந்தினர்களாக வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் காதர் மஸ்தான், வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் ஐ.வரதீஸ்வரன் உட்பட அதிதிகள் கலந்துகொண்டு அடிக்கல்லை நாட்டிவைத்தனர்.

இதன்போது முசலி பிரதேச செயலாளர், பெற்றோர்கள் மற்றும் மாணவர்கள் கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

Lk Newspapers Viber Group

டயகம சந்திரிகாம குடியிருப்பில் திடீர் தீ விபத்து; மூவர் பாதிப்பு

(க.கிஷாந்தன்)

டயகம பொலிஸ் பிரிவிற்குட்பட்ட சந்திரிகாமம் தோட்ட குடியிருப்பில் கடந்த 26ஆம் திகதி இரவு ஏற்பட்ட திடீர் தீ விபத்தில் லயன் குடியிருப்பில் வீடொன்றுக்குள் ஏற்பட்ட தீயினால் குறித்த வீடு முற்றாக எரிந்துள்ளது. இதனால் இந்த வீட்டிலிருந்த 3 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

தீ ஏற்பட்டபோது வீட்டில் இருந்தவர்கள் கூச்சலிட்டதையடுத்து, அயலவர்கள் ஓடி வந்து ஏனைய வீடுகளுக்கு தீ பரவாமல் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துள்ளனர்.

முற்றாக எரிந்த குறித்த வீட்டின் வீட்டு உபகரணங்கள், பெறுமதியான ஆவணங்கள், தங்க நகைகள், உடுதுணிகள் என பெருமளவிலான பொருட்கள் தீக்கிரையாகியுள்ளன.

இதேவேளை தீ விபத்து தொடர்பாக டயகம பொலிஸ் நிலையத்திற்கும், தோட்ட நிர்வாகத்திற்கும் பிரதேசவாசிகளால் தகவல் அளிக்கப்பட்டுள்ளது. அதன்பின் சம்பவ இடத்திற்கு விரைந்த பொலிஸார் தீ பரவலுக்கான காரணங்களை கண்டறிய மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதோடு, தோட்ட நிர்வாகம் இவர்களுக்கு தேவையான உதவிகளையும் செய்து வருகின்றது.

இலங்கை - உக்ரைனிய வர்த்தகர்களுடனான சந்திப்பில் விவசாயம், சுற்றுலா, உற்பத்தித்துறை குறித்து ஆராய்வு

மெய்நிகர் வழியில் இராஜாங்க அமைச்சர் பாலசூரிய ஆரம்பித்து வைத்தார்





இலங்கை வர்த்தக சம்மேளனத்தின் உறுப்பினர்களுக்கும் உக்ரைனிய வர்த்தக சம்மேளனத்திற்கும் இடையில் வர்த்தக வலையமைப்பு மற்றும் இணைப்பு அமர்வை பிராந்திய ஒத்துழைப்புக்கான இராஜாங்க அமைச்சர் தாரக்க பாலசூரிய, கடந்த 20ஆம் திகதி வியாழக்கிழமை மெய்நிகர் வழியாக ஆரம்பித்து வைத்தார். இந்த நிகழ்வு, கடந்த ஆண்டு உக்ரைனுக்கு இராஜாங்க அமைச்சர் மேற்கொண்ட விஜயத்தின் தொடர்ச்சியாக ஏற்பாடு செய்யப்பட்ட நிகழ்வாகும்.

இச் சந்திப்பில் உரையாற்றிய இராஜாங்க அமைச்சர் தாரக்க பாலசூரிய, சுற்றுலா, விவசாய உற்பத்திகள், தகவல் தொழில்நுட்பத் துறை, ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி தொடர்பான முதலீடுகள் போன்றவற்றில் இரு நாடுகளிலும் உள்ள ஒத்துழைப்பின் அதிக வாய்ப்புகள் மற்றும் வழிகளை ஆராய்வதன் முக்கியத்துவத்தை வலியுறுத்தினார். அண்டை நாடுகளுடன் இலங்கை ஏற்படுத்திக் கொண்ட சுதந்திரமான மற்றும் முன்னுரிமை அடிப்படையிலான வர்த்தக உடன்படிக்கைகளின் காரணமாக, உக்ரைனிய நிறுவனங்கள் இலங்கைக்கு வழங்கப்பட்டுள்ள சலுகைகளைப் பயன்படுத்தி பிராந்தியத்தில் கிடைக்கும் அபரிமிதமான சந்தை வாய்ப்புகளை அடைய முடியும் என இராஜாங்க அமைச்சர் மேலும் சுட்டிக்காட்டினார்.

உக்ரைனிய வர்த்தக மற்றும் கைத்தொழில் சம்மேளனத்தின் தலைவர் ஜெனடி சிஜிகோவ் மற்றும் இலங்கை வர்த்தக சம்மேளனத்தின் தலைவர் விஷ் கோவிந்தசாமி ஆகியோரும் இந்த அமர்வில் உரையாற்றியதுடன், வர்த்தகம், முதலீடு மற்றும் சுற்றுலா ஆகியவற்றின் அடிப்படையில் பயன்படுத்தப்படாத திறனைப் பயன்படுத்துவதற்கு உறுப்பினர்களிடையே வழக்கமான தொடர்புகளின் முக்கியத்துவத்தை வலியுறுத்தினர்.

விவசாய உற்பத்திகள், சுற்றுலா, விருந்தோம்பல்துறை மற்றும் தொழில்துறை உற்பத்தித்துறை ஆகிய மூன்று முக்கிய பகுதிகளின் கீழ் வகைப்படுத்தப்பட்ட 100 இலங்கை மற்றும் உக்ரைனிய நிறுவனங்கள் இந்த வர்த்தக இணைப்பு அமர்வில் பங்கேற்றன.

உக்ரைனுக்கு சான்றளிக்கப்பட்ட துருக்கிக்கான இலங்கைத் தூதுவர் எம்.ரிஸ்வி ஹசன், இலங்கைக்கான உக்ரைன் தூதுவர் இகோர் பொலிகா மற்றும் பிராந்திய ஒத்துழைப்புக்கான இராஜாங்க அமைச்சின் பணிப்பாளர் நாயகம் திருமதி. சாவித்திரி பானபொக்கே ஆகியோரும் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

பூஸ்டர் தடுப்பூசி செலுத்தியவர்களுக்கு மாத்திரமே கச்சதீவு செல்ல அனுமதியென தீர்மானம்

அருட்தந்தை வசந்தன் அடிகளார் தெரிவிப்பு

(யாழ். நிருபர்)

யாழ். கச்சதீவு அந்தோனியார் ஆலயத்தின் வருடாந்த மகோற்சவம் எதிர்வரும் மார்ச் மாதம் 11ஆம், 12ஆம் திகதிகளில் நடைபெறவுள்ள நிலையில் பூஸ்டர் தடுப்பூசி செலுத்திக்கொண்ட 500 பேருக்கு மட்டுமே அனுமதி வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டிருக்கின்றதென கச்சதீவு தூய அந்தோனியார் ஆலய அருட்தந்தை வசந்தன் அடிகளார் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

கொரோனா பேரிடர் நிலைமை காரணமாக இந்திய பக்தர்களுக்கு இம்முறையும் அனுமதி மறுக்கப்பட்டுள்ளது. இலங்கையைச் சேர்ந்த 500 பேர் மட்டுமே கச்சதீவு திருவிழாவில் பங்கேற்க முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன், திருவிழாவில் பங்கேற்கும் அனைவரும் பூஸ்டர் தடுப்பூசியையும் பெற்றிருக்கவேண்டும் என

தீர்மானிக்கப்பட்டுள்ளது - என்றார்.

கச்சதீவு திருவிழா தொடர்பில் யாழ். மாவட்ட செயலகத்தில் இடம்பெற்ற கூட்டத்திலேயே மேற்கண்டவாறு தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

அளுத்கொடவில் கைக்குண்டு மீட்பு

திக்வெல்ல-அளுத்கொட பிரதேசத்தில் வெளிநாட்டில் தயாரிக்கப்பட்ட கைக்குண்டுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் (27) பிற்பகல் பொலிஸார் முன்னெடுத்த சுற்றிவளைப்பின் போதே குறித்த கைக்குண்டு கைப்பற்றப் பட்டுள்ளது.

இவ்வாறு கண்டுபிடிக்கப்பட்ட கைக்குண்டு SFG வகையைச் சேர்ந்ததெனவும், சந்தேகநபர் நகுலகமுவ பிரதேசத்தை சேர்ந்த 30 வயதுடையவர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

இச்சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை திக்வெல்ல பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.

தபால் சேவைகளை டிஜிட்டல் மயமாக்க துரித நடவடிக்கை

21ஆம் நூற்றாண்டில் செயல் திறன் மிக்க தபால் சேவையை நடைமுறைப்படுத்தும் நோக்கில், தபால் நடவடிக்கைகளை விரிவுபடுத்தி அதன் செயற்பாடுகளை டிஜிட்டல் மயமாக்க எதிர்வரும் சில மாதங்களுக்குள் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என தபால்மா அதிபர் ரஞ்சித் ஆரியரத்ன தெரிவித்துள்ளார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற அஞ்சல் குறியீட்டு விபரக்கொத்து வெளியீட்டு நிகழ்வில் கலந்துகொண்டபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இந்த விபரக்கொத்தில் ஒவ்வொரு அஞ்சல் அலுவலகத்திற்கும், உப அஞ்சல் அலுவலகத்திற்கும், ஒரு குறியீட்டு எண் குறிக்கப்பட்டுள்ளது. இதனூடாக கடிதங்கள் மற்றும் பொருட்களை விநியோகிப்பதில் ஏற்படும் சிரமங்களை தவிர்க்க முடியும் என்றும் அவர் கூறினார்.

இலங்கையில், நாடளாவிய ரீதியில் 654 அஞ்சல் அலுவலகங்களும், 3ஆயிரத்து 410 உப அஞ்சல் அலுவலகங்களும் காணப்படுகின்றன. இந்த அனைத்து அஞ்சல் அலுவலகங்களிலும் கடித பரிமாற்றம் மேற்கொள்ளப்படுவதில்லை. சில அஞ்சல் அலுவலகங்கள் பொருட்களை மாத்திரமே பரிமாற்றம் செய்கின்றன. மேலும் இந்த அஞ்சல் குறியீட்டு விபரக்கொத்து மூலம் முகவரிகளை கண்டுபிடிப்பதில் உள்ள சிரமங்களும் தவிர்க்கப்படும் என்றும் தபால்மா அதிபர் தெரிவித்தார்.

இலங்கையின் 74ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு மன்னார் பிரதான பாலப் பகுதியில் சிரமதானம்

(மன்னார் நகர் நிருபர்)

இலங்கையின் 74ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு நேற்று வெள்ளிக்கிழமை (28) மன்னார் பிரதான பாலத்தின் இரு கடற்கரையோரங்களில் பாரிய சிரமதானப் பணிகள் முன்னெடுக்கப்பட்டன.

இலங்கையின் 74ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு மன்னார் மாவட்டத்தில் மேற்கொள்ளப்படவுள்ள நிகழ்வுகள் தொடர்பாக ஆராயும் கூட்டம் கடந்த வாரம் இடம் பெற்றது.

இதன்போது மன்னார் பிரதான பாலத்தின் இரு கடற்கரையோரங்களிலும் சிரமதானப் பணியை மேற்கொண்டு துய்மையாக்கும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றமை தொடர்பாக தீர்மானிக்கப்பட்டது.

இந்நிலையில், நேற்று வெள்ளிக்கிழமை (28) காலை 7 மணியளவில் மன்னார் மாவட்ட செயலகத்தின் ஏற்பாட்டில், சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனத்தின் (மெசிடோ) உதவியுடன் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ஏ. ஸ்ரான்லி டி மெல் தலைமையில் குறித்த சிரமதான பணிகள் முன்னெடுக்கப்பட்டன.

இதன்போது மன்னார் மாவட்ட உதவி அரசாங்க அதிபர், மன்னார் மாவட்ட அனர்த்த முகாமைத்துவப் பிரிவு, மன்னார் பிரதேச செயலாளர், மாவட்ட செயலகம், மன்னார் பிரதேச செயலகப் பணியாளர்கள், கிராம அலுவலர்கள், சமுர்த்தி அலுவலர்கள், சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனத்தின் பணிப்பாளர் ஜோட்சன் பிகிராடோ, பணியாளர்கள் மற்றும் இராணுவத்தினர் சிரமதான பணியில் ஈடுபட்டனர்.

குறித்த பகுதியில் சேகரிக்கப்பட்ட அதிகளவான கழிவுப்பொருட்கள் மன்னார் நகர சபையின் உதவியுடன் அகற்றப்பட்டுள்ளன.

பேருவளை அல்- பாஸியத்துல் நஸ்ரியா ஆண்கள் கல்லூரியின் ஆய்வுகூடம் திறப்பு

பேருவளை அல்- பாஸியத்துல் நஸ்ரியா முஸ்லிம் ஆண்கள் கல்லூரியின் ஆய்வுகூடம் அண்மையில் ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் இம்தியாஸ் பாக்கிர் மாக்காரின் பன்முகப்படுத்தப்பட்ட நிதியொதுக்கீட்டின் கீழ் 04 இலட்சம் ரூபா செலவில் புனரமைக்கப்பட்டு மாணவர்களின் பாவனைக்காக கடந்த 25ஆம் திகதி கையளிக்கப்பட்டது.

அபிவிருத்தித் திட்டங்களை ஆரம்பிப்பதும் அல்லது திறப்பதும் என்பது முற்றிலும் அரசியல் இலாபத்திற்காகவே என்ற பொதுவான கருத்து மக்கள் மத்தியில் இருந்தபோதிலும், இந்த நிகழ்ச்சித் திட்டம் முற்றிலும் மாறுபட்ட வடிவத்தைப் பெற்றிருந்தது சிறப்பம்சமாகும். பல்வேறு கருத்தியலைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பல அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் இதில் கலந்து கொண்டமையே இதற்கு பிரதான காரணமாகும்.

இந் நிகழ்வில், நாடாளுமன்ற உறுப்பினர் இம்தியாஸ் பாக்கிர் மாக்கார் உரையாற்றும்போது,

"இன்று நான் இந்த வாய்ப்பை சர்வக் கட்சிகளின் மாநாடாகவே பார்க்கிறேன். அனைத்து அரசியல் கட்சிகளையும் பிரதிநிதித்துவப்படுத்தும் பிரதிநிதிகளும் இதில் கலந்துகொள்வது மகிழ்ச்சியளிக்கிறது.

மரியாதையும் புகழும் மூங்கில் போன்றது என தலைமை தேரர் ஒருவர் கூறிய வசனம் தற்போது எனக்கு நினைவுக்கு வருகிறது. கடமைகளை சரிவர நிறைவேற்றுவது மிக முக்கியமான பணியாகும். இஸ்லாத்தில் குறிப்பிடுவது போன்று இறைவனுக்கு மிக நெருங்கிய மனிதர் சமூகத்திற்கு நன்மையை ஏற்படுத்தக் கூடியவர் என்பதாகும்" எனத் தெரிவித்தார்.

UK Newspapers Vibe Community



தமிழகத்தில் நேற்றுமுதல் இரவு ஊரடங்கு இரத்து; அனைத்து வழிபாட்டுத் தலங்களிலும் அனுமதி

பெப். முதலாம் திகதிமுதல் பாடசாலைகளை திறக்குமாறும் மாநில அரசு உத்தரவு

தமிழகத்தில் நேற்றுமுதல் இரவுநேர மற்றும் ஞாயிறுக்கிழமை ஊரடங்கு இரத்துச்செய்யப்படுவதாகவும், பெப்ரவரி முதலாம் திகதியிலிருந்து பாடசாலைகள், கல்லூரிகள் திறக்கப்படுவதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

தமிழகத்தில் கடந்த சில நாட்களாக தினசரி கொரோனா பாதிப்பு குறைந்து வரும் நிலையில், கூடுதல் தளர்வுகளுடன் புதிய வழிகாட்டல் நெறிமுறைகளை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அறிவித்துள்ளார்.

அதன்படி, அனைத்து பாடசாலைகளிலும் முதலாம் வகுப்புமுதல் 12ஆம் வகுப்புகள் வரை மாணவர்களுக்கு நேரடி வகுப்புகள் நடத்தப்படும். தற்போது கொரோனா பாதுகாப்பு மையங்களாக செயல்படும் கல்லூரிகளை தவிர்த்து, ஏனைய அரச மற்றும் தனியார் பல்கலைக்கழகங்கள், கல்லூரிகள், தொழிற்பயிற்சி மற்றும் பயிற்சி நிலையங்கள் பெப்ரவரி முதலாம் திகதிமுதல் செயல் படவும் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

இதற்கான உரிய முன்னேற்பாடுகளை சம்பந்தப்பட்ட கல்வி நிறுவனங்கள் மேற்கொள்ள கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. மேலும், இன்றுமுதல் இரவு 10 மணிமுதல் காலை 5 மணிவரையிலான இரவுநேர ஊரடங்கு மற்றும் எதிர்வரும் 30ஆம் திகதியான ஞாயிற்றுக்கிழமை முழு ஊரடங்கு கிடையாது எனவும் அரசு அறிவித்துள்ளது.

தமிழகத்தில் நேற்று முதல் அனைத்து வழிபாட்டுத்தலங்களிலும் பக்தர்களுக்கு அனுமதி வழங்கி முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் உத்தரவிட்டுள்ளார்.

கொரோனா தடுப்பு நடவடிக்கையாக வெள்ளி, சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் கோயில்களில் சாமி தரிசனத்திற்கு தடை விதிக்கப்பட்டிருந்தது. அந்தத் தடையை நீக்கி தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது. தேவாலயங்கள், மசூதிகள் போன்ற வழிபாட்டுத்தலங்களிலும் வார இறுதி நாட்களில் மக்களுக்கு விதிக்கப்பட்டிருந்த தடை இரத்துச்செய்யப்பட்டுள்ளது.

மலாவியில் கடும் புயல்காற்றினால் சேதமடைந்த தமது வீட்டை பெண்ணொருவர் பார்வையிடுகிறார்.

பிரான்ஸில் பரிஸ் அழகுக்கலை கண்காட்சியின் ஓரங்கமாக இடம்பெற்ற அணிவகுப்பு நிகழ்வு.

ரஷ்யாவில் கொரோனா தொற்று வேகமாக பரவும் நிலையில், பாதுகாப்பாக முகக்கவசம் அணிந்துசெல்லும் நபர்.

இஸ்ரேலில் முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு பனிப்பொழிவு அதிகரித்துள்ளது. இதன் காரணமாக பாடசாலைகள் உள்ளிட்ட பல்வேறு அரச நிறுவனங்கள் மூடப்பட்டுள்ளன.

உலக செய்திகள்

வான்வெளியில் சுழலும் அசாதாரண பொருள்

வான்வெளியிலுள்ள பால்வீதியில் சுழலும் அசாதாரண பொருள் ஒன்றை அவுஸ்திரேலிய விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர். சூரிய மண்டலத்தை உள்ளடக்கிய பால்வீதி என்றழைக்கப்படுகிறது. இதனை வெறும் கண்களால் பார்க்கும்போது அதிலுள்ள நட்சத்திரங்களை தனித்தனியாக வேறுபடுத்திப் பார்க்க முடியாது என்பதால் இது இரவு வானில் ஒரு வெண் ஒளிப்பட்டை போன்று தோற்றமளிக்கும். பல்வேறு வானிலை அறிஞர்கள் பால்வெளி குறித்த ஆய்வுகளை மேற்கொண்டுள்ள நிலையில், அந்த பகுதியில் சுழன்றுகொண்டிருக்கும் ஒளிரும் பொருள் ஒன்றை அவுஸ்திரேலிய விஞ்ஞானிகள் கண்டறிந்துள்ளனர்.

மேற்கு அவுஸ்திரேலியாவிலுள்ள ஆய்வு மையத்திலிருந்து நவீன தொலைநோக்கி தொழில்நுட்பத்தை பயன்படுத்தி கண்டறிந்து ஆய்வாளர்கள் பதிவுசெய்துள்ளனர்.

பால்வீதியில் கண்டறியப்பட்டுள்ள இந்த சுழலும் பொருள் புமியிலிருந்து 4 ஆயிரம் ஒளி ஆண்டுகள் தொலைவில் உள்ளது. நம்பமுடியாத அளவிற்கு பிரகாசமான இந்தப் பொருள் மிகவும் ஆற்றல் மிக்க காந்த புலத்தைக் கொண்டுள்ளதாக வானிலை ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர். பால்வீதியில் கண்டுபிடிக்கப்பட்டுள்ள சுழலும் புதிய பொருள் குறித்த ஆய்வுகளை அவுஸ்திரேலிய விண்வெளி நிபுணர்கள் தீவிரப்படுத்தியுள்ளனர்.

2.4 பில்லியன் யூரோ ஏலத்தில் கிம் கார்டஷியனின் ஆடை!

அமெரிக்க மொடல் அழகி கிம் கார்டஷியனின் ஆடை 2.4 பில்லியன் யூரோவுக்கு ஏலத்தில் விற்பனையாகவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கார்டஷியனுக்கென பிரத்தியேகமாக வடிவமைக்கப்பட்ட ஆடைகள் மிகப் பிரசித்திபெற்றவை. அவற்றை பெற்றுக்கொள்வதற்காக ரசிகர்கள் கூட்டம் முந்திக்கொள்வதுண்டு.

அந்தவகையில் அவரால் அணியப்பட்ட உள்ளாடையை 2.4 பில்லியன் யூரோவுக்கு பெற்றுக்கொள்ள பிரபல நிறுவனமொன்று முன்வந்துள்ளது.

அமெரிக்காவில் குற்றவாளிக்கு விஷ ஊசி செலுத்தி மரணதண்டனை

அமெரிக்காவில் இருவரை கொலைசெய்த வழக்கில், குற்றவாளிக்கு அமெரிக்கா சட்டப்படி விஷ ஊசி செலுத்தி மரணதண்டனை விதிக்கப்பட்டது.

அமெரிக்காவின் ஒக்கலஹாமா மாகாணத்தைச் சேர்ந்த டொனால்ட் கிராண்ட் (25) என்ற இளைஞர், தனது காதலி வழக்கொன்றில் சிக்கி சிறையில் அடைக்கப்பட்டதால், அவரை பிணையில் எடுக்க பணம் தேவை என்பதால், 2001ஆம் ஆண்டு ஹோட்டல் ஒன்றிற்குள் புகுந்து கொள்ளையடிக்க முயன்றார்.

இதில் ஏற்பட்ட மோதலில் இருவரை கொலை செய்தார். அதன் பின்னர் அவர் கைதுசெய்யப்பட்டார். இவர் மீதான வழக்கில் குற்றம் நிரூபிக்கப்பட்டு 2005ஆம் ஆண்டு மரணதண்டனை விதிக்கப்பட்டது.

தண்டனையை குறைக்கக் கோரி பல முறை மனுக்கள் தாக்கல் செய்தும் தள்ளுபடியானது. இதையடுத்து நேற்று முன்தினம் அமெரிக்க சட்டப்படி குற்றவாளி டொனால்ட் கிராண்ட்டிற்கு விஷ ஊசி செலுத்தி மரணதண்டனை விதிக்கப்பட்டதாக அதிகாரிகள் தெரிவித்தனர். இதன்மூலம் அமெரிக்காவில் இவ்வாண்டில் முதல் மரணதண்டனை நிறைவேற்றப்பட்டதாக கூறப்படுகிறது.

பயங்கரவாதத் தாக்குதலில் 10 இராணுவ வீரர்கள் பலி!

பாகிஸ்தானில் சம்பவம்

பாகிஸ்தானின் பலுகிஸ்தான் மாகாணத்தில் பயங்கரவாதிகள் நடத்திய தாக்குதலில் 10 இராணுவ வீரர்கள் பலியாகியுள்ளனர்.

பாகிஸ்தானில் பயங்கரவாதக் குழுக்களின் ஆதிக்கம் அதிகம் உள்ள மாகாணமாக பலுகிஸ்தான் உள்ளது. இந்த மாகாணத்தின் கெச் மாவட்டத்திலுள்ள சோதனைச்சாவடிக்கு வந்த பங்கரவாதிகள் பாதுகாப்புப் படை வீரர்களை நோக்கி சரமாரியாக தாக்குதல் நடத்தினர். இந்தத் திடீர் தாக்குதலை சற்றும் எதிர்பாராத பாதுகாப்புப் படையினர், சுதாரித்துக்கொண்டு பதில் தாக்குதல் நடத்தினர். இரு தரப்புக்குமிடையே நடந்த மோதலில் பாதுகாப்புப் பணியில் இருந்த 10 இராணுவ வீரர்கள் உயிரிழந்தனர்.

இதேவேளை, இராணுவ வீரர்கள் பலர் படுகாயங்களுடன் இராணுவ மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். பயங்கரவாதிகளின் தரப்பில் ஒருவர் உயிரிழந்த நிலையில், 3 பேர் உயிருடன் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

ஹோண்டுராஸ் நாட்டுக்கு புதிய பெண் ஜனாதிபதி

மத்திய அமெரிக்க நாடுகளில் ஒன்றான ஹோண்டுராஸ் நாட்டின் முதல் பெண் ஜனாதிபதியாக லியோமாரா கெஸ்ட்ரோ பதவியேற்றுக்கொண்டுள்ளார். இந்த பதவியேற்பு வைபவத்தில் அமெரிக்க துணை ஜனாதிபதி கமலா ஹாரிஸ் பங்கேற்றார்.

பதவியேற்பு நிகழ்வில் உரைநிகழ்த்திய கெஸ்ட்ரோ, நாட்டின் கடன் சுமையை இல்லாதொழிப்பதாக தெரிவித்தார். ஹோண்டுராஸ் நாட்டின் உறவுகளை வலுப்படுத்தும் முயற்சியில் தாய்வான் துணை ஜனாதிபதி வில்லியம் லாய் பதவியேற்பு விழாவில் கலந்துகொண்டமையும் குறிப்பிடத்தக்கது.

LK Newspapers Whatsapp Community

Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7